Registered as a News Paper

பொழிவு - 15
குவிப்பு - 04
பக்கங்கள்- 16
விலை ரூபா 40.00
ஏப்ரல் 2012
(ISSN 1800-2641)


# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Centre, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789/ 023 - 3233276 / 0777420811 Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.

# மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் உண்மைகள் ஏற்கப்பட்டு பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்பட வேண்டும்

## ஜெனிவாவில் உள்ள ஐ. நா. மனித உரிமை பேரவைக்கு மன்னார் ஆயர் தலைமையிலான 31 கத்தோலிக்க குருக்கள் கடிதம்



மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை உள்ளிட்ட 31 கத்தோலிக்க குருக்கள் கையெழுத்திட்ட கடிதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவைத் தலைவருக்கும் அந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக்குழு அளித்த பரிந்துரைகள் காலவரம்பு நிர்ணயிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும், அது தொடர்பில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் வரும் காலத்தில் ஐ. நா. மனித உரிமைப் பேரவைக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும், போரில் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு தரப்பட வேண்டும், மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் உண்மைகள் ஏற்கப்பட்டு பொறுப்புக்கூறல் உறுதிசெய்யப்பட வேண்டும். அப்படி செய்தால்தான் இந்த நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட் வாய்ப்பு உண்டு என்று இக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

அதேநேரம் இந்தக் கடிதத்தில் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்கள் ஒட்டுமொத்த திருச்சபையின் கருத்து அல்ல என்றும் இது கையெழுத்திட்டவர்களின் கருத்து என்றும் ஆயர் யோசேப்பு ஆண்டகை பி.பி.சி தமிழோசைக்கு அளித்த செவ்வியில் தெரிவித்திருந்தார்.

இப்பிரச்சினை தொடர்பாக ஆயர் மன்றத்தில் இதுவரை விவாதிக்கப்பட்டு நிலைப்பாடு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும், எனவே இது தொடர்பாக கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை கூறிய கருத்துக்கள் அவருடைய தனிப்பட்ட கருத்தாகவே கருதப்பட வேண்டும் என்றும் ஆயர் அவர்கள் மேலும் கூறினார்.

## வங்காலையில் கல்வாரிக் காவியம்



வங்காலை புனித ஆனாள் ஆலய அருட்பணிப் பேரவையின் முயற்சியில் வங்காலை பங்கு மக்கள் இணைந்து நடாத்திய 'கல்வாரிக் காவியம்' என்ற பெயரிலான இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி கடந்த மார்ச் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை வங்காலை ஆலய முன்றலில் அரங்கேற்றப்பட்டது. பல ஆயிரக்கணக்கான மக்கள் மன்னார் மறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இத்திருநிகழ்வைக் காண வருகை தந்திருந்தனர்.

வங்காலை பங்குத்தந்தை அருட்பணி. ஜெயபாலன் குருஸ் அடிகளாரும், உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. தவராஜா அவர்களும் இந்தத் திருப்பாடுகளின் காட்சி அரங்கேற்றத்திற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தனர்.

## தென்னிலங்கையில் உள்ள கடும் போக்காளர்கள் சீற்றம்!

இலங்கையின் மனித உரிமை மீறல் தொடர்பாக ஐ. நா. மனித உரிமைப் பேரவைக்கு கடிதம் எழுதியுள்ள மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை உள்ளிட்ட 31 குருக்களும் நாட்டின் இறைமைக்கு சவால் விடுத்திருப்பதாகவும் அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான உதய சம்மன் பில தெரிவித்துள்ளார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## அச்சுறுத்தல் குறித்து ஐ.நா.வுக்கு முறைப்பாடு!

இலங்கைச் சூழல் குறித்து ஐ. நா. மனித உரிமைப் பேரவைக்கு கடிதம் எழுதிய மன்னார் ஆயர் ஊடகங்கள் மற்றும் இலங்கை அரசில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளின் அச்சுறுத்தலுக்குள்ளாவது குறித்து தாம் கவலையடைவதாகத் தென்னிலங்கையைச் சேர்ந்த கத்தோலிக்க குருக்கள், பொதுநிலையினர், அங்கிலிகன் குருக்கள் உள்ளிட்ட அறுபதுக்கும் மேற்பட்டோர் ஐ.நா.வுக்கு எழுதிய கடிதத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## மன்னார் மாவட்ட தலைமை இந்துக் குரு மனோகர சர்மா குருக்கள் காலமானார்



மன்னார் மாவட்ட தலைமை இந்துக் குருவான சிவஸ்ரீ சபாரெட்னம் மனோகர சர்மா குருக்கள் (வயது 60) கடந்த மார்ச் மாதம் 14ஆம் திகதி இலண்டனில் திடீர் மாரடைப்பால் காலமானார்.

ஆன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த மார்ச் மாதம் 23ஆம் திகதி மன்னார் உப்புக்குளத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் இனமத ஒற்றுமைக்காக உழைத்து அனைத்து மக்களின் அன்பையும் அபிமானத்தையும் பெற்ற குருக்களின் திடீர் மறைவு மன்னார் மக்கள் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது. ஆன்னாரின் குடும்பத்தினருக்கும் இந்து சமய சகோதரர்களுக்கும் மன்னார் ஆயர், குருக்கள், இறைமக்களின் ஆழ்ந்த அனுதாபங்களை மன்னா தெரிவித்து நிற்கின்றது. அன்னாரின் ஆன்மா அமைதி அடைவதாக!

## தமிழ் அரசியல் தலைவர்கள், மன்னார் தமிழ் அமைப்புக்கள் ஆயருக்கு ஆதரவு

மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையின் கருத்துரைக்கும் சுதந்திரத்தை தென் இலங்கை கட்டுப்படுத்த நினைப்பதையும் அவர் தென்னிலங்கை கடும் போக்காளர்களால் விமர்சனத்திற்கும் அச்சுறுத்தல் - களுக்கும் உள்ளாவதையும் ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று தமிழ் அரசியல் தலைவர்களும் மன்னார் அமைப்புக்களும் தத்தமது அறிக்கைகளில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ் கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்-களான கேளரவ செல்வம் அடைக்கலநாதன், கௌரவ வினோ நோகராதலிங்கம், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சி. ஸ்ரீதரன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சீ. யோகேஸ்வன் ஆகியோரும் மற்றும் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியமும் ஆயரின் நிலைப்பாட்டை ஆதரித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

## கச்சதீவு திருவிழாவில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா கடந்த மார்ச் 4ம் திகதி நடைபெற்றது. இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையே நட்புறவையேற்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்தத் திருவிழாவுக்கான ஏற்பாடுகளை இலங்கைக் கடற்படையினரின் மேற்கொண்டிருந்தனர்.

இந்தத் திருவிழாவில் இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்ட-தோடு நூற்றுக்கும் மேற்பட்ட அருட்தந்தையர்களும் கலந்து கொண்டனர். கச்சதீவு வரும் பக்தர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் உணவு, குடிநீர் வசதிகளை இலங்கை கடற்படையினர் மேற்கொண்டிருந்தனர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)



வாழ்வது ஒருமுறை
வாழ்த்தட்டும்
தலைமுறை




## அருட்தந்தை சிறிதரன் இறைபதம்



திருமலை மட்டுநகர் மறைமாவட்டக் குரு அருட்தந்தை சிறிதரன் சில்வெஸ்ரர் (வயது 49) கடந்த மார்ச் 7ஆம் திகதி இறைபதமடைந்தார். இவர் திருமலை மட்டுநகர் மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளராக இருந்தவேளையிலேயே யாரும் எதிர்பாராத நிலையில் மாரடைப்பால் காலமானார்.

இவர் 1998ம் ஆண்டு தொடக்கம் 13 வருட காலங்களாக கிழக்கிலங்கை கத்தோலிக்க திருச்சபையின் சமூகப்பணி மையமாகிய கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் இயக்குனராக சிறப்பாகப் பணியாற்றி கிழக்கிலங்கையின் அனைத்து சமூக மக்களின் நன்மதிப்பையும், அபிமானத்தையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## மன்னா வாசகர்களே! எம்மோடு ஒத்துழையுங்கள்!

மன்னா பத்திரிகையை நேரடியாக விநியோகஸ்தர்களிடமிருந்து பெறுவோரும், தபால் மூலம் பத்திரிகையைப் பெறும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரரும் மன்னாவுக்குரிய உங்கள் பணத்தை உடனடியாகச் செலுத்தி எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## உண்மைகள் உறங்குவதில்லை

*உண்மைக்கு சாட்சியம் பகரவேண்டிய திருச்சபைத் தலைவர்கள் முற்றுமுழுதாக மக்களோடு தொடர்புடைய பிரச்சினைகள் மட்டில் 'பேசா மடந்தைகளாக' மௌனம் சாதிப்பது மக்களுக்கு - குறிப்பாக கத்தோலிக்க இறைமக்களுக்கு - ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. அவர்களது மௌனம் தொடர்பாக சம்மந்தப் - பட்டவர்களிடம் கருத்துக்கேட்டால் அவர்கள் வழக்கமாகத் தரும் பதில் "முக்கிய விடயங்களில் அவதானமாக, விவேகமாக நடந்துகொள்ளவேண்டும்" என்பதாகும். மற்றொரு வகையில் சொல்லப்போனால், தந்திரமாக - சாதுரியமாக (Diplomatic) நடந்துகொள்ள வேண்டும் என்பதாகும்.*

*இங்கே ஒன்றை நாம் நினைவில்கொள்ள வேண்டும். அதாவது இயேசு அவதானமாக, விவேகமாக, தந்திரமாக, சாதுரியமாக நடந்திருந்தால் 33 வயதில் ஒரு பயங்கர சிலுவைச் சாவை சந்தித்திருக்கமாட்டார். இயேசு 'இறந்தார்' என்பதைவிட 'படுகொலை செய்யப்பட்டார்' (Assasinated) என்பதே உண்மையாகும். இயேசு உண்மையை எடுத்துச் சொன்னபோது அதை ஜீரணிக்க அன்றைய யூத மதத்தலைவர்களால் முடியவில்லை. எனவே உண்மையை ஏற்றுக்கொள்ளத் திராணியற்றவர்கள் இயேசுவைத் தீர்த்துக்கட்ட தீர்மானிக்கின்றார்கள்.*

### கவலையளிக்கும் கர்தினாலின் நிலைப்பாடு

*கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் அவர்கள் ஜெனிவா விடயம் தொடர்பாக அரசாங்கத்தை 'சாந்திப்படுத்தும்' அல்லது 'மகிழ்ச்சிப்படுத்தும்' வகையில் கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.*

*"அமெரிக்காவின் பிரேரணையும் அதனை மேற்கத்திய நாடுகள் ஆதரிக்கின்றமையும் எம் நாட்டின் சுதந்திரத்திற்கும் சுயமரியாதைக்கும் விடப்படுகின்ற சவாலாகவும் மற்றும் எமது நாட்டின் அறிவாற்றலை குறைத்து மதிப்பிடுவதாகவும் இதனைப் பார்க்கின்றோம்" என அவர் கூறியிருப்பது தமிழ் கத்தோலிக்கரிடையே அதிருப்தியையும் கவலையையும் ஏற்படுத்தி உள்ளது.*

*மிக மோசமாக மனிதப் பேரவலங்களை சந்தித்த தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என் சர்வதேச சமூகம் முயற்சிக்கும் வேளையில் கர்தினாலின் இந்தக் கருத்து தமிழ் மக்களின் உணர்வுகள்ள சற்றேனும் கவனத்தில் எடுக்காத கருத்தாகவே பார்க்கப்படுகின்றது.*

*மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கம் பொறுப்புக்கூறவேண்டும் என்ற உண்மையை அவர் சொல்ல முடியாவிட்டால் அல்லது சொல்லப் பயந்தால் அவர் அமைதியாகவாவது இருந்திருக்கலாம். எதற்காக அரசாங்கத்தையும், பேரினவாதிகளையும் திருப்திப்படுத்தும் வகையில் கருத்துரைக்கவேண்டும்? என்ற கேள்வி பல திசைகளிலும் இருந்து எழுகின்றது.*

### ஆறுதல் அளிக்கும் தீர்மானம்

*இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானம் வெற்றிபெற்றமையானது உண்மைக்குத் கிடைத்த வெற்றியாகவே தமிழ் மக்களால் பார்க்கப்படுகின்றது. இரத்தமும் சதையுமாக தம் கண் முன்னால் துடிக்கத் துடிக்க தம் அன்புக்குரியவர்கள் இறந்ததை, உடல்களை அடக்கம்செய்யக்கூட அவகாசம் இல்லாமல் உயிர்தப்பி ஓடிவந்ததை அந்த மக்களால் எப்படி மறக்க முடியும்? தம் இறுதிக் கணங்களை மிக அருகில் கண்டு திரும்பிய மறுபிறவிக்குரிய அதிசயங்களாக உயிர் சுமந்து திரியும் ஊமை மனிதர்கள் இன்றும் நம் மத்தியில் உள்ளனர். இவர்கள் உண்மையின் சாட்சியங்களாக நம் முன்னே உலாவருகின்றனர். மனதாலும் உடலாலும் காயம் பட்ட இந்த மக்களுக்கு இத்தீர்மானம் ஆறுதலைக் கொண்டுவந்திருக்கின்றது.*

*உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை. அவை உறங்குவதைப்போல் தெரியலாம். ஆனால் அந்த உண்மைகள் ஒருநாள் உயிர்பெற்று எழும். இதுதான் உலக வரலாறு திரும்பத் திரும்ப நமக்குச் சொல்லும் உண்மை. உண்மையை எடுத்துக்கூற நாம் மறுக்கலாம், உண்மைக்கு மாறான கருத்துக்களை நாம் முன்வைக்கலாம். ஆனால் உண்மைகள் உறங்குவதில்லை.*

***மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை***
***அன்புடன், அருட்பணியாளர் தமிழ் நேசன்,***
***பதிப்பாசிரியர் - மன்னா***



# வாசகர் எண்ணங்கள்

## இலட்சியப் பயணம் தொடரட்டும்!

அன்பு மன்னாவே, எம் துயரங்களைப் போக்க நீ வழிசொல்கிறாய். வழிதவறும் நவீன உலகில் வழித்தடம் மாறாமல் நாம் பயணிக்க நல்ல அறிவுரை கூறுகின்றாய். உன் இலட்சியப் பயணம் எல்லாத்திசையிலும் தொடர்ந்திட வாழ்த்துகிறேன். மண்ணுலகெங்கும் நீ மணம் வீசிட, வெற்றிகள் பல பெற்று விந்தை புரிந்திட மனநிறைவுடன் வாழ்த்துகின்றேன்.

*- பி. மதுஷாளினி, மடுக்கோயில்.*

## ஆக்கங்கள் அத்தனையும் நன்று!

"கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரமா?" என்ற தங்கள் ஆசிரிய தலையங்கம் பொருத்தமான ஓர் எண்ணமாகும். அருட்திரு. அலெக்ஸ் ஜானக பொண்டோ அடிகளாரின் "மன்னார் மறைமாவட்டத்தில் மகத்தான என் அனுபவம்" என்ற பயன்மிகு அனுபவப் பகிர்வு மிக மிக நன்று. இவ்வனுபவப் பகிர்வை அவர் மெசன்ஞர், ஞானப்பிரதிபாய ஆகிய ஆங்கில மற்றும் சிங்கள கத்தோலிக்க பத்திரிகைகளில் பிரசுரிக்க முன்வருவாரா?

இ. பற்றிசியா பீரிஸ் அவர்கள் எழுதிய 'தேற்றம்' என்ற கவிதை தேனாய் இனித்தது. அவர் முயற்சி மேலும் மேலும் விரிந்து பரந்து பயணிப்பதாக!

அருட்திரு. அன்புராசா அவர்களின் 'அதிர்வுககள்' என்ற தொடரில் அவர் புலம்பெயர் தமிழர்கள் தங்களை அடையாளப்படுத்தும் தனித்தன்மையான பண்புகளை இயல்பாக, இங்கிதமாக, நகைச்சுவை ததும்ப புட்டுப் புட்டு வைத்திருந்தார். அவருக்கு எனது பாராட்டுக்கள்!

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயர்கள் பற்றிய செய்தியும் தேனாய் இனித்தது. அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் தந்தால் பலரும் பயன்பெறுவர் என நினைக்கின்றேன். இன்னும் எழுத ஆசை. விரிவஞ்சி விடுகின்றேன். தொடரும் காலத்திலும் இதுபோன்ற பயனுள்ள ஆக்கங்களைத் தரவேண்டுமென ஆசித்து வாழ்த்துக் கூறுகின்றேன்.

*யோ. சே. நவரெத்தினராசா, உயிலங்குளம*

## என்னை வளர்த்த உன்னை மறவேன்!

என் உள்ளம் கவர்ந்த மன்னாவே, என் இதயத்தில் வாசம் செய்து, என் உள்ளத்தில் உள்ள உணர்வுகளை வெளிக்கொணர்ந்து என்னை உற்சாகப்படுத்தி, மற்றவர்களும் என்னுடைய திறமைகளை அறிய உதவும் என் இனிய மன்னாவே! என்னை வளர்த்த உன்னை என் உயிர் பிரிந்தாலும் மறவேன். வாழ்க உன் பணி என வாழ்த்துகிறேன்.

*தே. நிதர்ஷினி, கீரி, மன்னார்.*

## காகிதம் பேசிட வைத்தாய்!

மண்ணுலகின் மீதினிலே தமிழறிந்த தேசமெல்லாம்
மன்னவரின் புகழுரையைப் பரப்பும் மன்னாவே!
உன்னை நாம் வாழ்த்துகின்றோம்.
மணி மொழிகளை கண்கவர் வண்ணங்களில் பொறித்து
காதிதம் பேசிட வைத்தாய் எம் கைகளிலே!
மன்னாரிலே தேன் கானம் பாடி - எம்மை
எண்ணில்லா இன்பக் கடலில் மூழ்க வைக்கின்றாய்.
இன்று நாம் புதிதாய் பிறந்தோம் என்ற
எண்ணமதை திண்ணமுற கொண்டுவருகின்றாய்.
எம் நினைவலைகளில் உன்னையே சுமக்கச் செய்தாய்.
அருமையுறு பொருள் விளக்கங்களை அள்ளித் தந்தாய்.
வாழ்வளிக்கும் வார்த்தைகளைக் கற்றுத் தந்தாய்.
மனமார வாழ்த்துகின்றோம் உன்னை! நீடுழி வாழ்க!

*அ. ஸ்டெலா மேரி, துட்டுவாகை, நேரியகுளம்.*

## மாணவர் பகுதி பயனுள்ளது!

என் அன்பு மன்னாவே! நீ சுமந்து வரும்அத்தனை ஆக்கங்களும் இனிமையிலும் இனிமை. எம் போன்ற மாணவர்களுக்கு மாணவர் பகுதி மிகவும் பயனுள்ளது. ஒவ்வொரு மாதத்திலும் காலத்திற்கு ஏற்ற பயனுள்ள கட்டுரைகளைத் தந்து எம் ஆன்மீக அறிவை வளம்பெறச் செய்கின்றாய். உன் சேவை உலகமெல்லாம் சிறந்து விளங்க இப்பாரிலே உன் புகழ் பரந்திட வாழ்த்துகின்றேன்.

*அ. நிறோஜினி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், முருங்கன்*

# மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி – 2012

### வைகாசி

01 - தூய தோமையார் விழா - குமானாயான்குளம்.
- இறை இரக்கப் பெருவிழா - தொழிலாழர்களின் பாதுகாவலர் தூய சூசையப்பர் விழா
- கற்கிடந்த குளம், வேப்பங்குளம், அச்சங்குளம், சேமமடுக்குளம், புதுக்கமம்.

03 - திருச்சிலுவை விழா - கள்ளியகட்டைக்காடு
06 - தேசிய பொதுநிலையினர் தினம்
10 - தூய செபமாலை அன்னை - பிச்சகுளம்
11 - நல்லாயன் அருட்சகோதரிகளின் விழா
13 - அன்னை வேளாங்கண்ணித் திருவிழா - தேத்தாவாடி மருதங்குளம்
15 - ஆரோக்கிய அன்னை திருவிழா - களிமோட்டை, டிலாசால் அருட்சகோதரர்களின் விழா
19 - தூய பூண்டி அன்னை விழா - எமில்நகர்
20 - தூய சவேரியார் திருவிழா - செட்டியார் மகன் கட்டையடம்பன், தேவன்பிட்டி, சின்னப்பண்டிவிரிச்சான், சுண்டிக்குழி, ஒலிமடு.
21 - தூய யூதாததேயு திருவிழா - ஒலிமடு
26 - தூய பிலிப்பு நேரியார் திருவிழா - ஆத்திக்குளி, கொன்னையன் குடியிருப்பு, இசைமாலைத்தாழ்வு, கன்னாட்டி.
27 - மன்னார் மறைமாவட்ட அன்பிய வாரம் ஆரம்பம்
- தூய ஆவி விழா - காணிக்கைகள் ஆயர் இல்லதிற்கு அனுப்பிவைக்கப்படும்.

30 - தூய நீற்றம்மா திருவிழா - உமநகரி
- தூய செபமாலை அன்னை திருவிழா - மழுவராயர் கட்டையடம்பன்

31 - தூய புதுமை மாதா திருவிழா - கரஞ்சூரல்

## உண்மை உறைக்கும் கமிலஸ்



(நன்றி - தி. மெசஞ்சர்)

## ஆயரை விமர்சிக்க உரிமை இல்லை!

கடந்த 30 வருடங்களுக்கு மேலான கொடுமையான யுத்த காலத்திலும், அதன் பின்னரும் எமக்கு நடைபெறுகின்ற அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதில் எம் மறைமாவட்ட ஆயரும் குருக்களும் சிறப்பாகச் செயற்பட்டனர் என்பதை நாம் மறக்க முடியாது.

அநீதியை எதிர்த்து இன, மதம் பாராது குரல் கொடுப்பவர்களுக்கு இவ்வாறு விமர்சனம் வருவது சகஜமான விடயம். இதனால்தான் நாம் பல குருக்களை இழந்திருக்கிறோம்.

தமக்கு முன் நடைபெறுகின்ற இவ்வாறான அநீதிகளை வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தால் அவர்கள் உண்மையான யேசுவின் சீடர்களாக இருக்க முடியாது. இதனடிப்படையில் நீதிக்காகக் குரல் கொடுத்து நீதிக்காகப் போராடும் எம் மறைமாவட்ட ஆயரையும், குருக்களையும் விமர்சிப்பவர்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

"உம்மைப் பாதுகாக்கும்படி கடவுள் தம் தூதருக்கு உம்மைக் குறித்துக் கட்டளை இடுவார்." (லூக்கா 4:10)

**எ. டெலிஸ்ரன் நிஷாந், தலைவர், மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத்து உறவுகளை மீளக் கண்டுபிடிக்கவும் தொப்புள் கொடி உறவை புதுப்பிக்கவுமே வந்துள்ளோம்

## – கச்சதீவில் தமிழக அருட்தந்தை –

தொலைந்துபோன ஈழத்து உறவுகளைக் கண்டுபிடிக்கவும் இரு நாட்டு மீனவர்களது உறவுகளை இணைக்கவும், தொப்புள் கொடி உறவை புதுப்பிக்கவுமே இன்று நாம் இணைந்துள்ளோம் என தமிழக அருட்தந்தை தெரிவித்தார். கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நடைபெற்றபோது அங்கு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அங்கு அவர் உரையாற்றுகையில் கூறியதாவது.

இலங்கையில் அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அதேபோல் பல நாடுகளில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இத்தகைய இடங்களில் மனித நேயம் மரணித்துள்ளது. இதனை நாங்கள் உயிர்ப்பிக்க வேண்டும். தொலைந்துபோன மனிதத்தை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

2004 ஆம் ஆண்டு சுனாமி பேரழிவினால் இந்தியா, இலங்கை, இந்தோனேசியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட தாக்கங்களைக் கண்டு கொண்டோம். இந்தப் பேரழிவின் தாக்கத்தினால் ஏற்பட்ட சோதனைகள் இழப்புக்களுக்கு பல நாடுகளில் இருந்தும் மொழிகள், மதங்கள், இனங்கள் என்பவற்றைக் கடந்து பல உதவிகள் வந்துசேர்ந்தன. காயங்களுக்கு மருந்து கட்டியவர்கள், தண்ணீர் தந்தவர்கள், இருப்பதற்கு கூரை தந்தவர்கள் எனப் பலரும் உதவிசெய்தனர். இவற்றைத் தந்தவர்கள் யார்? இவர்கள் சொந்தங்கள் இல்லை. முகம் தெரியாதவர்கள். இங்கு எவ்வாறு மனிதநேயம் உருவாகியுள்ளது என்பதை நாம் அவதானிக்க வேண்டும். இங்கு மனித நேயம் சாகவில்லை, தொலைந்து போகவுமில்லை. இந்த மனித நேயத்தை நாம் தொடரவேண்டும்.

தற்போதைய நவீன யுகத்தின் வளர்ச்சியால் சூழல் சமூகம் பல அசௌகரியங்களை சந்தித்து வருகின்றது. கடல் வளம் பாதிக்கப்படுகின்றது. கழிவுகள் முறையின்றி கொட்டப்படுகின்றன. தொழிற்சாலைக் கழிவுகளால் சூழல் மாசடைகின்றது. இங்கு எல்லாம் மனிதம் புதைக்கப்படுகிறது. இவற்றை நாம் அனுமதிக்கக்கூடாது.

இரு நாட்டு மக்களின் உறவுப்பாலத்தை புதுப்பிக்க வேண்டும். தொலைந்துபோன எமது உறவுகளை தேடிக்கொள்ளவும் இரு நாட்டு மீனவர்களது சமூக உறவை பேணவும் இன்றைய தினத்தில் வேண்டிக்கொள்வோம் என்றார்.

# மடுத் திருவிழாக்கள்

### மடுத்திருப்பதியில் இடம்பெறும் திருவிழாக்களும் வீடுகளுக்கு விண்ணப்பிக்கவேண்டிய காலப்பகுதிகளும்




ஜனவரி 01- மரியாள் இறைவனின் தாய் திருவிழா.
பெப்ரவரி 02 - இயேசுவை காணிக்கையாக கொடுத்த திருவிழா.
மார்ச் 10 - முட்டுவோல் பங்கால் கொண்டாடப்படும் திருவிழா.
மார்ச் 15 - பமுனுகம பங்கால் கொண்டாடப்படும் திருவிழா.
பரிசுத்த வாரம்
மே 01 - வய்க்கால் பங்கு மக்கள் கொண்டாடும் திருவிழா.
மே 21 - நீர்கொழும்பு மறைக்கோட்டம் கொண்டாடும் திருவிழா.
யூலை 02 - மடு அன்னை திருவிழா.
ஓகஸ்ட் - 15 பரி. கன்னிமரியாள் விண்ணேற்புத் திருவிழா.
செப்ரம்பர் 08- பரிசுத்த கன்னி மரியாளின் பிறப்புவிழா.
ஒக்ரோபர் 01- செபமாலை மாதா திருவிழா.
டிசம்பர் 08- கன்னிமரியாள் மாசில்லாமல் உற்பவித்த திருவிழா.

மேலே குறிப்பிடப்பட்ட திருவிழாக்களுக்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. வீடுகள் பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய திகதிகள் கீழே தரப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் விண்ணப்பிக்கின்றவர்களுக்கு மட்டுமே வீடுகள் வழங்கப்படும்.

| திருவிழாக்கள் | வீடுகள் பெறுவதற்குரிய காலம் |
|---|---|
| 01 ஜனவரி | - நவம்பர் 1 தொடக்கம் நவம்பர் 30 வரை |
| 02 பெப்ரவரி | - டிசம்பர் 1 தொடக்கம் டிசம்பர் 30 வரை |
| 15 மார்ச் | - ஜனவரி 1 தொடக்கம் ஜனவரி 31 வரை |
| பரிசுத்த வாரம் | |
| 01 மே | - பெப்ரவரி 1 தொடக்கம் பெப். 28 வரை |
| 21 மே | - பெப்ரவரி 1 தொடக்கம் பெப். 28 வரை |
| 02 யூலை | - மே 1 தொடக்கம் மே 31 வரை |
| 15 ஓகஸ்ட். | - மே 1 தொடக்கம் யூன் 30 வரை |
| 08 செப்ரம்பர் | - யூலை 15 தொடக்கம் யூலை 30 வரை |
| 01 ஒக்ரோபர் | - யூலை 15 தொடக்கம் யூலை 30வரை |
| 08 டிசம்பர் | - ஒக்ரோபர் 1 தொடக்கம் ஒக்ரோபர் 30 வரை |

தகவல் : மடுப்பரிபாலகா

# இயேசுவின் கல்லறை ஜெருசலேமில் கண்டுபிடிப்பு



இயேசுக் கிறிஸ்துவின் உடல் வைக்கப்பட்டிருந்த கல்லறையினை ஜெருசலேம் நகரில் அகழ்வாராய்ச்சி - யாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். நவீன அடுக்குமாடி வளாகத்தின் அடியில் அமைந்திருக்கும் இந்தக் கல்லறை கி.பி. 70 ஆம் ஆண்டுகளுக்கு முந்தையதாகக் கருதப்படுகிறது. இயேசுக் கிறிஸ்துவின் ஆரம்ப சீடர்கள் இதை அமைத்திருக்கலாம் என்று அகழ்வாராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கல்லறையில் இருக்கும் சுண்ணாம்புக் கல்லால் ஆன பெட்டியில், "புனித ஜெகோவா விழித்தெழு" என்று கிரேக்க மொழியில் குறிப்பிடப்பட்டிருப்பதை ரிமோட் கொன்ட்ரோல் கமராவின் உதவியுடன் ஆய்வாளர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர். இதேபோன்ற மற்றொரு பெட்டியில் பெரிய மீனின் வாயில் மனிதன் சிக்கியிருப்பதைப் போன்ற உருவம் பொறிக்கப்பட்டிருக்கின்றது. இது பைபிளில் கூறப்பட்டிருக்கும் ஜோனாவின் கதையாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# ஒற்றுமைக்காக செபிக்க கர்தினால் அழைப்பு

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக பல்வேறு இன, மதங்களுக்கிடையே புரிந்துணர்வற்ற தன்மையும், தப்பான கருத்துக்களும் அவர்களிடையே இடைவெளியை அதிகரித்து வருகின்றது. இதன் காரணமாக ஒற்றுமையையும், அமைதியையும் கொண்டுவர நாடு முழுவதிலும் உள்ள கத்தோலிக்க ஆலயங்களில் விசேட செபவழிபாடுகளை நடத்துமாறு கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கத்தோலிக்க பொதுநிலையினரையும், குருக்கள், துறவிகளையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# மாதாவின் சுருபத்திற்கு அவமரியாதை

## தலைவர்கள் கண்டனம்

வவுனியா இளமருதங்குளம் கார்மேல் மாதா தேவாலயத்தினுள் புகுந்தவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த மாதாவினுடைய திருச்சுருபத்தை எடுத்து ஆலயத்தில் மத்திய பகுதியில் நிலத்தில் வைத்து திருச்சுருபத்தின்மீது நீரை ஊற்றி உள்ளனர். மேலும் கார்மேல் மாதாவின் திருச்சுருபம் வைக்கப்பட்டிருந்த கூட்டினை உடைத்துள்ளனர்.
(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# பின் லாடன் கொல்லப்பட்ட கட்டடத்தில் திருவிவிலியப் பிரதிகள்!



அல் - கொய்தா தலைவர் ஒஸாமா பின் லாடன் கொல்லப்பட்ட கட்டடத்திலிருந்து இரு திருவிவிலியப் பிரதிகளை பாகிஸ்தானிய பாதுகாப்பு படையினர் கண்டெடுத்துள்ளனர். பாகிஸ்தானில் அபோதாபாத் நகரில் பின் லாடன் தங்கியிருந்த கட்டடத்தைத் தகர்க்கும் நடவடிக்கையின்போதே மேற்படி மறைத்து வைக்கப்பட்டிருந்த வேதாகமப் பிரதிகள் கண்டெடுக்கப்பட்டன.

மேற்படி ஆங்கில வேதாகம பிரதிகளில் சங்கேத அடையாளங்கள் பல காணப்பட்டுள்ளன. இது எதிர்காலத் தாக்குதல்கள் தொடர்பில் அல்-கொய்தா தலைவரால் எழுதி வைக்கப்பட்ட குறிப்புகளாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. மேற்படி வேதாகமப் பிரதிகள் புலனாய்வுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன.


# இலங்கையில் நடைபெறவுள்ள ஆறாவது அசிப்பா பொது அமர்வு



ஆறாவது அசிப்பா பொது அமர்வானது எதிர்வரும் 2012 ஐப்பசி மாதம் 18 - 24 ஆம் திகதிகளில் இலங்கையின் சிலாப மறைமாவட்டத்தில் உள்ள நைனாமடம என்னும் இடத்தில் உள்ள 'சிந்தன' நிலையத்தில் நடைபெற உள்ளது.

இப்பொது அமர்வானது ஆசிய ஆயர் பேரவையின் (FABC) பொதுநிலையினர் குடும்ப அலுவலகத்தின் அசிப்பா (ASIPA) பீடத்தினதும் இலங்கைத் திருச்சபையின் அசிப்பா தேசிய அணியினதும் இணைந்த ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# மன்னாரில் மாதாந்த முழுமதி தின இலக்கிய ஒன்று கூடல்



மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையமாகிய கலை அருவியில் 'தழல்' இலக்கிய வட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படும் இலக்கியக் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒவ்வொரு மாதமும் முழுமதி தினத்தில் (போயா நாளில்) இடம்பெற்று வருகின்றது.

கடந்த மார்ச் மாதம் 7ஆம் திகதி இடம்பெற்ற இலக்கிய ஒன்றுகூடலில் ஈழத்தின் சிறுகதையாசிரியர்களில் ஒருவராகிய யோ. கர்ணன் அவர்களுடனான இலக்கியக் கருத்தாடல் இடம்பெற்றது. தொடரும் ஒன்றுகூடல்களுக்கு ஆர்வமுள்ள அனைவரும் அழைக்கப்படுகின்றார்கள்.

# அருட்சகோதரி ஜெயசீலி றொட்றிக்கோ மன்னாரில் இருந்து விடைபெற்றார்!



மன் / புனித சவேரியார் பெண்கள் கல்லூரியின் அதிபராக கடந்த பத்து வருடங்கள் (2000 - 2012) அரும்பணியாற்றிய அருட்சகோதரி ஜெயசீலி றொட்றிக்கோ (தி. கு) அவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 1ஆம் திகதியுடன் தனது பத்து வருடப் பணியை நிறைவுசெய்துகொண்டு மன்னாரில் இருந்து விடைபெற்றார். மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் பாடசாலை நிர்வாகத்தை சிறப்பாகக் கொண்டுசென்ற அருட்சகோதரி அவர்கள் மாணவிகள் மத்தியில் ஒழுக்கம் கட்டுப்பாட்டை ஏற்படுத்த அயராது பாடுபட்டார்.

அருட்சகோதரியினுடைய அன்புப் பணிகளுக்கு மன்னார் மக்களின் நன்றியை மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.

கல்லூரியின் புதிய அதிபராக அருட்சகோதரி கில்டா சிங்கராயர் அவர்கள் கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதி பொறுப்பேற்றார். இவர் கடந்த 2009ஆம் ஆண்டிலிருந்து இப்பாடசாலையின் ஆசிரியராக பணியாற்றிவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடந்த காலத்தை ஏற்றுக்கொள்வதுடன் அதிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்

# இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பரிகாரம் செய்வது ஒப்புரவிற்கு அவசியமான தேவையாகும்

**உயிர்ப்பு விழாச் செய்தியில் இலங்கை ஆயர் பேரவை**



கடந்த காலத்தை - அது எத்துணை கடினமானதாக இருந்தாலும் - ஏற்றுக்கொள்வதும், அதிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வதும், இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பரிகாரம் செய்வதும், கடந்தகாலத் தவறுகளை மீளவும் செய்யாமல் இருப்பதும் உண்மையான ஒப்புரவிற்கும் எதிர்காலப் பயணத்திற்கும் அத்தியவசியமான தேவைகளாகும் என இலங்கை ஆயர் பேரவை விடுத்துள்ள உயிர்ப்புப் பெருவிழாச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜோய் கிறிசோஸ்ரம் அடிகளார் இறைபதம்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவரும் அமெரிக்காவில் பல ஆண்டுகள் பணியாற்றி வந்தவருமான அருட்திரு. ஜோய் கிறிசோஸ்ரம் பிரான்சிஸ் சேவியர் அடிகளார் கடந்த மார்ச் 27ஆம் திகதி அமெரிக்காவில் இறைபதமடைந்தார். அமெரிக்காவின் கலிபோனியா மாநிலத்தில் வைத்தியசாலை ஆன்மீகக்குருவாக இவர் பணியாற்றிவந்தார். இவர் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவராயினும், பல காலமாக தொடர்ந்து அமெரிக்காவில் வசித்துவருவதனால் இன்றைய இளம் குருக்களுக்கும் இறைமக்களுக்கும் இவர் அறியப்படாத ஒருவராகவே இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது நல்லடக்கம் ஏப்ரல் 5ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அன்னாரின் பிரிவால் வருந்தும் அவரது



குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அவரது ஆன்மா அமைதியில் இழைப்பாறச் செபிக்கின்றோம்.

### ஜெனிவா விடயம் தொடர்பான கர்தினாலின் அறிக்கை குறித்து

# தமிழ் கத்தோலிக்கர் அதிருப்தி! கவலை!

"இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு யோசனையொன்று சமர்ப்பிக்கப்படுகின்றமையும் அதற்கு ஏனைய மேற்கத்திய நாடுகள் ஆதரவு வழங்குவதும் எமது நாட்டின் சுதந்திரத்திற்கும், சுய மரியாதைக்கும் விடுக்கப்படுகின்ற சவாலாகவும் மற்றும் எமது நாட்டின் அறிவாற்றலைக் குறைத்து மதிப்பிடுவதாகவும் நாம் பார்க்கின்றோம்" என்று கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்களின் கருத்தாக கொழும்பு பேராயர் இல்லம் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

இது தொடர்பாக தமிழ் கத்தோலிக்க குருக்கள், இறைமக்கள் பலர் தமது அதிருப்தியையும், கவலையையும் வெளியிட்டிருந்தனர். உண்மையை எடுத்துக்கூறவேண்டிய திருச்சபையின் தலைவர்கள் அரசிற்கு சார்பான கருத்துக்களை தெரிவிப்பதையிட்டு அவர்கள் தமது அதிருப்தியையும் கவலையையும் வெளியிட்டிருந்தனர்.



# மன்னாரில் பெரும்போக நெற்பயிர் அறுவடை



மன்னார் மாவட்டத்தில் பெரும்போக நெற்பயிர் அறுவடை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அனைத்து விவசாயிகளும் சுறுசுறுப்படைந்துள்ளனர். இம்முறை பெரும்போக நெற்செய்கை வெற்றியளித்திருப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். இயந்திரங்களைப் பயன்படுத்தி மன்னார் மாவட்டத்தில் தற்போது அறுவடை நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### அரிய பெரிய பணிகளை ஆற்றி விடைபெறும்

### இலங்கை திருச்சிலுவைக் கன்னியர்களின் மாகாணத் தலைவி

# அருட்சகோதரி வைத்திய கலாநிதி இமாக்குளேற்

**- அருட்சகோதரி கொன்சன்ரைன் (தி.க) -**

இலங்கை நாட்டிலே திருச்சிலுவைக்கன்னியர் சபையானது ஆரம்பிக்கப்பட்டு 100 வருடங்களை நோக்கிப் பயணிக்கின்றது. இச்சபையினுடைய பல மாகாணத் தலைவிகளின் தலைமத்துவப்பணி வரிசையிலே அருட்சகோதரி இமாக்குளேற் ஜோசப் அவர்கள் கடந்த 9 வருடகாலமாக ஆற்றிய பணியானது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

அருட்சகோதரி அவர்கள் 1950ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24ம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார். யாழ்/ திருக்குடும்ப பாடசாலையில் O/L வரை கல்விகற்றார். பின்னர் 1967ம் ஆண்டு திருச்சிலுவைக் கன்னியர் இல்லத்தில் துறவியாகும் நோக்குடன் இறை அழைத்தலுக்கு செவிமடுத்து சபையில் இணைந்துகொண்டார். அத்துடன் A/L கல்வியை கொழும்பு புனித பிறிச்சட் கல்லூரியில் தொடர்ந்தார். 1974ம் ஆண்டு தனது முதலாவது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார். 1975ம் ஆண்டு இந்தியாவில் பங்களூர் புனித யோண் மருத்துவக் கல்லூரியில் இணைந்து 1982ம் ஆண்டு MBBS கற்கைநெறியை நிறைவுசெய்து 1983ம் ஆண்டு இலங்கை வந்து 1988 வரை வைத்திய அதிகாரியாகப் பணியாற்றினார். இக்காலத்தில் அவர் தனது பண்பான, கனிவான பேச்சினால் மக்களைக் கவர்ந்ததோடு மிகுந்த இரக்கம் உள்ளவராக மக்களின் முறைப்பாடுகளுக்கு செவிமடுத்து மருத்துவம் செய்தார்.

பின்னர் மேலதிக பயிற்சிக்காக ஐரோப்பா சென்று 1994ம் ஆண்டு MRCOG என்ற கல்வியை முடித்து நாடு திரும்பினார். தொடர்ந்து வந்த காலங்களெல்லாம் அருட்சகோதரி அவர்களின் மருத்துவப்பணியானது நாட்டிலே ஏற்பட்ட போரின் கொடுமையிலும் இடம்பெயர்வுகளிலும்தான் மேற்கொள்ளப்பட்டது. இவர் ஒரு "மக்கள் மனம்கவர் மருத்துவர்" என்பதை அவரின் சேவைக் காலங்களிலே நாம் கண்கூடாகக் கண்டுள்ளோம்.

திருச்சிலுவைக் கன்னியர் சபையின் மாகாணத் தலைவியாக 2003ம் ஆண்டு ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டு முதல் 6 வருட சேவையின் பின்னர் மீண்டும் 3 வருடங்கள் தெரிவுசெய்யப்பட்டு எல்லாமாக 9 வருடங்கள் தலைமைத்துவத்தில் தலைசிறந்து விளங்கினார்.

"பணிவிடை பெறவன்று பணிவிடை புரியவே வந்தேன்" என்ற கிறிஸ்துவின் வார்த்தையை அடியொற்றிப் பணி செய்தார். தனது வாழ்வாலும், முன்மாதிரிகையாலும், பணிவாலும், பண்பாலும் எல்லோரையும் மதித்து, விளங்கிக்கொண்டு பொறுமையுடன் சபையின் கொள்கைகளையும் விட்டுவிடாது கட்டிக்காத்தார். சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் மிகுந்த அக்கறையுடன் கண்காணித்துவந்தார்.

ஒவ்வொருவருடைய உணர்வுகளையும், தேவைகளையும் மதித்து நிறைவேற்றினார். அவரின் தலமைத்துவத்தின்கீழ் நாம் வாழ்ந்ததை, பெற்றுக்கொண்ட நன்மைகளை நினைத்து நன்றியோடு மகிழ்கின்றோம். "காலத்தின் தேவைக்கு ஏற்ப பணியாற்றுவோம்" என்ற எமது சபை ஸ்தாபகரின் விருதுவாக்கிற்கு அமைவாக சபை உறுப்பினர்கள் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் வாழ வழிகாட்டினார். தரமுள்ள துறவிகளை மட்டுமல்ல ஆன்மீகப்பண்புள்ள துறவிகளையும் உருவாக்க அரும்பாடுபட்டார்.

எமது மாகாண சபையின் சில கனவுகளை அவர் தமது சேவைக் காலத்திலே நிறைவேற்றினார். அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிட்டுக் காட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

01. அதிக காலமாக உணரப்பட்ட தேவையை உணர்ந்து மிக அழகான, மிகப்பெரிய மாகாண இல்லத்தை நீர்கொழும்பு தழுவக்கொட்டுவ என்னும் இடத்தில் தனது முயற்சியினால் கட்டி முடித்தார்.
02. யாழ்ப்பாண திருச்சிலுவைக் கன்னியர் வைத்தியசாலையை பெரிதாக்கி நவீன வசதிகளை அதிகரித்தார்.
03. தாதியர் பயிற்சிநெறிப் பாடசாலையை ஏற்படுத்தி பல இளம் யுவதிகளின் எதிர்கால வாழ்வை வளப்படுத்தினார்.
04. கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் என்னும் இடத்தில் ஒரு புதிய கன்னியர் இல்லத்தை உருவாக்கியதுடன், மருத்துவ வசதிகளுடன் இணைந்த நிலையம் ஒன்றையும் ஏற்படுத்த முயற்சி செய்துள்ளார். வன்னி மண்ணிலே வாழும் பாலகர்களுக்கு ஒரு அழகான பாலர் பாடசாலையையும் ஏற்படுத்தியுள்ளார்.
05. திருகோணமலை திருச்சிலுவைக்கன்னியர் இல்லத்துடன் இணைந்ததாக ஒரு மருத்துவமனையையும் உருவாக்கியுள்ளார்.
06. மலையக மக்களின் நலன் கருதி இரத்தினபுரி மறைமாவட்டத்தில் புதிய



**பல்வேறு பணிகளை காலத்தின் தேவைக்கேற்ப நிறைவேற்றினாலும் இவை எவற்றிலுமே பெருமை பாராட்டாது பணிந்து நிற்பவர்தான் அருட்சகோதரி இமாக்குளேற்!**

பணித்தளத்தையும் நிறுவி ஒரு கன்னியர் இல்லத்தையும் ஏற்படுத்தியுள்ளார்.
07. உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாட்டிலும் சகோதரிகள் பணிபுரிய வேண்டுமென்று நினைத்து பாக்கிஸ்தானில் திருக்குடும்பக் கன்னியர் வைத்தியசாலையிலும் தாதியர் பயிற்சி பாடசாலையிலும் எமது சபைத் துறவிகள் பணியாற்ற வழிவகை செய்தார்.
08. எமது சபையின் இளம் கன்னியர்களை அவரவரின் தகுதிகளுக்கு ஏற்ப மருத்துவத்துறை, ஆசிரியர்பணி போன்றவற்றில் சிறந்த பயிற்சி பெற்று பணிசெய்ய வழிகாட்டினார்.

இவ்வாறு இவரின் அளப்பரிய சேவையால் எமது மாகாண சபையை வளர்த்ததோடு மட்டுமல்ல இலங்கையில் காணப்படும் அனைத்துத் துறவற சபைகளின் ஒன்றியத்திலும் அங்கம் வகித்து ஒட்டுமொத்தமாக எமது நாட்டிற்கே தமது தலமைத்துவத்தினால் சிறந்த சேவையாற்றியுள்ளார்.

இவ்வாறான பல்வேறு பணிகளையும் காலத்தின் தேவைக்கேற்ப நிறைவேற்றினாலும் இவை எவற்றிலுமே பெருமை பாராட்டாது எதைச்செய்ய வேண்டுமோ அதையே செய்தேன் என்ற பவுலடியாரின் வார்த்தைக்கேற்ப பணிவோடு பணிந்து நிற்பவர்தான் எம் அருட்சகோதரி.

தொடர்ந்து வரும் காலங்களிலும் இவரின் பணி சிறக்கவும் எங்கு சென்றாலும் என்ன செய்தாலும் இறையாசீர் நிரம்பப்பெற்று வாழ்ந்திடவும் வாழ்த்தி நிற்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மக்கள் சார்பாக செயல்படுவது திருச்சபைக்குள்ள அறக்கடப்பாடாகும்

அருட்பணி. ஜெறாட் றொசாய்றோ (அமதி) அடிகளார்

### மன்னார் ஆயர் மற்றும் குருக்களின் ஜெனீவா கடிதம் காரணமாக எழுந்த கண்டனக் குரல்கள் தொடர்பாக ஜெறாட் அடிகளார் மன்னாவுக்கு வழங்கிய விசேட செவ்வியின் தொகுப்பு

கிறிஸ்தவ கத்தோலிக்க திருச்சபை தத்தம் சூழமைவில் வாழும் மக்களின் வாழ்வியல் தேவைகளுக்கு குரல் கொடுப்பதும், அம்மக்கள் சார்பாக செயல்படுவதும் திருச்சபையின் சிறப்புத் தேர்வு அல்ல, மாறாக திருச்சபைக்குள்ள அறக்கடப்பாடாகும், திருச்சபை அறிக்கையிடும் விசுவாசத்தின் அகத் தூண்டலாகும். *"நாம் வாழும் சமுதாயத்தின் நிகழ்வுகளிலிருந்தும், வரலாற்றுப் பாதையிலிருந்தும் நழுவிக்கொள்ளும் கிறிஸ்தவர், ஒருவகையில் மீட்பின் பாதையிலிருந்து நழுவி விடுகின்றனர்." (இ.உ. தி. 43) என அருட்பணியாளர் ஜெராட் றொசாய்றோ அடிகளார் மன்னாவுக்கு வழங்கிய விசேட செவ்வியில் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் கூறுகையில் தெரிவித்ததாவது,*

இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் நடந்து முடிந்த வன்னிப்போரின் பின்னர் இன்றும் மக்களின் வாழ்வியலில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் உண்டு. நேர்மையுடன் நீதி, மனித அடிப்படை உரிமை பேணப்படல், மக்களின் இனப்பண்பாட்டுத் தனித்துவம் பேணப்படல் முக்கியமானது. குறிப்பாக, போரினால் வாழ்வியல் வேர் அறுக்கப்பட்ட, நாளாந்த இயல்பு வாழ்வுக்காக நொண்டியடிக்கும் மக்களின் நிலையானது எரியும் புதரைப் போன்றது. இதனை மக்களுடன் உடனிருந்தும், உரையாடியும், நேரில் கண்டும் பெற்ற அனுபவத்தின் உறுத்தலால் மக்களின் வாழ்வில் நலனையும், மேம்பாட்டையும் நோக்கில் கொண்டு, ஐக்கிய நாடுகள் சர்வதேச மனித உரிமைகள் மையத்திற்கு மார்ச் மாதம் 1ம் திகதி 2012, குருக்கள் குழுவினர் (31) ஒப்பமிட்டு ஓர் அறிக்கை அனுப்பியிருந்தோம். மக்களின் வாழ்வியல் நலன் நாடி அனுப்பப்பட்ட வேண்டுகோள் அடங்கிய இவ்வறிக்கையுடன் தொடர்புடைய மன்னார் மறைமாவட்ட ஆயர் உள்ளிட்ட குருக்கள் அனைவர்மீதும் பல கண்டனக் குரல்கள் எழுந்தன. மார்ச் மாதம் 12ம் திகதி தென்பகுதி குருக்கள், துறவியர், பொதுநிலையினர் (63) கொண்ட குழுவினர் ஐ.நா.மனித உரிமைகள் மையத்திற்கு முன்னைய குழுவினரின் வேண்டுகோளை வழிமொழிந்து ஒரு அறிக்கையை அனுப்பியுள்ளனர். அவ்வறிக்கையில், முன்னைய குழுவினரின் வேண்டுகோளை கொச்சைப்படுத்தி, அதற்கு முரணான விளக்கம் கற்பித்த ஊடகங்கங்களின் செயல்பாட்டைக் கண்டித்துள்ளனர். அவ்வறிக்கையோடு தொடர்புடைய மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்களை அச்சுறுத்தி, உண்மைக்குப் புறம்பான விமர்சனங்களுடன் அரசாங்கத்தின் இணைக்கட்சிகளால் வெளியிடப்பட்ட அறிக்கைகளை ஆழ்ந்த அக்கறையுடன் கவனத்தில் கொள்ளுவதாகவும் கூறியுள்ளனர்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## தேவன்பிட்டிப் பங்கின் சுற்றுலா


அருட்பணி. றொக்சன் குருஸ்

தேவன்பிட்டி பங்கு மறைக்கல்வி மாணவர்களுக்கான சுற்றுலா கடந்த 04.02.2012 அன்று இடம்பெற்றது.

பங்குத்தந்தை றொக்சன் குருஸ் அடிகளாரின் வழிகாட்டலின்கீழ், அருட்சகோதரி மற்றும் 30 மறையாசிரியர்கள், 350 மறைக்கல்வி மாணவர்கள் ஆகியோர் இச்சுற்றுலாவை மேற்கொண்டனர்.

தேவன்பிட்டி பங்கில் மறைக்கல்வி மாணவர்கள் முதல் தடவையாக மேற்கொண்ட சுற்றுலா இதுவாகும். பேசாலை, தலைமன்னார், தோட்டவெளி, தாழ்வுபாடு, கீளியன்குடியிருப்பு ஆகிய பங்குகளை இவர்கள் தரிசித்தனர்.

தகவல்:- திரு.லோறன்ஸ்.

## மன்னார் மறைமாவட்டத்தில் குடும்ப வாரம்

### 11 –15 ஏப்ரல் 2012


அருட்பணி. எஸ். கே. தேவராஜா

இவ்வாண்டு மன்னார் மறைமாவட்டத்தின் குடும்பநல ஆணைக்குழுவின் ஒரு சிறப்புப் பணித்திட்டமாக சித்திரை மாதம் 11 - 15ஆம் திகதி வரை "மறைமாவட்ட குடும்ப வாரமாக" கொண்டாடப்படவுள்ளது.

மே மாதம் அனைத்துலக குடும்பவாரம் மிலான் - இத்தாலி தேசத்தில் திருத்தந்தை 16ம் பெனடிற்க் தலைமையில் இடம்பெறுவதையொட்டி அதற்கு ஆயத்தமாக பங்கு மட்டங்களிலும் மறைமாவட்ட மட்டத்திலும் குடும்பவாரம் சிறப்பிக்கப்படுகின்றது. சாளக்குடி டிவைன் தியான மறையுரையாளர்களால் சித்திரை 11ம் திகதி மாலை 6.00 மணி தொடக்கம் 15ம் திகதி பகல் 12.00 மணி வரை மடுத்திருத்தல தியான இல்லத்தில் குடும்பங்களுக்கான சிறப்பு தியானம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மன்னார் மறைமாவட்ட குடும்ப, பொதுநிலையினர் பணிக்குழு இயக்குனர் அருட்பணி. எஸ். கே. தேவராஜா அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

## விவிலிய ஆணைக்குழு வெளியிட்டுள்ள விவிலிய மறைத்தூது – சிறு பிரசுரம்

மன்னார் மறைமாவட்டத்தின் மறைக்கல்வி ஆண்டு மேய்ப்புப்பணி திட்டத்திற்கு அமைவாக விவிலிய ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் 'விவிலிய மறைத்தூது' என்னும் சிறிய பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

குடும்பங்களின் பயன்பாட்டிற்கென விவிலிய வார்த்தைகள் தொகுக்கப்பட்டு இப்பிரசுரம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பிரசுரமானது பங்குகளுக்கு குறுகிய தொகையில் விவிலிய ஆணைக்குழுவினால் இலவசமாக வழங்கப்படுகின்றது. பங்கின் குடும்ப எண்ணிக்கைக்கேற்றவாறு பங்குகள் இதனை பிரதிசெய்து விநியோகிக்கலாம். இவ்வாறான பிரசுரத்தினை கிரமமாக அச்சிட்டு வழங்க ஆர்வமாக உள்ளதாக அன்பிய விவிலிய ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு அவர்கள் தெரிவித்தார்.

## புதிய பங்கின் முதல் திருவிழாவும் ஆலய அடிக்கல் நாட்டு நிகழ்வுகளும்


அருட்பணி. எஸ். வசந்த குமார்

கடந்த 19.03.2012 அன்று காத்தான்குளம் புதிய பங்காக உதயமாகிய பின்னர் முதற் திருவிழா மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு. இராயப்பு யோசேப்பு ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியாக காலை 7.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. வரலாற்றிலே முதற்தடவையாக (9 நாட்கள்) நவநாள் வழிபாடுகள் நடைபெற்றன. இந்நவநாள் மறையுரைகளை அருட்பணி. அமல்ராஜ் அ.ம.தி. அவர்கள் நிகழ்த்தினார்.

திருவிழாத் திருப்பலியின்போது தனது பெயர் கொண்ட புனிதரின் திருவிழாவைக் கொண்டாடிய ஆயர் அவர்களுக்காக சிறப்பாகச் செபிக்கப்பட்டதோடு ஞாபகச் சின்னமும் வழங்கப்பட்டது. தொடர்ந்து ஆயர் அவர்கள் புதிய ஆலயங்களாக நிர்மாணிக்கப்படவுள்ள காத்தான்குளம் புனித சூசையப்பர் ஆலயத்திற்கும், ஆலங்குளம் குழந்தை இயேசு ஆலயத்திற்குமான அடிக்கல்களை ஆசீர்வதித்து நாட்டிவைத்தார்.

ஆலங்குளம், குழந்தை இயேசு ஆலயத்தில் ஆயரை இளைஞர், யுவதிகள் சிறப்பாக வரவேற்று, மாலையிட்டு பொன்னாடை போர்த்தி வரவேற்றார்கள் இந்நிகழ்வுகள் யாவும் பங்குத்தந்தை அருட்பணி. எஸ். வசந்தக்குமார் அடிகளாரின் வழிகாட்டலில் காத்தான்குளம், ஆலங்குளம் ஆகிய ஆலய அருட்பணிச் சபையினரால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

*தகவல்:*
*எமிலியானுப்பிள்ளை,*
*செயலாளர், புனித சூசையப்பர் ஆலயம்,*
*காத்தான்குளம்.*

## மன்னார் தினச்சந்தை தீ வைப்பு பொது அமைப்புக்களின் ஒன்றியம் கண்டனம்



மன்னார் தினச்சந்தை வியாபார நிலையம் கடந்த மார்ச் மாதம் 3ஆம் திகதி அதிகாலை சில இனம் தெரியாத நபர்களால் எரியூட்டப்பட்டது. இச்சம்பவம் மன்னார் நகரசபைக்கும் வர்த்தகர்களுக்கும் இடையில் வன்முறையினை தூண்டிவிடும் செயல் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் இச்சம்பவம் தொடர்பாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் உள்ள ஒற்றுமையினைச் சீர்குலைத்து இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்த சில தீய சக்திகள் முயற்சிப்பதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எரியுண்ட கடைத்தொகுதிகளை மேலே உள்ள படத்தில் காணலாம்.

## மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்காலத் தியானம்

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்காலத் தியானமானது மடு தியான இல்லத்தில் கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் 25ஆம் திகதி ஞாயிறு மதிய உணவுடன் நிறைவடைந்தது. இத்தியானத்தில் 165 கத்தோலிக்க ஆசிரியர்கள் பங்கேற்றனர். மன்னார் மறைக்கல்வி நிலையம் இத்தியானத்தை ஏற்பாடு செய்திருந்தது.

## மன்னார் பிரஜைகள் குழுவின் மனிதாபிமானச் செயற்பாடுகள்

மன்னார் பிரஜைகள் குழு இடம்பெயர்ந்துள்ள, மீளக்குடியேறிய கிராமங்களில் குடியியல் விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்குகளையும், முக்கிய ஆவணங்களை இழந்தவர்களுக்கு அல்லது பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு நடமாடும் சேவை மூலம் பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகளை மேற்கொண்டும் வருகின்றது.

இச்சேவைக்கு மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஜே. ஏ. எஸ். ரவீந்திரா அவர்களும் அப்பகுதி பிரதேச பதிவாளர்கள், கிராம சேவையாளர்கள், சமாதான நீதவான்கள், சட்டத்தரணிகள், தொண்டர்கள் போன்றோரும் உதவிவருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த 12.02.2012 ஞாயிற்றுக்கிழமை மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாலைப்பெருமாள்கட்டு கிராமத்தில் கிராமிய மட்ட அமைப்புக்களின் 40க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து பெரியமடு பகுதியில் அமைந்துள்ள சன்னார் கிராமத்தில் 26.02.2012 ஞாயிற்றுக்கிழமை மீள்குடியேறிய 40க்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லீம் மக்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு மன்னார் சட்டத்தரணிகளால் நடாத்தப்பட்டது.

இதில் பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற முக்கிய ஆவணங்கள் பெறுவதற்கு உள்ள தகமைகள் தேவையான விபரங்கள், புதிய பதிவுகளை எவ்வாறு மேற்கொள்ளல், தொலைந்த ஆவணங்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது, சிறுவர், பெண்கள் உரிமைகள், சிறுவர் துஸ்பிரயோகங்கள், வெளிநாடு செல்லும் பெற்றோர்களின் பிள்ளைகளின் பாதிப்புக்கள் போன்றன கலந்துரையாடப்பட்டது. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)


அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் உயர் தலைவி அருட்சகோதரி ஆகத்தா மேரி அவர்கள் அண்மையில் அடம்பன் கார்மேல் கன்னியர் இல்லத்திற்கு விஜயம்செய்தார். அடம்பன் பங்குத்தந்தை லக்கோன்ஸ் அடிகளாருடனும், அடம்பனில் உள்ள கார்மேல் கன்னியர்களுடனும் எடுத்துக்கொண்ட படம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்விப் பொழிவு

மறைக்கல்வி ஆண்டு சிறப்புக் கட்டுரை

# இறைவார்த்தை அடிப்படையில் மறைக்கல்வி

அருள்பணி. மரிய டெல்லஸ்.
திண்டிவனம்.




மறைக்கல்வி என்பது கத்தோலிக்க திருச்சபையின் உயிர்மூச்சு. ஒரு கத்தோலிக்க தாய் தன்னுடைய மகனுக்கோ மகளுக்கோ 'தந்தை மகன், தூய ஆவியாரின் பெயராலே' என்ற சிலுவை அடையாளம் வரையச் சொல்லிக் கொடுக்கும் அந்த நாளிலிருந்து மறைக்கல்வி ஆரம்பிக்கின்றது எனலாம்.

இப்படிப்பட்ட பல்வேறு அடிப்படைச் செபங்களைக் கற்றுக்கொடுக்கும் தாய் 'மறைக்கல்வியின் முதல் ஆசிரியர்' ஆகின்றார். அந்த த்தாய் ஓர் இறையியல் வல்லுநராகவோ விவிலிய அறிஞராகவோ இல்லாமல் இருக்கலாம். ஆனால் கத்தோலிக்க விசுவாசத்தில் வளர்ந்தவர் என்ற நிலையில் சிலுவை அடையாளம் போன்ற பல்வேறு செபங்களை கற்றவராகவோ அல்லது தன்னுடைய சிறுபருவத்திலிருந்து தான் கற்றுக்கொண்ட பல்வேறு செபங்களை விசுவாசத்துடன் செபித்து வாழக்கூடியவராகவோ இருப்பர். இவ்வாறு தன்னுடைய சாமானியக் கத்தோலிக்க விசுவாச வளர்ச்சி அனுபவத்திலிருந்து 'தொடக்க மறைக்கல்வி ஆசிரியர்' நிலையை ஒவ்வொரு தாயும் தன் இல்லத்தில் மிக அருமையாகச் செய்கின்றார். இதில் இன்னொரு சிறப்பான கருத்தும் தொக்கியுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

அதாவது இந்த 'சிலுவை அடையாளச் செபம்' எதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது? அல்லது அது எங்கிருந்து வருகிறது? என்ற தெளிவு இருந்தால், ஒரு தாய் தன்னுடைய மறைக்கல்விப் பணியை இன்னும் சிறப்பாக ஆற்ற முடியும். தன் குழந்தைக்கு 'முதல் மறைக்கல்வி ஆசிரியராக' இருந்து மறைக்கல்வியின் அரிச்சுவடியைக் கற்றுக்கொடுக்கும் தாய், இச்செபம் மட்டுமல்ல இதைப்போன்று பல்வேறு செபங்களும் '*இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டுள்ளது*' என்பதை அறிந்துகொண்டால் எவ்வளவு சிறப்பாக அமையும். இதனால்தான் யூதப் பழமொழி இறைவார்த்தையின் மரபில் வளர்ந்த ஒரு தாயின் சிறப்பை பின்வருமாறு எடுத்தியம்புகின்றது. "கடவுள் ஒவ்வொரு குடும்பத்திலும் பிறக்க முடியாது என்பதால்தான் ஒரு தாயாகப் பிறக்கின்றார்"

எனவே, ஒவ்வொரு குழந்தைக்கும தொடக்க ஆசிரியராக இருக்கும் தாய் மட்டுமல்ல . அவரைத்தொடர்ந்து மறைக்கல்வியைக் கற்றுக் கொடுக்கும் அனைத்து ஆசிரியர்களும் '*இறைவார்த்தை அடிப்படையில் மறைக்கல்வி*' அமைந்துள்ளது என்ற உண்மையை அறிந்து கொள்ள வேண்டும். காலம் செல்லச் செல்ல மறைக்கல்வி வழியாக செபங்கள், விசுவாச உண்மைகள், அடிப்படைக் கோட்பாடுகள் ஆகியவற்றைக் கற்றுக்கொள்ளும் மாணவர்களும் விசுவாச வாழ்வில் வளர்ந்து 'இறைவார்த்தை அடிப்படையில்' மறைக்கல்லியில் கற்ற அனைத்தையும் வாழும் பக்குவம் பெற்றவராக மாறுகின்றார். எனவே எதற்காக மறைக்கல்வி இறைவார்த்தையை அடிப்படையாகக்கொண்டு அமைந்திருக்க வேண்டும்? என்பதை அறிய முயலுவோம்.

## 1. மறைக்கல்வியின் நோக்கம்

### *1.அ. மறைக்கல்வி என்னும் வழிமுறை*

ஒவ்வொரு மதமும் தன் கோட்பாடுகளையும் நம்பிக்கையையும் புதிய தலைமுறையினருக்கு கொடுக்கும் பல வழிமுறைகளை அனுபவங்கள் வழியாக அறிந்து உருவாக்கிக் கொள்கின்றது. யூத மதத்தின் தொடர்ச்சியாக இயேசுவின் இயக்கமாக ஆரம்பித்து நிறுவன அமைப்பாக மாறியுள்ள 'கத்தோலிக்க திருச்சபை' தன் சமயத்தின்அடிப்படையை புதிய தலைமுறையினருக்கும் வளர்ச்சியடைந்த தலைமுறையினருக்கும் கற்றுக்கொடுக்க 'மறைக்கல்வி' என்ற வழி முறையை வகுத்தெடுத்துள்ளது.

இது புதிதல்ல, நற்செய்தியை அறிவித்து, போதித்துவந்த சீடர்கள் தாங்கள் உருவாக்கிய திருச்சபைகளுக்கு தொடர்ந்து பயிற்சி கொடுக்க இவ்வழியைப் பின்பற்றினர் (திப 2:42; 6:2). போதித்தல் என்ற நிலையைக் கடந்து 'கற்றுக்கொள்ளல்' என்ற நிலை வருகையில் இந்த 'மறைக்கல்வி' முறை உள்ளே நுழைந்தது (காண். எபி 6:1-2: 2திமோ 4:1-5) எனலாம். இதன் விளைவாகத்தான் பன்னிரு திருத்தூதர்களின் பல்வேறு மறைக்கல்வி போதனைகள் அடங்கிய 'திதாக்கே' என்ற ஏடும் நமக்கு கிடைத்துள்ளது. அவர்களைத் தொடர்ந்து வந்த பல்வேறு தளத்திருச்சபைகளும் அகில உலகத் திருச்சபையும் (இரேனியுஸ், யூஸ்சேப்பியூஸ்) அலக்சாண்டியாவைச் சேர்ந்த கிளமென்ட் ,அகுஸ்தினார்...) பல்வேறு மறைக்கல்வி நூல்களை வழங்கியுள்ளன. இப்பணியானது இன்றளவும் காலத்தின் தேவைக்கு ஏற்ப நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். சமீபத்தில் திருத்தந்தை இளைஞர்களுக்கு வழிகாட்டும் வகையில் அறிமுகப்படுத்திய 'யூகேட் '(YOUCAT) என்பது இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### *1. ஆ. மறைக்கல்வியின் அடிப்படை நோக்கம்.*

எனவே, 'மறைக்கல்வி'யின் அடிப்படையான நோக்கம் 'கத்தோலிக்க விசுவாசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையும் செபங்களையும் அவைகளை அன்றாட வாழ்வாக்க உதவும் வழிபாட்டு அருளடையாளங் - களையும் சமயம் சார்ந்த அனைத்தையும் அறியச் செய்வதாகும்'. அவைகளைத் தொடர்ந்து கற்றுக்கொடுக்கும் வழிமுறைகளை அனுபவ அடிப்படையில் மறைக்கல்வி உருவாக்கித் தருகின்றது. எனவே சிறுபருவத்திலிருந்து நாம் நம் விசுவாச வாழக்கைக்கு உகந்த தெளிவை மறைக்கல்வி வழியாக அறிய முயற்சிக்கிறோம். இம்மறைக்கல்வி என்பது ஒரு தொடர் பயிற்சியாக அமைந்துள்ளது. எனவேதான், பல்வேறு வழிபாடுகள் மற்றும் கொண்டாட்டச் சூழல்களில் இம்மறைக்கல்வி முறை பல்வேறு வடிவங்களில் வழங்கப்படுகின்றது.

### *1. இ. அறிதலையும் தாண்டிய அனுபவமாக*

மறைக்கல்வியின் நோக்கம் 'அறிவதோடு' நின்றுவிடுவோமென்றால்; அது கல்வியின் நோக்கத்தை இழந்துவிடுகின்றது. மாறாக கற்றுக்கொண்டவை அனைத்தையும் அனுபவமாக்கி வாழ்ந்தால் 'மறைக்கல்வியின் நோக்கமும், சமய வாழ்வின் நோக்கமும் ஒன்றோடு ஒன்று இணைந்து செல்கின்றது என்று அறிந்துகொள்ளலாம். எனவே மறைக்கல்வி கற்றுக்கொள்ளும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் தன்னுடைய விசுவாச உண்மைகளை அறிந்து கொள்வதையும் தாண்டி, முதலில் தன்னுடைய மானிட கண்டுகொள்கிறார். (Recognizes his human responsibility or his call to be human); இரண்டாவது, தான் வாழும் சமுதாயத்தில் சமூகப் பொறுப்புள்ள மனிதராக மாறுகின்றார். மூன்றாவது, தன்னுடைய பணிசார்ந்த சிறப்பு அழைப்பை வாழும் பக்குவம் பெறுகிறார். (Specific responsibility - e. g. father, mother, student, priest etc.) இவ்வாறு ஒட்டுமொத்த முழு மனித ஆளுமை கொண்டவர் என்ற நிலையில் இயேசுவின் சீடத்துவ வாழ்வுக்கு சாட்சியாக மாற்றும் கல்வியாக 'மறைக்கல்வி' அமைகின்றது. இவ்வாறு சிறப்புமிக்க மறைக்கல்வி இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டது என்பதை மறந்தால், அது 'கத்தோலிக்க மறைசார்ந்த 'மறைக்கல்வியாக அல்ல, மாறாக அறிவை மட்டும் பெற்று பொருளீட்ட உதவும் ஆதாயக் கல்வியாக மாறிவிடும்.

## 2.இறைவார்த்தையின் அடிப்படை மறைக்கல்வி - ஏன்?

கடந்த பல ஆண்டுகளாக தமிழகத் திருச்சபை உருவாக்கி அனைவருக்கும் அறிமுகப்படுத்தியுள்ள 'பள்ளி மறைக்கல்வி' என்றாலும் சரி, 'ஞாயிறு மறைக்கல்வி' என்றாலும் சரி. 'சில அருளடையாள மறைக்கல்வி' என்றாலும் சரி இவை அனைத்தையும் இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்க முயன்றுள்ளார்கள். அந்த வகையில் மறைக்கல்வி வரலாற்றில் தமிழகத் திருச்சபை பெரும் பங்களிப்பைத் தந்திருக்கின்றது. இங்கு ஒரு கேள்வியை எழுப்பவேண்டும். ஏன் மறைக்கல்வி இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டும்? இதற்கு பல பதில்கள் உண்டு அதில் சிலவற்றை மட்டும் காண்போமா?

### *2. அ. மறைக்கல்வி செபங்களுக்கு இறைவார்த்தை அடிப்படை*

கத்தோலிக்க மறையின் விசுவாச வாழ்வுக்கு உதவும் பல செபங்கள் இறைவார்த்தையை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டவையாகும். இதற்கு இரண்டு செபங்களை மட்டும் எடுத்துக் கொள்வோம் (சிலுவை அடையாளமும் இயேசு கற்றுக்கொடுத்த இறைவேண்டலும்). முதலில் சிலுவை அடையாளம் : "தந்தை மகன், தூய ஆவியாரின் பெயராலே - ஆமென்" அல்லது "தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சிமை உண்டாகுக: தொடக்கத்திலிருந்ததுபோல, இன்றும் என்றும் எப்பொழுதும் இருப்பதாக - ஆமென்". இதில் இரண்டு பகுதிகள் உள்ளன. முதல் பகுதி மத் 28:19-யை அடிப்படையாகக் கொண்டது. இயேசு தன்னுடைய சீடர்களைப் பார்த்து "தந்லை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்" என்று கட்டளை கொடுத்தார். இது தொடக்கத் திருச்சபையில் இருந்த திருமுழுக்கு கொடுக்கப் பயன்படுத்திய செப முறையும் ஆகும். அதை இயேசுவே கற்றுக்கொடுத்ததாக மத்தேயு எழுதியுள்ளார். இச்சிலுவை அடையாளத்தை இன்று தாய்த் திருச்சபை ஒவ்வொரு திருவழிபாட்டின் தொடக்கத்திலும் முடிவிலும் பயன்படுத்தும் வகையில் உருவாக்கித் தந்துள்ளது.

இச்செபத்தில் இறுதியாக பயன்படுத்தப்படும் "ஆமென்" என்பதும் 'விவிலியத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்'. ஆமென் (32+135= 167 முறை) என்பது எபிரேயத்தில் 'வினையெச்ச சொல்லாகப்' பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு 'உண்மையில்' (verily truly) என்ற பொருளில் வாக்கியத்தின் தொடக்கத்திலும் (மத் 5:18, 6:2: 13:17:,யோவா 1:51:, 3:5) 'அது அவ்வாறே அமையட்டும்' (So let it be) என்ற பொருளில் தனி அல்லது பொதுச்செபத்தின் இறுதியிலும், செபமாக கோவில்களில் பயன்படுத்தப் பட்ட திருப்பாடல்களின் இறுதியிலும் 'அவ்வேண்டலில் கேட்டது அனைத்தும் நிகழட்டும்' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது (திபா 41:13, 72:19, 89:52). அதேபோன்று கிரேக்க மொழியில் ' விரும்புவது நடக்கட்டும், உறுதியாக அமையட்டும், ஒத்துழைப்புத் தருகிறோம், நிறைவேறும் அளவு அமைவதாக, கடவுளின் இரக்கம் நிறைவேறுவதாக' என்று பல்வேறு யூதச் செபங்களின் இறுதியில் பயன்படுத்திய அதே 'ஆமென்' என்ற சொல்லை திருத்தூதர் காலத்திலிருந்து திருச்சபை பயன்படுத்தி வருகின்றது. (1கொரி 14:16), எனவே தான், இயேசு கற்றுத் தந்த செபத்தைத் தரும் மத்தேயு 'யூத செப மரபு' வழியில் 'ஆமென்' என்ற இறுதி பதில் மொழிச் சொல்லைப் பயன்படுத்துகின்றார். (மத் 6:9-13. லூக் 11:2-4). எனவே, இறையனுபவச் சூழலில் சொல்லக் கூடியதை செபமாக மாற்ற மதச்சார்புடைய சொல்லாக 'ஆமென்' பயன்படுத்தப்படுகிறது.

### *2. ஆ. மறைக்கல்வியின் போதனைகளுக்கு இறைவார்த்தை அடிப்படை*

மறைக்கல்வியில் 'அருளடையாளங்கள்' இறையியல் அல்லது விசுவாசக் கோட்பாடுகள், 'வாழ்வியல் மதிப்பீடுகள்' போன்ற பல கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இவைகள் அனைத்திற்கும் இறைவார்த்தைதான் அடிப்படை. இதற்கு சில எடுத்துக்காட்டுகளை அறிவோம்.

### 2.ஆ.1. அருளடையாளங்களுக்கு

தாய் திருச்சபை ஒவ்வொரு விசுவாசியின் வாழ்வின் வளர்ச்சியை முதிர்ச்சியை மனக்கண்முன் கொண்டு விவிலியத்தின் பின்னணியில் ஏழு அருளடையாளங்களை வழங்கியுள்ளது. 'அருளடையாளம் என்றால் என்ன? அது தரும் பலன் என்ன? அது எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது? மற்ற அருளடையாளங்களுடன் உள்ள தொடர்பு என்ன?' இப்படி பல கேள்விகளுக்கு மறைக்கல்வியில் பதில்கள் கற்றிருப்போம். ஆனால், ஒவ்வொரு அருளடையாளமும் இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டவை என்பதை அறியாமல்கூட இருப்பதற்கு வாய்ப்புண்டு. இதில் 'நற்கருணை' என்னும் அருளடையாளத்தைப் பற்றி மட்டும் அறிவோம்.

இயேசு தன்னுடைய இறுதிப் பாஸ்கா உணவின் போது 'இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்' (லூக் 22:19) என்றும் 'இந்தக் கிண்ணம் உங்களுக்காக சிந்தப்படுகின்ற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை' (லூக் 22:20) என்றும் கூறி 'நற்கருணை' யை ஏற்படுத்தினார். இந்த நற்கருணை தரும் பலனைப் பற்றி யோவா 6-இல் பல இடங்களில் காண்றோம். 'எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன்' (யோவா 6:56) "எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார்." (யோவா 6:54), இவ்வாறு மறைக்கல்வியில் "நற்கருணை" போன்ற அருளடையாளங்களைக் கற்றுக்கொள்ளும் போது, அதற்கு அடிப்படையாக 'இறைவார்த்தைதான்' அமைந்துள்ளது என்று அறிந்துகொள்கிறோம்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# கத்தோலிக்க பாடசாலைகளின் தலைமைத்துவ வழிகாட்டலே என்னை உன்னத நிலைக்கு உயர்த்தியது

### பத்திரிசியார் கல்லூரியில் யாழ் அரச அதிபர் திருமதி இமல்டா



கத்தோலிக்க திருச்சபை சார்ந்த பாடசாலை சமூகத்தில் இருந்து நான் பெற்றுக்கொண்ட இனிய நற்பண்புகள், ஒழுக்கம், கட்டுப்பாடு, தலைமைத்துவம் என்பன என்னை எமது மக்களை வழிநடத்தும், அவர்களுக்காக சேவையாற்றும் உன்னத நிலையை நான் அடைய வழிசமைத்தது. இந்த வழிகாட்டல் மூலம் இன்று நான் யாழ். அரச அதிபராக எமது மக்களுக்கு சேவையாற்றும் ஒரு உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறேன். அதனால் பெருமையடைகிறேன். கத்தோலிக்க திருச்சபைக்கு நன்றியுடையவளாக இருக்கிறேன் என யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமல்டா சுகுமார் தெரிவித்தார். யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது, இலங்கையின் முதலாவது பெண் அரச அதிபர் என்ற இந்த உயர்ந்த நிலையை நான் பெறுவதற்கு ஒரு பின்னணி இருந்தது. அதனை இன்று உங்கள்முன் கூறுவதையிட்டு பெருமையடைகின்றேன். எனது கல்வியை கத்தோலிக்க திருச்சபைச் சமுகத்திலேயே பெற்றுக்கொண்டேன். அருட்சகோதரிகளின் வழிநடத்தலின்கீழ் நான் சிறந்த, நிறைவான கல்வி அறிவையும், ஒழுக்கத்தையும், சமூகக் கட்டுப்பாட்டையும், சிறந்த தலைமைத்துவத்தையும் பெற்றுக்கொண்டேன். எனது வளர்ச்சியில் அதிகூடிய பங்கு கத்தோலிக்க திருச்சபைக்கே உண்டு. இதனால் இன்று நான் ஒரு பெண்ணாக இருந்தபோதும் இலங்கையின் முதற்பெண் அரச அதிபர் என்ற பெருமையைப் பெற்று நிமிர்ந்து நிற்கிறேன். இந்த நிலையை நான் எட்டுவதற்கு எனக்கு வழிகாட்டிய கத்தோலிக்க திருச்சபைக்கு என்றும் நான் நன்றி உடையவள். உங்கள் முன்னிலையில் இதனைக் கூறுவதையிட்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நான் அரச அதிபராகப் பணி செய்துள்ளேன். இந்த மாவட்டங்களில் எமது மக்களின் நல்வாழ்வுக்காக பாடுபட்டேன். அதேபோன்று இளைய தலைமுறையினராகிய நீங்களும் எமது மக்களுக்காகச் சேவையாற்றும் எதிர்காலத் தலைவர்களாக உருவாக வேண்டும் என்றார்.

# அமைச்சரின் குற்றச்சாட்டை கறிற்றாஸ் முற்றாக மறுக்கின்றது



செடேக் எனப்படும் இலங்கை கறிற்றாஸ் அமைப்பு விவசாயிகளை ஆர்ப்பாட்டம் செய்யும்படி தூண்டிவிட்டதாகவும், ஜெனீவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரின்போது இந்த அமைப்பினர் ஜெனிவாவில் இருந்ததாகவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குற்றம்சாட்டி இருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகளை கறிற்றாஸ் அமைப்பின் தலைவர் மேதகு கறல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை எந்த ஆதாரமும் அடிப்படைகளுமற்ற குற்றச்சாட்டக்கள் என முற்றாக மறுத்துள்ளார்.

இலங்கை கறிற்றாஸ் அமைப்பு இலங்கை அரசாங்கத்தோடும், அதிகாரிகளோடும் இணைந்து செயற்படுகின்ற ஒரு அமைப்பு எனறும, அது மக்கள் அனைவருக்கும் இன, மத, பேதமின்றி சேவையாற்றும் திருச்சபை சார்ந்த ஒரு அமைப்பு எனறும் கூறியுள்ளார்.

கறிற்றாஸ் அமைப்பு என்றுமே நாட்டின் இறையாண்மைக்கு எதிராகச் செயற்பட்டதில்லை என்றும் அது தொடர்ந்தும் தனது மக்கள்நலத் திட்டங்களை முன்னெடுக்கும் எனவும் தனது ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தலவில புனித ஆனாள் திருத்தலத் திருவிழா



சிலாப மறைமாவட்டத்தில் அமைந்துள்ள தலவில புனித ஆனாள் திருவிழா கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி ஞாயிறு அன்று இடம்பெற்றது. புனித ஆனாள் அன்னையின் திருச்சுருபம் பவனியாக எடுத்துவரப்படுவதையும் திருச்சுருப ஆசீர் வழங்கப்படுவதையும் காணலாம்.

# 80 ஆண்டுகள் நிறைவைக் காணும் பம்பலப்பிட்டி சென். மேரிஸ் தமிழ் பாடசாலை

பம்பலப்பிட்டி சென். மேரிஸ் தமிழ் பாடசாலை 80 ஆண்டுகள் நிறைவைக் காணுவதையிட்டு சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்ட கொழும்பு துணை ஆயர் இம்மானுவேல் ஆண்டகையையும் அருட்பணியாளர்கள் சோபன், துரம் (அமதி) மற்றும் பாடசாலை அதிபர் அவர்களையும் படங்களில் காணலாம்.



# வடகொழும்பில் வாழும் மக்களின் வீடுகளை உடைக்க இடமளிக்க முடியாது



வட கொழும்பில் வாழும் மக்களின் வீடுகளை அரசாங்கம் உடைப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. அதேவேளை, அடிப்படை வசதிகளின்றி சிறிய வீடுகளில், தோட்டங்களில் வாழும் மக்களுக்கு அப்பிரதேசத்திலேயே உள்ள அரச காணிகளில் வீடுகளை அமைத்து குடியிருக்கச்செய்ய வேண்டும் என கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். கடந்த மார்ச் மாதம் வட கொழும்பு அபிவிருத்தி உட்பட பல மக்கள் நலன்கள் தொடர்பான திட்டம் அடங்கிய மகஜரொன்றை ஐ.தே.க.வின் வட கொழும்பு முகாமையாளரும் மாநகர சபை உறுப்பினருமான மகேந்திர டி சில்வா கர்தினாலிடம் கையளித்து தமது எதிர்காலத் திட்டங்களை தெளிவுபடுத்துகையிலேயே கர்தினால் இவ்வாறு தெரிவித்தார்.

# கொழும்பில் நற்செய்தி நூல்களுக்கான குறுங்கால விரிவுரை ஆரம்ப விழா

கொழும்பு அருளாளர் ஜோசவ்வாஸ் இறையியல் கல்வியகத்தின் தமிழ் இறையியல் பிரிவில் இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு, 'நற்செய்தி நூல்களுக்கான ஓர் அறிமுகம்' என்ற குறுங்கால பயிற்சிநெறி மார்ச் 03ஆம் திகதி துணை ஆயர் மேதகு இம்மானுவேல் ஆண்டகையினால் அக்குவைனாஸ் கல்லூரியில் அரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

# பாதிக்கப்பட்ட மீனவ சமூகத்தினருக்கு மானியம் வழங்க ஜனாதிபதி அறிவுறுத்தல

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, சிலாப மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை, இன்னும் அநேக பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களை அலரி மாளிகையில் மார்ச் 3ந் திகதி சந்தித்தார். அங்கு நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக மீனவ சமூகத்தினருக்கு வழங்கும் எரிபொருள் மானியத்தை உடனடியாக அதிகரிக்குமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இதனால் மீனவ சமூகம் ஆறுதல் அடைந்துள்ளது.

# தேவத்தையில் சிறுவர் தின விழா



தேவத்தை பசிலிக்கா முன்றலில் மார்ச் 3ம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் 64வது சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில் கூடியிருந்த சிறுவர்களுக்கு பேராயர் மறையுரை ஆற்றுகையில், "இறைவனது அழைப்பிற்கு நாம் செவிகொடுக்க வேண்டுமெனவும், இறைவனிலே நிலைத்து அவரை உறுதியாகப் பற்றிக்கொண்டு வாழவேண்டுமெனவும், திருவிவிலியம் நமக்குக் கூறுகின்றது" என்று கூறினார்.

# கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயரின் சிறப்புப் பதிலாளர்கள்

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயரின் சிறப்புப் பதிலாளர்களாக (Episcopal Vicars) பின்வருவோர் பின்வரும் வலயங்களுக்கு (Regions) நியமிக்கப்பட்டுள்ளனர்.

1. அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ அடிகளார் - கொழும்பு கிழக்கு வலயம்
2. அருட்தந்தை அன்ரனி பெர்ணாண்டோபுள்ளே அடிகளார் - கொழும்பு தெற்கு வலயம்.
3. அருட்தந்தை பட்றிக் பெரேரா அடிகளார் - கொழும்பு வடக்கு, நீர்கொழும்பு உப வலயம்.
4. அருட்தந்தை சாந்திகுமார் வெலிவிற்ற அடிகளார் - கொழும்பு வடக்கு ஜா – எல உப வலயம்.

# இரத்தினபுரிக்கு புதிய குருமுதல்வர்



இரத்தினபுரி மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வராக அருட்திரு டேமியன் பெனாண்டோ அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு கிளிட்டஸ் சந்திரசிறி பெரேரா ஆண்டகை கடந்த மார்ச் 1ம் திகதியன்று இந்த நியமனத்தை அறிவித்தார்.

அருட்தந்தை டேமியன் 1978ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 2002 - 2006 வரை இரத்தினபுரி மறைமாவட்டத்தின் பரிபாலகராக இருந்துவந்தார். அத்துடன் கறிற்றாஸ் சிறிலங்கா நிறுவனத்தின் இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பௌத்த மத குருமார் படுகொலைக்கு இலங்கை ஆயர் பேரவை அதிர்ச்சி!

கோட்டே ரஜ மஹா விஹாரையில் விஹாராதிபதிகளான வண. பிட்டிகல ஜினசிறி தேரோ, வண. பொரலஸ்கமுவ குணரதன தேரோ ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளமை குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தனது ஆழ்ந்த அதிர்ச்சியைத் தெரிவித்துள்ளது.

மேலும் இலங்கையின் ஆயர்கள், ரஜமஹா விஹாரையின் பிரதம விஹாராதிபதிக்கும் சாசன சேவக மண்டலத்திற்கும் தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான வன்முறைச் சம்பவங்களை உடனடியாக வேரோடு ஒழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்தை ஆயர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் கத்தோலிக்க உலகத்துடன் கைகோர்த்துப் பயணிக்க

# இந்து உலகம் முன்வர வேண்டும்

"நீதிக்கான பயணத்தில் தர்மத்தின் சிலுவையை கத்தோலிக்க உலகம் சுமக்கின்றது."

*வீரகேசரிப் பத்திரிகையின் பிரதான ஆசிரியர் திரு வி. தேவராஜ் அவர்கள் மார்ச் 11ஆம் திகதி வீரகேசரியில் எழுதிய கட்டுரை*

தமிழ் கத்தோலிக்க உலகம் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைப் பயணத்தில் தெளிவான ஒரு முடிவை எடுத்துள்ளது. சிங்கள தலைமைத்துவங்களுக்கும் தென்னிலங்கை பேரினவாத சக்திகளுக்கும் இது கசப்பான, ஜீரணிக்க முடியாத செய்தியாக இருக்கின்றது. எனவேதான் தமிழ் கத்தோலிக்க உலகத்தின்மீது சிங்களத் தலைமைகளும், பேரினவாதிகளும் சேறுபூசத் தொடங்கியுள்ளனர்.

பாவப்பட்ட மக்களுக்காகவே இயேசு சிலுவையைச் சுமந்தார். அரசியல் ரீதியில் அனாதைகளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக அவர்கள் இந்துவாக இருக்கலாம் அல்லது வேறு மதத்தினராகவும் இருக்கலாம். இவர்கள் அனைவருக்காகவும் மத வேறுபாடுகளுக்கு அப்பால் நீதிக்கான பயணத்தில் தர்மத்தின் சிலுவையை கத்தோலிக்க உலகம் சுமக்கின்றது.

போரின்போது பாதிக்கப்பட்ட மக்களை அரவணைத்து ஆதரித்தது தமிழ் கத்தோலிக்க உலகம். சுனாமி பேரழிவின்போது அனைவரும் தெற்கை நோக்கி விழிதிறந்து பார்த்திருக்கையில் முல்லைத்தீவில் நடைபெற்ற கோரத்தை பதிவுசெய்ய களத்திற்குச் சென்றபோது முல்லைத்தீவிலும் ஏனைய பகுதிகளிலும் தமிழ் கத்தோலிக்க உலகம் அனாதரவாக நின்ற மக்களுடன் மக்களாக நின்று சோகத்தைப் பகிர்ந்துகொண்டதுடன் அரவணைத்து ஆதரவளித்த நிகழ்வுகள் என்னை மெய் சிலிர்க்க வைத்தன.

போரின்போது இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதிலும், அவர்களைக் காப்பாற்றுவதிலும் தமிழ் கத்தோலிக்க உலகம் அரும்பணியாற்றியது. முள்ளிவாய்க்கால் போருக்குப்பின் காணாமல்போன மக்களை கணக்கிட்டு நல்லிணக்க ஆணைக்குழுமுன் சமர்ப்பித்தது. தற்பொழுது அரசாங்கம் நியமித்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு இலங்கைக்கு ஐ.நா. மனித உரிமை பேரவை அழுத்தம் கொடுக்க வேண்டும், நல்லிணக்க ஆணைக்குழுவினால் கையாளப்பட்டிராத பதிலளிக்கும் கடப்பாட்டு விவகாரங்கள் குறித்து சர்வதேச விசாரணையை இலங்கை ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்துமாறும் தமிழ் கத்தோலிக்க உலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

சரியான தருணத்தில் சரியான முடிவை தமிழ் கத்தோலிக்க உலகம் எடுத்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும். ஆன்மீக, சமூக பணிகளுடன் மாத்திரம் தன்னை இணைத்துக் கொண்ட தமிழ் கத்தோலிக்க உலகம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக ஐ.நா, மனித உரிமைகள் பேரவையிடம் நீதி கேட்டு நிற்கின்றது.

இலங்கை கத்தோலிக்க திருச்சபையானது ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்ப்பாக அதிவணக்கத்திற்குரிய கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். மேற்குலக சக்திகளின் இந்த மாதிரியான முயற்சிகள் இலங்கை மக்களின் புத்திசாலித்தனத்தை ஏளனப்படுத்துவதாக இருப்பதாகவும் அவர் கூறுகின்றார். புலிகளுக்கெதிரான யுத்தத்தின் இறுதிக்கட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு கத்தோலிக்க திருச்சபை இதுவரை தவறிவிட்டது என்று அருட்தந்தை ஜெராட் ரொஸாரியோ பி.பி.சியின் "சந்தேசிய" சேவைக்கு கூறியுள்ளதை இங்கு கவனத்தில்கொள்வது நல்லது. மொத்தத்தில் கத்தோலிக்க உலகம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதி விடயத்தில் பிளவுபட்டு நிற்கின்றது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக தமிழ் கத்தோலிக்க உலகம் நீதிகோரி உலகத்தின்முன் நிற்கின்றது.

தென்னிலங்கை அரசியல்வாதிகளும், பேரினவாத சக்திகளும் தமிழ் கத்தோலிக்க உலகத்தின்மீது வசைபாடத் தொடங்கியுள்ளனர். தனி ஈழம் அமைத்தால்தான் பேராயராக வரலாம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் நினைத்துக்கொண்டிருந்தார் என அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றம் சாட்டியுள்ளார். போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது கத்தோலிக்க சபையின் நிலைப்பாடு அல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேராயர் அந்தஸ்த்திற்காக தமிழ் மக்களுக்கான நீதியையும், நியாயத்தையும் அடகு வைக்கும் நிலையிலோ அல்லது சமரசங்காணும் நிலையிலோ ஆண்டகை இராயப்பு ஜோசப் அவர்கள் உட்பட தமிழ் கத்தோலிக்க உலகம் தயாராக இல்லை என்பதை தென்னிலங்கை சக்திகள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

ஐ. நா. நிபுணர் குழு அறிக்கை வெளிவந்தபொழுது அதற்கு எதிராக அறிக்கை விடுமாறு தென்னிலங்கைச் சக்திகள் கோரியபோதும் தமிழ் கத்தோலிக்க உலகம் செவிசாய்க்கவில்லை என்பதையும் இங்கு பதிவுசெய்ய விரும்புகிறோம். இவ்வேளையில் தமிழ் மக்கள் மத வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைய வேண்டிய காலகட்டத்திற்குள் நுழைந்துள்ளனர்.

இலங்கையில் பௌத்த தேசியவாதத்தை அநகாரிக தர்மபால முன்னெடுத்த வேளையில்தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இந்து மறுமலர்ச்சிக்கு வித்திட்டார்.

அநகாரிக தர்மபால வெள்ளையர்மீது கண்டனக் கணைகளை வீசி சிங்கள மக்கள் மத்தியில் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் வளர்ச்சிக்கு பணியாற்றினார். ஆனால், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இந்து மறுமலர்ச்சியுடன் தமிழ் மக்களுக்கான இயக்கத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டார். அதற்கும் அப்பால் அவரது செயற்பாடுகள் செல்லவில்லை. உண்மையில் சிங்கள பௌத்த தேசியவாதத்துடன் தமிழ் இந்து தேசியவாதம் சமாந்தரமாக முன்னெடுக்கப்பட்டிருப்பின் இன்றைய அரசியல் நிலைமை மாறுபாடானதாக இருந்திருக்கும். ஆனால் தமிழ்த்தரப்பு இது குறித்து அன்று சிந்தித்துச் செயலாற்ற தவறிவிட்டது. ஆனால் இன்று சுமார் 90 வருடங்களுக்குப் பிறகு தமிழ்த்தேசியவாதத்துடன் இணைந்து அதனை அரவணைத்துப் பயணம் மேற்கொள்ளும் முடிவினை தமிழ் கத்தோலிக்க உலகம் எடுத்திருக்கிறது.

தற்பொழுது இந்து மத பீடங்கள், அமைப்புக்கள் எவ்வாறான முடிவை எடுக்கப்போகின்றன என்பதே இன்றைய கேள்வியாகும். சுமார் 90 வருடங்களுக்கு முன் விட்ட அதே பிழையை இந்து தமிழ் உலகம் மீண்டும் செய்யப் போகின்றதா? அல்லது தமிழ் மக்களுக்கான நீதிகோரி தமிழ் கத்தோலிக்க உலகத்துடன் இணைந்து பயணிக்கப் போகின்றதா? என்ற கேள்விகளுக்கான பதிலை இந்து தமிழ் உலகம் விரைந்து எடுக்க வேண்டிய நிலையில் உள்ளது.

தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைப்பயணத்தில் சிங்கள தலைமைத்துவங்களும் தென்னிலங்கைச் சக்திகளும் உரிமைகளை வழங்குமென்று அறுபது வருடங்களுக்குமேல் காத்திருந்தனர். ஆனால் பயனில்லை. ஆனால் இலங்கையின் மொழியில் பேசப்பட்ட 'பயங்கரவாதத்தை' அடக்குவதற்கு அமெரிக்கா பல வழிகளிலும் உதவியது. அதற்கு பதிலீடாக இன விவகாரத்திற்கான தீர்வைக் காணுமாறு அமெரிக்கா முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை இணங்கியது.

ஆனால் இலங்கை அரசாங்கம் போர் முடிவடைந்து 3 வருடங்களாகியும் வாக்குறுதியை நிறைவேற்றுவதாக இல்லை. தமிழ் மக்களைப்போன்று அமெரிக்காவும் பல தசாப்தங்களுக்கு அமைதிகாக்க விரும்பவில்லை. இலங்கை அரசாங்கத்தை நம்பவும் தயாராக இல்லை. எனவேதான் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை உருவாக்கிய நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துமாறு அமெரிக்கா கோரி நிற்கின்றது. சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்காக அர்த்த புஷ்டியாக குறைந்தபட்ச நடவடிக்கையாவது எடுக்க முன்வந்துள்ளது. இன்றைய நிலையில் தமிழ் இந்து உலகம் தமிழ் மக்களுக்கான நீதிப்பயணத்தில் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் தமிழ் கத்தோலிக்க உலகத்துடன் இணைந்து பயணம்போவதே இன்றைய தேவையாகும்.■

## அச்சுறுத்தல் குறித்து.... 1ஆம் பக்கத் தொடர்

இலங்கைச் சூழல் குறித்து மன்னார் ஆயர் மற்றும் வடக்கிலுள்ள 30 கத்தோலிக்க குருமார்கள் சில நாட்களுக்கு முன்பு கடிதம் எழுதினர். இதையடுத்து அவர்கள் மிரட்டப்பட்டதாக நாட்டின் வடக்கு மற்றும் தெற்கில் உள்ள கிறிஸ்தவ குருமார்களும் பொதுமக்களும் ஐ.நா.விடம் தற்போது தெரிவித்துள்ளனர்.

வட பகுதியிலிருக்கும் கத்தோலிக்க குருக்கள் மக்களின் கருத்தை பிரதிபலிக்கும் நோக்கிலேயே ஐ.நா.வுக்கு கடிதத்தை எழுதியதாக பி.பி.சி.யிடம் அருட்தந்தை டொமினிக் றொகான் தெரிவித்தார். அந்தக் கடிதம் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு எதிரானது என்று தவறாக பொருள் கொள்ளப்பட்டதாகவும் அதனால் சில மிரட்டல்கள் வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதே நேரம் மன்னார் ஆயர் மிரட்டப்பட்டதாக தமக்கு ஏதும் புகார்கள் வரவில்லை என்று கொழும்பு மறைமாவட்டத்தின் சார்பில் பேசவல்ல அருட்தந்தை றெஜினோல்ட் சப்ரமாது தெரிவித்தார்.

## மக்கள் சார்பாக செயல்படுவது ......

5ம் பக்கத் தொடர்ச்சி

மேலும், "*நீதியை நிலைநாட்ட மேற்கொள்ளும் செயற்பாடும், உலகை உருமாற்ற மேற்கொள்ளும் ஈடுபாடும் திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப் பணியின் மையக் கூறுகளுள் ஒன்றாகும்*" (1971- உரோமையில் ஒன்றுகூடிய ஆயர்மன்ற அறிக்கை).

ஆக, நற்செய்தியின் ஒளியில் தளத்திருச்சபைகள் தாங்கள் வாழ்கின்ற சமூகத்தின் பிரச்சினைகளுக்கு படைப்பாற்றலோடு பதில் காணவேண்டிய அவசியம் (6ம் பாவுலு, அரசியல் அதிகாரம், கருத்தமைவு, சமூக ஈடுபாடு, எண். 4). இங்ஙனம் பல்வேறு காலகட்டங்களில் வலியுறுத்தப்படும் திருச்சபையின் படிப்பினையின் ஒளியில், நம் சூழமைவில் மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் குழுவினர் செயல்பட்டிருப்பது தம் கடமையும் கடப்பாடு மட்டுமேயாகும்.

## இறைவார்த்தை அடிப்படையில் மறைக்கல்வி 6ஆம் பக்கத் தொடர்ச்சி

**2.ஆ.2. இறையியல் அல்லது விசுவாசக் கோட்பாடுகளுக்கு**

கருத்தியல் என்பது ஒன்றைத் தாங்கும் அடித்தளம் எனலாம். இறையியல் கோட்பாடுகள் கிறிஸ்தவ வாழ்வையும் உறவையும் எதிர்காலத்தையும் இதுபோன்ற அனைத்தையும் புரிந்து வாழ்வதற்கு உதவும் கருத்தியலாகும். இக்கருத்தியல்கள் நம்பிக்கை வாழ்வுக்கு வழிகாட்டியாக அமையும்போது அவைகள் 'விசுவாசக் கோட்பாடுகளாக' மாறுகின்றன. மறைக்கல்வியில் பல்வேறு இறையியல் அல்லது விசுவாசக் கோட்பாடுகளைக் கற்றுக்கொள்கிறோம்.

**2.ஆ.3. வாழ்வியல் மதிப்பீடுகள்**

மறைக்கல்வியில் சிறு பருவத்திலிருந்து பல்வேறு மறைக் கல்விப் பாடங்களில் வாழ்வுக்கு உகந்த வாழ்வியல் மதிப்பீடுகளைக் கற்றுக்கொள்கிறோம். இவைகள் அனைத்திற்கும் இறைவார்த்தைதான் அடிப்படைக் காரணம், இறைவார்த்தை அடிப்படையில் உருவாக்கப்படும் மதிப்பீடுகள் 'இயேசுவின் கண்கள் கொண்டு பார்க்க கற்றுத்தருகின்றன.

மத்தேயுவின் மலைப்பொழிவு (மத் 5:1-7:29) பல்வேறு புதிய கிறிஸ்தவ வாழ்வுக்கான மதிப்பீடுகளைக் கற்றுத்தருகின்றது.

இது தவிர லூக். 9:51-19:27இல் சீடத்துவ வாழ்வில் இருக்க வேண்டிய வாழ்வியல் மதிப்பீடுகளை இயேசு கற்றுத்தருகின்றார். இதேபோன்று பல்வேறு திருத்தூதர்களும் தங்களுடைய மடல்களில் குடும்ப உறுப்பினர் முதல் சமுதாயத்தில் உயர் பதவி கொண்டுள்ளோர் அனைவரும் கொண்டிருக்க வேண்டிய மாற்று வாழ்வியல் மதிப்பீடுகள் பற்றி விவரிக்கின்றனர்.

எ.கா. திருமண வாழ்வு பற்றி -1 கொரி 7:1-16: கணவன் - மனைவி உறவு பற்றி - எபே 5:21-33, 1 பேது 3:17, குடும்ப ஒழுக்கம் பற்றி கொலே. 3:18-25, கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழ்வதற்கான மதிப்பீடுகள் 1 தெச 4:1-12.

**நோக்கம் ஒன்றாக வேண்டும்**

சுருக்கமாக, இறைவார்த்தை எல்லா நிலைகளிலும் வாழும் மனிதர்களுக்கு 'ஒட்டுமொத்த ஆளுமை உருவாக்கத்திற்கு' வழிகாட்டி, இவ்வுலக வாழ்வைப் பொறுத்தமட்டில் கொண்டிருக்கவேண்டிய மனநிலையைக் கற்றுத்தந்து 'இயேசுவின் சீடத்துவ வாழ்வை' வாழ்ந்திட பயிற்சி தருகின்றது.

எனவே, இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் மறைக்கல்வியும் 'முழு ஆளுமை உருவாக்கத்திற்கு' வழிவகுக்க வேண்டும். அதாவது இறைவார்த்தையைக் கற்றுக்கொள்வோரின் நோக்கமும் அதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் மறைக்கல்வியின் நோக்கமும் 'முழு மனித உருவாக்கமும்' 'இயேசுவின் சீடத்துவ வாழ்வை' வாழ்வதற்குமான பயிற்சியுமாகும்.

இவ்வாறு இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் மறைக்கல்வி 'குறுகிய மனப்பான்மைக்குள்' புதைந்து போகாமலும் நிறுவனத்தன்மைக்குள் அடைபட்டுப் போகாமலும் 'முழுமனித ஆளுமை உருவாக்கத்திற்கும்' விசுவாச வாழ்வான 'இயேசுவின் சீடத்துவ வாழ்வுக்கும்' வழிவகுக்கின்றது.

எனவே, அனைவரும் இறைவார்த்தையின் அடிப்படையான மறைக்கல்வி முறையை அறிந்துகொள்ள, மறைக்கல்வியின் அடிப்படைச் செபங்கள் கொண்ட நூல்களையும் மறைக்கல்வி சார்ந்த நூல்களை மட்டும் தெரிந்துகொண்டால் போதாது, மாறாக திருச்சபையின் மரபுக்கும் என்றென்றும் வழிகாட்டியாக இருக்கும் விவிலியத்தை முழுவதும் அறியவேண்டும். அப்பொழுதுதான் மறைக்கல்வி கற்றவர்கள் என்ற முறையில் ஆடுகள் திருடும் கூட்டங்கள் கேட்கும் கேள்விகளுக்கு தகுந்த பதில்கள் சொல்லும் தெளிவு பிறக்கும். அத்தோடு நின்றுவிடாது இறைவார்த்தையை வாழும் பக்குவமும் பெறமுடியும்.■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# பல்வேறு நிலைகளில் வாழும் நம் சகோதரர்களுக்கு நாம் மறைப்பணியாளர்களாக வேண்டும்

### பங்குத் தரிசிப்பின்போது திருத்தந்தை அழைப்பு

உலகின் பல்வேறு பகுதிகளில் மாணவர்கள், தொழிலாளர்கள் எனப் பல்வேறு நிலைகளில் வாழும் நம் சகோதரர்களுக்கு மறைப்பணியாளர்களாச் செயல்படவேண்டிய கடமை ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் உள்ளது என கடந்த மார்ச் மாதம் 04ம் திகதி மேற்கொண்ட பங்குத்தள சந்திப்பின்போது திருத்தந்தை 16ம் பெனடிக்ட் குறிப்பிட்டார்.

உரோம் நகரின் ஆயர் என்ற முறையில் உரோம் நகரில் தென்பகுதியிலுள்ள தொர்ரினோவின் புனித ஜோன் பப்டிஸ்ட் தெ டிலசால் பங்குத்தளம் சென்ற பாப்பிறை, உண்மையான வாழ்வை நோக்கி நம்மை வழிநடத்திச் செல்லாத தவறான போதனைகள் நம்மை வந்தடையும்வரை காத்திருக்காமல் நாமே உண்மை நற்செய்தியின் பணியாளர்களாக மாறவேண்டும் என விசுவாசிகளுக்கு அழைப்பு விடுத்தார். விசுவாசம் என்பது ஒன்றிணைந்து வாழப்படவேண்டிய ஒன்று என்பதை வலியுறுத்திய பாப்பிறை, இவ்விசுவாச வாழ்வை வாழும் முறையை நாம் பங்குதளங்களின்வழி அறிந்துகொள்கிறோம் என்றார்.

நவீன சமூகத்தின் மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கும் 'மதம் குறித்த அறியாமை' நீக்கப்பட துவங்கவிருக்கும் 'விசுவாச ஆண்டில்' ஒவ்வொரு பங்குத்தளமும் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற அழைப்பையும் பாப்பிறை தன் பங்குத் தரிசிப்பின்போது முன்வைத்தார்.

## வத்திக்கானின் இரகசிய ஆவணங்கள் பொது மக்களின் பார்வைக்கு



வத்திக்கான் தனது வரலாற்றில் முதன் முறையாக தனது இரகசிய ஆவணங்களிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட வரலாற்று ஆவணங்களைப் பொது மக்களின் பார்வைக்கு வைத்துள்ளது.

வத்திக்கானின் இரகசிய ஆவணக் காப்பகத்தின் 400வது ஆண்டைக் சிறப்பிக்கும் நோக்கத்தில் உரோம் காப்பிற்றோலின் (Capitoline) அருங்காட்சியகத்தில், "Lux in Arcana" என்ற தலைப்பில் இந்த ஆவணக் கண்காட்சி வைக்கப்பட்டுள்ளது.

1521ம் ஆண்டில் திருத்தந்தை 9ம் சிங்கராயர் ஜேர்மன் துறவி மார்ட்டின் லூத்தரைத் திருஅவைக்குப் புறம்பாக்கியது, 1530ம் ஆண்டில் இங்கிலாந்து மன்னர் எட்டாம் ஹென்றி திருமண முறிவுக்காகத் திருத்தந்தை 8ம் கிளமெண்டிடம் விண்ணப்பித்தது, வட அமெரிக்க இந்தியப் பூர்வீக இனத் தலைவர் ஒரு மரப்பட்டையில் திருத்தந்தை 13ம் சிங்கராயரை "செபங்களின் பெரும் போதகர்" என எழுதியது உட்பட பல முக்கிய ஆவணங்கள் இக்கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

வத்திக்கானின் ஆவணக் காப்பகத்தில் 8ம் நூற்றாண்டு ஆவணங்கள் உட்பட 35 ஆயிரம் ஆவணங்கள் உள்ளன. பெப்ரவரி 29ம் தேதியன்று திறக்கப்பட்ட இவ்வருங்காட்சியகம் வருகிற செப்டம்பர் 09ம் தேதி வரை இருக்கும்.

## ஈரான் கிறிஸ்தவ போதகரின் விடுதலைக்கு குரல் எழுப்பும் ஜேர்மானியர்கள்



ஈரானில் மரண தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ள அந்நாட்டு கிறிஸ்தவ போதகர் யூசுப் நாதர்கனியை தூக்கிலிடுவதை நிறுத்தவேண்டுமென ஜேர்மன் நாடு கோரிக்கை விடுத்துள்ளது.

ஈரானில் முஸ்லீமாக பிறந்து, தனது 19வது வயதில் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய நாதர்கனி, ஈரான் கிறிஸ்தவ சபை என்ற பெயரில் ஒரு திருச்சபையை நிறுவி, கிறிஸ்தவச் சமயப் பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

இதற்கிடையே, கடவுளை நிந்தித்த குற்றத்திற்காக, கடந்த 2009ம் ஆண்டு அக்டோபரில் அவரைக் கைது செய்த ஈரான் அரசு, நாட்டுப் பாதுகாப்பு தொடர்புடைய குற்றங்களில் ஈடுபட்டதாக அவர்மீது வழக்கு பதிவு செய்தது.

கிறிஸ்தவப் போதகரைத் தூக்கிலிடும் தண்டனையை நிறுத்த வேண்டும் என்று ஈரான் நாட்டுத் தூதுவருக்கு, ஜெர்மனியின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

கிறிஸ்தவத்திற்கு மதம் மாறி கிறிஸ்தவப் போதனைகளில் ஈடுபட்ட யூசுப் நாதர்கனிமீது கடுமையான குற்றங்கள் சுமத்தப்பட்டிருப்பதால் எந்த நேரமும் தண்டனை நிறைவேற்றப்படலாம் என்று மனித உரிமை ஆர்வலர்கள் அஞ்சுகின்றனர்.

## திருத்தந்தையின் மூத்த சகோதரர் எழுதிய நூலின் ஆங்கிலப் பதிப்பு



திருத்தந்தையும் அவர் சகோதரரும்

கடந்த 80 ஆண்டுகளுக்கும் மேலாக திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களுடன் தனக்குள்ள உறவை விவரித்து, குருவாக இருக்கும் திருத்தந்தையின் மூத்த சகோதரர் பேரருட்திரு ஜோர்ச் றற்சிஞ்சர் (Georg Ratzinger) எழுதியுள்ள ஒரு புத்தகம் மார்ச் 01ம் தேதியன்று ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது.

"என் சகோதரர், பாப்பிறை" "My Brother the Pope" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளியிடப்படும் இந்த நூல், மிக்கேல் ஹேஸ்மான் (Michael Hesemann) என்ற ஜெர்மன் நாட்டு எழுத்தாளர் பேரருட்திரு ஜோர்ச் றற்சிஞ்சர் அவர்களுடன் மேற்கொண்ட பல நேர்காணல்களின் தொகுப்பாக சென்ற ஆண்டு ஜேர்மன் மொழியில் வெளியாகியிருந்தது.

## தனக்கு தியானம் வழங்கிய கர்தினாலுக்கு திருத்தந்தை நன்றியும் பாராட்டும்



நாம் திருமுழுக்கில் இறைவனோடு ஒன்றிப்பு அடைந்த பேருண்மையை மீண்டும் கண்டுணருவதற்கு அமைதி, செபம், குறிப்பாக திருநற்கருணை ஆராதனை வழியாக இந்தத் தியான நாட்களில் தங்களை வழிநடத்திச் சென்றதற்கு கர்தினால் லோறன்ற் மொன்செங்வோ பசின்யாவுக்கு (Laurent Monsengwo Pasinya) திருத்தந்தை 16ம் பெனடிக்ட் நன்றி தெரிவித்தார்.

திருப்பீடத் தலைமையக அதிகாரிகளுடன் வத்திக்கானில் ஒரு வாரம் தியானம் செய்து மார்ச் 04ம் தேதி காலை அதனை முடித்துள்ள திருத்தந்தை, தங்களுக்குத் தியானச் சிந்தனைகளை வழங்கிய கொங்கோ நாட்டு கர்தினாலுக்கு எழுதிய நன்றிக் கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்தத் தியானச் சிந்தனைகளை, கர்தினால் வழங்கிய விதம் ஆபிரிக்கத் திருஅவையின் விசுவாசத்திற்குச் சிறப்பான சான்றுபகர்ந்ததை உணர முடிந்தது எனவும் பாராட்டிய திருத்தந்தை, இத்தியானச் சிந்தனைகளுக்கு ஏற்ப, அவ்வப்போது அவர் கூறிய அழகிய கதைகள் குறிப்பாக பெரும்பாலான ஆபிரிக்கக் கதைகள் சிந்திக்கக்கூடியதாகவும், தியானத்திற்கு உதவியாகவும் இருந்தன என்று திருத்தந்தை மேலும் கூறினார்.

## உலகில் 200 கோடிக்கு மேற்பட்ட மக்களுக்கு சமய சுதந்திரம் மறுக்கப்படுகின்றது

உலகில் 200 கோடிக்கு மேற்பட்ட மக்களுக்குச் சமய சுதந்திரம் மறுக்கப்படுகின்றது என்று வத்திக்கான் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

ஜெனிவாவிலுள்ள ஐ. நா. தலைமை அலுவலகங்களுக்கான திருப்பீடத்தின் நிரந்தரப் பார்வையாளர் பேராயர் சில்வானோ தொமாசி ஐ. நா மனித உரிமைகள் அவையில் பேசியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

உலகில் அதிகரித்து வரும் மதங்கள்மீதான கட்டுப்பாடுகள் 220 கோடிக்கு அதிகமான மக்களைப் பாதித்துள்ளன. பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கும் அவை அன்றாடம் அமுல்படுத்தப்படும் விதத்திற்குமான இடைவெளி அதிகரித்து வருகிறது.

## புனித பூமிக்கு விஜயம் செய்த இந்தியத் திருச்சபைத் தலைவர்கள்



புனித பூமியில் இந்தியர்கள் திருப்பயணங்களை மேற்கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டும் ஒரு முயற்சியாக, இஸ்ரேல் நாட்டின் சுற்றுலாத்துறை விடுத்த அழைப்பின்பேரில், இந்தியத் திரு அவையின் தலைவர்கள் மார்ச் 04ம் திகதி முதல் 08ம் திகதி வரை அந்நாட்டில் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளச் சென்றனர்.

இந்திய ஆயர் பேரவைத் தலைவர் கர்தினால் ஆஸ்வால்ட் கிரேசியஸ், அண்மையில் கர்தினாலாக உயர்த்தப்பட்ட சீரோமலபார் திருஅவைத் தலைவர் ஜார்ஜ் ஆலஞ்சேரி, கோவா மற்றும் டாமன் தலைமைப் பேராயர் felipe Neri Serrao, திருவனந்தபுரம் பேராயர் சூசை பாக்கியம் ஆகியோர் உட்பட பல கத்தோலிக்கத் திருஅவையின் தலைவர்களையும், இன்னும் பிற கிறிஸ்தவ சபைகளின் தலைவர்களையும் இஸ்ரேல் நாடு அழைத்திருந்தது.

இயேசு பாடுபட்டு இறந்த கல்வாரிக் குன்று, அவரது கல்லறை, மற்றும் அவர் இரவு உணவு அருந்திய அறை ஆகிய அனைத்தையும் தரிசித்த இக்குழுவினர் இஸ்ரேல் அரசுத் தலைவர்களுடனும், மற்ற யூத மதத் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர்.

இந்தியாவில் இருந்து புனித பூமிக்கு ஆயிரக்கணக்கானோர் ஒவ்வோர் ஆண்டும் புனித பயணங்களை மேற்கொள்வதால், அந்தப் பழக்கத்தை இன்னும் தீவிரப்படுத்தும் திட்டங்கள் இந்தக் குழுவினர் மேற்கொண்ட பயணத்தில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

## மனித உரிமைகள் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதை விவிலியத்தின் மூலம் கற்றுக்கொண்டேன்

### கியூபா நாட்டின் புரட்சியாளர்

மனிதர்களின் உரிமைகளும் சுதந்திரமும் எப்போதும் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதை விவிலியத்தின் மூலம் தான் கற்றுக்கொண்டதாக கியூபா நாட்டின் புரட்சியாளர்களில் ஒருவரான ஜோசே டானியல் வெறர் (Jose daniel ferrer) கூறினார்.

2003ம் ஆண்டில் கியூபா நாட்டில் கம்யூனிச ஆட்சிக்கு எதிராக எழுந்த புரட்சிக்குத் தலைமை ஏற்று நடத்தியவர்களில் ஒருவரான வெறர் உட்பட 75 பேருக்கு கியூபா அரசு 25 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை வழங்கியது.

கத்தோலிக்கத் திருஅவை கியூபா அரசுடன் மேற்கொண்ட முயற்சிகளால் 2011ம் ஆண்டு இந்த அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இவர்களில் வெறர் ஸ்பெயின் நாட்டுக்குச் சென்று குடியேறும் வாய்ப்பை மறுத்துவிட்டு, கியூபாவிலேயே தங்கி அங்கு அரசியல் மாற்றத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இதனால் மீண்டும் கைது செய்யப்பட்டு 28.02.2012 அன்று விடுதலை செய்யப்பட்டார்.

தனது நாட்டை கம்யூனிச ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க முயற்சிகளைத் தொடர்வதே தனக்கு விவிலியம் தரும் அழைப்பு என்றும் அருளாளர் இரண்டாம் ஜோன் போல் கூறியுள்ள பல கருத்துக்கள் தன் வாழ்வை வழிநடத்துகின்றன என்றும் வெறர் கூறினார்.

அருளாளர் இரண்டாம் ஜோன் போல் தனி மனித விடுதலையைப் பற்றி தெளிவாகக் கூறியிருந்தாலும், அவரோ, வேறு திருத்தந்தையர்களோ கியூபா நாட்டுக்கு முடியாது



என்றும், இந்நாட்டின் விடுதலையைப் பெறுவது நாட்டு மக்களின் முக்கிய கடமையே என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மார்ச் மாத இறுதியில் 25 முதல் 28 வரை திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கியூபா நாட்டிற்கு திருப்பயணம் மேற்கொள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

## அருட்பணியாளர் அன்புராசா (அமதி) எழுதும்

### சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர்

### தொடர் 07.

**சுருக்கமாக சுவையாகப் பேசுங்க:**

குறிப்பிட்ட ஒரு நிகழ்வில் உரை நிகழ்த்த இருந்த ஒருவர் பார்வையாளர்களைப் பார்த்து, "நான் எவ்வளவு நேரம் உரையாற்றலாம்?" என இரண்டு மூன்று தடவைகள் கேட்டுவிட்டார். இவரின் 'கடி உரை'யை ஏற்கனவே அறிந்திருந்த - படியால் அம்மக்களுள் ஒருவன் எழுந்து துணிவோடு, "ஐயா நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் உரையாற்றலாம். ஆனால் நாங்கள் அரை மணித்தியாலயந்தான் இருப்போம்" என்றான் மக்களின் சார்பாக. எல்லாரும் கைதட்டி ஆர்ப்பரித்ததில் இருந்து மக்களின் கருத்தும் அதுவென ஓரளவிற்குப் புரிந்தது.

**நேரத்தை கவனத்தில் கொள்வதற்கு நன்றி:**

லூர்து திருத்தலத்தில் மூன்று ஆண்டுகளாகப் பணிசெய்தபோது அவதானித்த விடயங்களுள் இதுவும் ஒன்று. நேரக்கட்டுப்பாடு! திருத்தலத்திற்கு வருகின்ற ஆயர்கள், கருதினால்கள்கூட குறிப்பிட்ட நேரத்துக்குள் தங்களின் பிரசங்கங்களை, உரைகளை நிறைவுசெய்கிறார்கள் - நிறைவு செய்ய வேண்டும்.

அதனால் நிகழ்வுகளுக்கு முன்பே, நேரகாலத்தோடே மிகவும் மரியாதையான முறையில், 'ஆயர் அவர்களே, நேரத்தை கவனத்தில் கொள்வதற்கு நன்றி,' என்ற குறிப்பைச் சொல்லிவிடுவார்கள். பெரிய பெரிய மக்கள் தொகைகளைக் கொண்ட திருப்பலிக் கொண்டாட்டங்களோ, பவனிகளோ, ஏனைய கலந்துரையாடல் கூட்டங்களோ ஒன்றரை முதல் இரண்டு மணித்தியாலங்களுக்குள் மிக நேர்த்தியாக நிறைவேறிவிடுகின்றன. இத்தனைக்கும் இந்நிகழ்வுகள், பல மொழிகளில் நடைபெறுகின்றன.

**யாம் அறியோம் பராமரமே?**

நம்முடைய விழாக்களை, திருநாட்களை, நிகழ்வுகளை, கொண்டாட்டங்களை நோக்குகின்றபோது எங்கு தொடங்குகிறோம், எப்போது முடிக்கப் போகிறோம் என ஏற்பாட்டாளர்களுக்கும் தெரியாது, பங்கெடுக்கிறவர்களுக்கும் தெரியாது. பங்கெடுக்கிறவர்களில் பலர் மந்தி குந்திக்கொண்டு இருப்பதுபோல இருப்பார்கள். மற்றவர்கள், "வந்துவிட்டோம், உத்தரிக்கிறோம்" என மனதுக்குள் கொதித்துக்கொள்கிறார்கள். "ஏதோ தொடங்கி, எங்கோ முடிவுறும்தானே" என ஏற்பாட்டாளர்கள் இருந்துவிடுகின்ற 'இயலாமை இயல்பு' எப்போது மாறுமோ பராமரமே?

பொதுவாக, விழாக்களில் உரையாற்ற அழைக்கப்படுபவர்கள் நீண்டதொரு உரையை ஆற்றி பார்வையாளர்களை களைப்படைய - சோர்வடையச் செய்துவிட்டுச் செல்வார்கள். நம் ஊர்களில் குறிப்பிடுவதைப்போல அவர்களுடைய உரையில், 'உப்பும் இருக்காது, சப்பும் இருக்காது.' மேலும், இனிப்போ, புளிப்போ, உறைப்போகூட இருக்காது: கசப்பு மட்டும் மிஞ்சி இருக்கும். இனிமேல் விழாக்களுக்கு, "யார் கூப்பிட்டாலும் போவதில்லை" என்ற முடிவுக்கே இவர்கள் பலரைக் கொண்டுவந்து விடுகிறார்கள்.

என் குரு நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர் பத்துப் பேர் செய்கிற பணிகளை அவர் செய்து வருகிறார். அற்புதமான ஒரு மனிதர். அவரைத் தேடி அவரது மாணவர்களாகிய நாங்கள் போகிறபோதெல்லாம் அவர் ஏதாவது கருத்தமர்வுகளை - சந்திப்புக்களை நடத்திக்கொண்டுதான் இருப்பார். கண்டவுடன், அவர் எங்கள் சுகத்தைக்கூட விசாரிக்காமல் கேட்பது என்னவென்றால், "எதாவது வந்து சொல்லிற்றுப் போங்க" என்பதாகும். அதாவது உரை நிகழ்த்துவதற்கான தலைப்பு அது!! நான் அவரைப் பார்க்கச் செல்லும்போது, 'எதற்கும் ஆயத்தமான நிலையில்'தான் செல்வதுண்டு. அப்படி இல்லையோ அவ்விடத்திலிருந்து மறைந்து விடுவேன். ஆனால், என்னோடு வருகின்றவர்களின் 'பாடு' இருக்கிறதே, அது அந்தோ பரிதாபம்தான். அதனைவிடப் பரிதாபம் இவர்களின் உரையைக் கேட்பவர்கள்.

**எப்படித்தான் மனசு வருகிறதோ?**

இதில், வேதனைக்கும் அதேவேளையில் வேடிக்கைக்கும் உரிய விடயம் என்னவென்றால்: இவர்கள், இராமாயணம், மகாபாரதம் போன்ற நீண்ட நெடிய கதைகளைப்போல தங்கள் உரைகளைத் தொடங்கி, வளர்த்து, அதனை முடிக்கத் தெரியாமல் திண்டாடி, வேர்த்துக் களைத்து, இறுதியில் "என் உரையைச் சுருக்கமாக நிறைவுசெய்து அமருகிறேன்" என கூறிச் செல்வார்கள். இப்படிச் சொல்வதற்கு இவர்களுக்கு எப்படித்தான் 'மனசு' வருகிறதோ தெரியவில்லை!

அண்மையில் ஒரு 'மாநாடு'க்குப் போயிருந்தேன். பல துறைசார் 'அறிஞர்' பெருமக்களாய் இருத்தல் வேண்டும்! அவர்கள் அறிவு ஊட்டும் பணிக்காக அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் அனேகர் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளித்ததாகத் தெரியவில்லை. ஆனால் எதை எதையோ எல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்கள் என்பதைவிட எதை எதையோ எல்லாம் உளறிக்கொண்டு இருந்தார்கள் என்பதுதான் சரியாக இருக்கும். இதில் இவர்களின் கெட்டித்தனம் என்னவென்றால், இதனை இவர்கள் மிகச் சாதுாரியமாக புத்திக்கூர்மையோடு செய்து முடித்தார்கள்.

மேற்கூறப்பட்ட இம்மாநாட்டின் ஒரு நிகழ்வாகக் கருத்துக் கணிப்பு நிகழ்வொன்று இடம்பெற்றது. ஒரு கட்டத்தில், "உங்கள் கருத்தை இரண்டு நிமிடங்களில் கூறி முடிக்கவேண்டும்" என நடுவரால் கேட்டுக்கொள்ளப்பட்டது. அவ்வாறு கேட்கப்பட்டவர்களில் பலருக்கு ஒரு வசனம் தொடங்கி முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஏறக்குறைய ஆறு நிமிடங்கள் பிடித்தது என்றால், ஒரு கருத்தைச் சொல்லி முடிக்க இவர்கள் எவ்வளவு நேரத்தை விழுங்கி இருப்பார்கள் என எண்ணிப்பாருங்கள்!

அவர்களின் கருத்தை ஆவலோடு கேட்கச் சென்ற என் போன்றவர்களின் மனநிலையைச் சற்றுக் கற்பனை செய்து பாருங்கள்! நாம் செய்த பாவங்களுக்கு ஒவ்வொருவரும் பரிகாரம் செய்யத்தான் வேண்டும். ஆனால் இறைவன் இப்படி ஒரு தண்டனையை யாருக்கும் அனுமதிக்கக்கூடாது என்பது மட்டும் அந்நேரத்தில் மனதில் எழுந்த மன்றாட்டாகும்.

அதிலும் சிலருக்கு இப்படியான நிகழ்வுகள், அருமையான நடைமேடையாக – தளமேடையாக (platform) அல்லது கலை மேடையாக (Cultural Stage) அமைந்துவிடுகின்றது. பிறகென்ன? மத்தள வித்துவானிடத்தில் அகப்பட்ட மத்தளத்தைப்போல பார்வையாளர்களை ஒரு பின்னல் பின்னி எடுத்து விடுகிறார்கள். உண்மையில், இவர்களில் சிலர் 'கொலைவெறி' பிடித்துப் பேச ஆரம்பித்து விடுகிறார்கள். கொலை வெறியைச் சண்டைக் களத்தில் மட்டுமல்ல இப்போது மேடைகளில்கூடப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது! ஆக, இனிமேல் கொலை குற்றத்தைப் பற்றிப் பேசுகின்றபோது (மற்றவர்களால்) கொலை செய்யப்படல், தற்கொலை, கருணைக் கொலை போன்ற வகைகளில் இனிப் 'பேச்சுக் கொலை' என்ற வகை பற்றியும் ஆய்வுசெய்ய வேண்டி வரலாம். எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறேன் எனப் புரிகிறதுதானே.

ஒரு தடவை வகுப்பறையில் மாணவன் ஒருவன் ஆசிரியரிடத்தில், "சேர், கொலை செய்யிறதெண்டால் உடனே கொலை செய்வது சரியா அல்லது படிப்படியாகக் கொல்வது சரியா?" எனக் கேட்டான். அதற்கு ஆசிரியர், "தம்பி, கொலை செய்யவே கூடாது. அது பெரிய பாவம்" என்றார். அதற்கு அவன், "கொலை செய்யக்கூடாது என எனக்குத் தெரியும் சேர். ஆனா, செய்யவேண்டிய ஒரு சந்தர்ப்பம் வந்திற்றுது என்றால்...?" என மீண்டும் கேட்டான். ஆசிரியர், "அப்படி என்றால், உடனே கொல்வதுதான் நல்லது" எனக்கூற மாணவன், "அப்ப, ஏன் சேர், உடனே கொல்லாம சேவலை அறுக்கிற மாதிரி எங்கள கொஞ்சங் கொஞ்சமா அறுக்கிறீங்க?" எனக் கேட்டானாம்.

**'எதற்கும் உதவும்'!**

இதனால்தானோ என்னவோ, சில பார்வையாளர்கள் இப்படியான நிகழ்வுகளுக்குச் செல்லுகின்றபோது சிறு கற்களை, 'எதற்கும் உதவும்' என்ற எண்ணத்தில் எடுத்துச் செல்கிறார்கள் போலத் தெரிகிறது!

**'சரியா இழுத்திற்றார்?...' – 'என்னத்த?...'**

நம்முடைய வழிபாடுகளின் பாடல்களிலும், மன்றாட்டுக்களிலும், காணிக்கைப் பவனியிலும் நீண்ட நேரத்தை 'முழுங்கி' விடுவார்கள். ஆனால், பிரசங்கம் இரண்டு மூன்று நிமிடங்கள் அதிகமானால்கூட "பிரசங்கத்தை இண்டைக்கி சரியா இழுத்திற்றார்!" என்பார்கள். ஏதோ அந்த இரண்டு, மூன்று நிமிடங்களால்தான் முழு வழிபாடும் ஓரிரு மணித்தியாலயங்கள் பிந்தியதுபோல கதைசொல்லி முடித்து விடுவார்கள். தாங்கள் பாட்டிலும் ஆட்டத்திலும் (மன்னிக்கவும் வார்த்தையில் தடுமாற்றம்! எனினும், கருத்தினில் நிதானம் தெரிகிறதல்லவா! அது போதும்.) ஆடலிலும் மணிக்கணக்கில் இழுப்பது அவர்களுக்குத் தெரிவதில்லை! இது ஒரு பக்கக்தாரின் கதை.

மறுபக்கத்தில் சொல்லப்படுகின்ற பிரசங்கத்தைப் பற்றி ஆராய்ந்து சொல்ல வேண்டுமானால் ஒரு மாதக் கட்டுரை ஒன்றையே அதற்கு ஒதுக்கிவிடலாம்! சிலர் சாதாரணமாகச் சொல்வதே - கதைப்பதே விளங்குவதில்லை என்றால் அவர்களின் நற்செய்திப் பகிர்வு – 'பிரசங்கம்' எப்படியிருக்கும்? அதனால், அதனை இப்போதைக்கு விட்டுவிடுவோம். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அதனைப்பற்றி 'ஒரு கை' பார்ப்போம்.

**'இந்தா..', என்றால் 'இல்லை'யென்றா பொருள்?**

"இந்தா செய்துதாறன்", "போங்க பின்னால வாறன்", "நீங்க போங்க, அனுப்பி விடுறன்", "நாளைக்கு, கட்டாயம் எடுக்கலாம்", "நீங்க வைங்க (தொலைபேசியை), இந்தா நான் எடுக்கிறன்" போன்ற வாக்குறுதிகளை நிறைவேற்ற, ஏன் நம்மில் பலருக்கு சில கிழமைகளும், சிலருக்குச் சில மாதங்களும், இன்னும் சிலருக்கு ஒருசில ஆண்டுகளும் பிடிக்கின்றன? ஒன்று நமக்கு 'அறளை பேந்திருக்க வேண்டும்' அல்லது நினைவிழந்து 'மாறட்டக் கதை' கதைக்கவேண்டும். அப்படிப் பார்த்தாலும் 'அறளை பேந்து' போகிற வயதில் நம்மில் பலர் இல்லையே! கொஞ்சம் ஆழமாக இதனை அவதானிக்கின்றபோது இந்தப் 'பிந்துகின்ற போக்கு', 'பழசு'களை விட 'இளசு'களில்தான் அதிகமாக இருக்கிறது என்பது புரியும்.

**பெரும் பக்தர்களைக் கொண்ட மதம், 'தாமதம்'!**

ஒரு முறை கவியரசு கண்ணதாசன் ஒரு விழாவிற்கு தாமதமாகச் சென்றுவிட்டார். உரையாற்றும்போது, 'சிலருக்கு இந்துமதம் பிடிக்கும், இன்னும் சிலருக்கு கிறிஸ்தவ மதம் பிடிக்கும், வேறு சிலருக்கு இஸ்லாம் மதம் பிடிக்கும், மற்றும் சிலருக்கு பௌத்த மதம் பிடிக்கும்: எனக்கோ தாமதம் பிடிக்கும்' என்றாராம். மற்றவர்களைச் சிரிக்க வைக்க கண்ணதாசன் சொன்ன கதை. உலகில் பெரும்பாலான பக்தர்களைக் கொண்ட ஓரே மதம் 'தாமதம்'தான் என்கின்ற நெப்போலியன், எதையும் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று தள்ளிப்போடுகிறவர்கள் வெற்றியைத் தள்ளிப்போடுகிறார்கள் என்கிறார். அதனால்தான், 'ஒன்றே செய், நன்றே செய் அதை இன்றே செய்' என்று பெரியவர்கள் சொல்லியிருப்பதைக் கேட்டிருக்கிறோம்.

**காலம் தப்பிப் பிறந்தவர்களா?**

பத்து மாதத்தில் பிறக்க வேண்டிய குழந்தை ஏதாவது காரணத்தையிட்டு மூன்று, நான்கு மாதங்களின் முன் பிறந்தாலும் அல்லது பிறக்க வைக்கவேண்டி இருந்தாலும் குழந்தையை பாதுகாப்பாக பிரசவிக்கச் செய்து காற்பாற்றுகிறார்கள் மருத்துவர்கள். இப்படி எத்தனையோ குழந்தைகள் பிறந்திருக்கிறார்கள், இன்றும் சுகத்தோடு வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். ஆனால் தாயின் வயிற்றில் இருக்க வேண்டிய இருநூற்றி எழுபது (270) தொடக்கம் இருநூற்று எண்பது (280) நாட்களையும் கடந்து மருத்துவ பரிசோதனைகள் மூலம் குறிக்கப்பட்ட நாளையும் தாண்டி குழந்தை பிறக்கவில்லை என்றால் அது எத்தகைய உயிராபத்துக்களை ஏற்படுத்தும் என்பதை ஓரளவுக்கேனும் அறிவோம். நம்மில் பலர் காலந்தப்பிப் பிறந்ததால்தான் எல்லாவற்றையும் பிந்திப் பிந்திச் செய்கிறோமோ? என்ற எண்ணமும் அடிக்கடி என் மனதில் வந்துபோவதில் தவறில்லைபோல்தான் தெரிகிறது என ஒரு நண்பரிடம் சொன்னேன். பதிலுக்கு அவர் சொன்னார், "பத்து என்ன பத்து! நம்மில் பலபேர தாயின் வயிற்றில இருக்க விட்டிருந்தா, அப்படியே பதினைந்து, பதினாறு மாதத்துக்குக் கூட உயிர்தப்பி இருந்திருப்பார்கள்!" எனக் கூறிச்சிரித்தார்.

(தொடர்ந்து அ...தி....ரு.....ம்......)

# புனிதர்களின் பாதையில்

## புனித ஜோர்ஜ்

மறைசாட்சி – (கி.பி. 300)

**மாதமொரு புனிதரை அறிந்து கொள்வோம்**

**ஏப்ரல்**



புனித ஜோர்ஜ் பாலஸ்தீன் நாட்டில், விட்டா என்ற ஊரில் கொன்ஸ்டன்டைன் அரசன் காலத்திற்கு முன்னர் மறைசாட்சியாய் இறந்தார். எந்த முறையில் இறந்தார் என்பதற்குப் பல கதைகள் இருந்து வருகின்றன. இருப்பினும் இன்றைய திருநாளுக்குரிய "கட்டளை ஜெபத்தில்" (பிரிவியரி) புனித தமியான் இராயப்பரின் விளக்கம் பயன்படுத்தப்படுகிறது. அதன் சுருக்கம் "புனித ஜோர்ஜ் முதலில் ஒரு படைவீரராகப் பணியாற்றியவர். பின்னர் வேறொரு படையில், அதாவது கிறிஸ்துவின் படையில் சேர்ந்துகொண்டார். என்பது தெளிவாகத் தெரிகிறது. ஏனெனில் இவர் முதலில் சொல்லப்பட்ட படையில், தான் வகித்த பெரிய பதவியைக் கிறிஸ்துவுக்கென்று உதறித் தள்ளினார். தன் உடைமைகள் எல்லாவற்றையும் ஏழைகளுக்குத் தானம் செய்தார். பின்னர் தமக்கு எவ்வித உலகக் கவலையுமில்லாமல் ஆக்கிக் கொண்டு, விசுவாசம் என்ற மார்புக் கேடயத்தை அணிந்துகொண்டார். இதன் பிறகு கிறிஸ்துவின் வீரராகத் துணிச்சலுடன் தனது உயிரைத் தியாகம் செய்யத் தன்னைக் கையளித்தார். இப்புனிதர் தூய ஆவியானவரினஅன்பு நெருப்பால் உந்தப்பெற்றார். சிலுவையின் வெற்றிக்கொடிஏந்தி இறுதிவரை விசுவாசத்திற்காகப் போராடினார். தீமைகளின் இருப்பிடமாகிய அலகையின் மீது வெற்றிகொண்டார். அவ்வண்ணமே தன் உடன் தோழர்களையும் பாடுகளைத் துணிவுடன் ஏற்றுக்கொள்ள ஊக்குவித்தார்." அவரது உடல் மட்டும் எதிரிகளிடம் கையளிக்கப்பட இசைந்த இறைவன், அவரது ஆன்மாவைப் பாதுகாத்தார். இந்தப் பாதுகாப்பு, புனிதரின் அசைவுறாத கோட்டையாகத் திகழ்ந்த விசுவாசத்தின் பயனாகக் கிடைத்தது.

உலகில் இவரது உருவம் பொறிக்கப்பட்டுப் பல நாட்டு அஞ்சல் துறையினரால் பயன்படுத்தப்படுவதுபோல், வேறு யாருடைய உருவமும் அவ்வப்போது வெளிவருவதில்லை. இவ்வாறு அஞ்சல் தலைமூலம் அவருக்கு வணக்கம் செலுத்தப்படுகிறது. இந்த முத்திரைகளில் புனிதர் குதிரையின்மீது அமர்ந்து அலகையுடன் போராடுவதைப் பார்க்கலாம். இது அவர் மெய்மறையைப் பரப்புவதிலும் பொய் மறைகளை அழிப்பதிலும் அடைந்த வெற்றிகளைக் குறிப்பிடுகின்றது.

*சிந்தனைக்கு*

பாவப்பழக்கங்களுடன் நாம் போர் தொடுப்போம். புனித ஜோர்ஜ் நமக்குத் துணையாகப் போரிட்டு நாம் வெற்றி வாகை சூடச்செய்வார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலை போகும் விலை

## விலைவாசி அதிகரிப்பையும் தீர்வையும் அலசும் கட்டுரை

அருட்பணியாளர் அகஸ்ரின் புஸ்பறாஜ், முருங்கன் மறைக்கோட்ட முதல்வர்.

முன்னுரை

பத்திரிகை ஒன்றில் செய்தி ஒன்று வாசித்தேன். அது ஒரு பிச்சைக்காரனைப் பற்றியது. வெள்ளிதோறும் கடைகளில் பிச்சை எடுக்க ஏழைகள் வருவது வழமை. அதன்படி யாழ் நகரில் ஓர் கடை உரிமையாளர் தன்னிடம் வந்து பிச்சை கேட்டவருக்கு ரூபா 5.00 கொடுத்தார். "விலைவாசி உயர்ந்துள்ளது. இது போதாது" எனக்கூறி அதை அவரிடமே தூக்கி எறிந்து சென்றவர், பக்கத்து கடையில் ரூபா 10.00 வேண்டிச் சென்றுள்ளார் என்பதுதான் செய்தி.

'சோத்துப் பிரச்சினைதான் சோசலிசப் பிரச்சினை' என கார்ல் மாக்ஸ் கூறியிருக்கிறார். இது இலங்கையில் ஓர் பிச்சைக் காரனிடமே நிரூபணமாயிருக்கிறது. விழித்துக்கொண்டார் முதலாளி. எரிபொருள் விலை உயர்வாலும், மின்சார கட்டண உயர்வாலும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. இதனால் குறிப்பாக ஏழைகள், மத்தியதர வகுப்பு மக்கள், அரச உத்தியோகஸ்தர்கள் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் நம் நிலை என்ன எனப் பார்ப்பது சாலச் சிறந்ததாகும்.

1. வரப்புயர நீர் உயரும்

இது அரசனுக்கு ஔவையாரின் அறிவுறுத்தல். ஆனால் இன்று நம் நாட்டின் சில பகுதிகளில் வரம்புகள் பல இராணுவ காவலரன்களாக உயர்ந்துள்ளன. வரப்பை உயரவைக்கும் திட்டமும் விலைவாசி உயர்வதை தடுக்கும் எண்ணமும் தற்போது அரசாங்கத்திடம் இல்லை. எரிபொருளோ, மின்சாரமோ ஆடம்பரப்பொருளல்ல. மாறாக நாளாந்த தேவைக்கான அத்தியாவசியப் பொருட்களாகும். எரிபொருளில்தான் அனேகமாக ஏனைய நகர்வுகளும் தங்கியுள்ளன. ஏழைகளுக்கும் மத்திய தரப்பினருக்கும், ஏனையோருக்கும் இவை இன்றியமையாதவைகளாகும். எரிபொருள் உயர்வால் அனைத்து அத்தியாவசிய, ஏனைய பொருட்களின் விலைகளும் உயர்ந்தவண்ணமுள்ளன. இலங்கை வரலாற்றிலேயே இதுதான் கூடுதலான விலை உயர்வாகப் பதிவாகியுள்ளது. வரம்பு உயர்ந்தால்தான் கோன் உயர்வான். மக்கள் பற்றாளனால்தான் வரப்பை உயர வைக்க முடியும். இங்கு வரம்புமீறிய தனியாட்சி நடைபெறுவதால்தான் வரம்பு உயராமலே கோன் உயர்கிறான். இது நிலைக்குமா என்பதுதான் கேள்வி!

2. விலைவாசி உயர்வுக்குக் காரணம்

"யுத்தம் முடிந்தால் அபிவிருத்திதான்" இது எப்போதோ கேட்ட குரல். யுத்தச் செலவு, விலைவாசி உயர்வு என அத்தனை சுமைகளையும் அரசாங்கம் மக்கள்மேல் திணித்தது. போரின் நிறைவில் இலங்கை ஆசியாவின் அதிசயமாக மாறும் என அது ஆசைகாட்டியது. பெரும்பான்மை இன மக்களில் பெரும்பான்மையானோர் இதனை நம்பி போருக்கு பச்சைக் கொடியை அதன் இறுதிவரை அசைத்தனர். சர்வதேசம் சற்று சந்தேகத்தோடு இலங்கையின் பொருளாதார நகர்வை கவனித்த வண்ணமிருந்தது. போர் நிறைவின் மூன்றாண்டை நோக்கியுள்ள நாடு இவ்வளவு விலைவாசி உயர்வை சந்திக்கும் என எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. இந்நிலையில் உயர்வுக்கான காரணங்கள்தான் என்ன?

1- உலக சந்தையில் எரிபொருள் விலையேற்றம் ஏற்பட்டிருந்தாலும், மற்றைய நாடுகள் அச்சுமையை மக்கள் மீது திணிக்காது செயற்படுத்தும் திட்டங்கள்போல் இங்கு பெரிதாக எதுவும் இல்லை.

2- அரசியல்வாதிகளினதும், அரச நிர்வாகத்தினரினதும் அனாவசிய நிர்வாகச் செலவுகள்.

3- யுத்தத்திற்காக இலங்கை கூடுதலான கடன்களைப் பெற்றதால் அதன் வட்டிவீதம் உயர்ந்துள்ளமை.

4- சர்வதேச சந்தையில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைவதால் அமெரிக்க டொலருக்கு இலங்கை அரசின் ரூபா பெறுமதி அதிகரித்துள்ளது. இதனால் இறக்குமதிப்பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

5- இறக்குமதி அதிகரிப்பு. நம் நாடு கடல் சூழ்ந்த ஓர் விவசாய, மீன்பிடி நாடாகும். ஆயினும் வாழைப்பழம், உருளைக்கிழங்கு, தேங்காய், வெங்காயம், செத்தல் மிளகாய், அரிசி, ரின் மீன்.... போன்றவற்றை இறக்குமதி செய்வதை என்னவென்று சொல்வது? நாட்டின் அனேகமான மாவட்டங்களிலும் மேற்படி பொருட்களை உற்பத்தி செய்யக்கூடியதாக உள்ள இவ்வாறான இறக்குமதிப் பொருட்களை கொழும்பில் இருந்து நாட்டின் நாற்றிசைக்கும் கொண்டுசெல்லும்போது வரும் விலைவாசி உயர்வு மேலதிகமானதாகும்.

மேலும், உள்நாட்டு உற்பத்திக்கும் சந்தை வாய்ப்பிற்கும் முழுமையான ஊக்குவிப்பின்மை, மானியம் மூலம் தொழில் உபகரணங்கள் அனைவருக்கும் வழங்கப்படாமை, அழிவுகளுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்கப்படாமை போன்றன உள்நாட்டு உற்பத்தியை குறைத்துவிடுகின்றன.

6- ஏற்றுமதி போதாமை. இங்கிலாந்து அறிமுகம் செய்த மரபுவழி ஏற்றுமதிப் பொருட்களான தேயிலையையும், இறப்பரையும் தவிர புதிதாக பெரும் ஏற்றுமதிகள் நடைபெறவில்லை. ஓர் விவசாய நாடு அபிவிருத்தி அடைந்த நாடாக மாறவேண்டுமாயின் அது சேவைத்துறையிலும், கைத்தொழில் துறையிலும் வளர்ச்சி காண வேண்டும். இங்கு இதற்கு இடமில்லாமை கவலையே.

7- அரசாங்கத்தின் உறுதியற்ற பொருளாதாரக் கொள்கை, தளம்பலான அரசியல் சூழல், போர்க் குற்றச்சாட்டுக்கள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் என்பவற்றால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு முதலிடுவதற்கு காட்டும் தயக்கம்.

8- போரின் பின்னரும் பாதுகாப்பு செலவுக்கான ஒதுக்கீடுகள் கூடுதலாக உள்ளமை.

9- நாடு முன்னெடுக்கும் தவறான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள். உதாரணமாக மன்னார் மாவட்டத்தில் மருதமடுவில் இருந்து குஞ்சுக்குளம் ஊடாக அனுராதபுரம்வரை அமைக்கப்படும் பாரிய வீதிவேலை. இது சிங்களக் குடியேற்றத்திற்கான ஆயத்தவேலை எனப் பேசப்படுகிறது.

10- அபிவிருத்தி வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்களாக அரசாங்க உயர்மட்ட அரசியல்வாதிகள் அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை.

11- நம் நாட்டில் வெளிநாடுகள் கொண்டுள்ள மறைமுக பொருளாதாரச் சுரண்டல்கள். அரசாங்கத்திற்கும் இது தெரியும். ஆயினும் தனது சுய அரசியல் இலாபங்களுக்காக அது இவற்றை அனுமதிக்கிறது என பலர் கருதுகின்றனர். இலங்கை, ஈரான்மீது அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் மேற்கொண்டுள்ள வர்த்தகத் தடையை இலங்கை அறிந்திருந்தும், போர்க்காலத்தில் ஈரான் செய்த உதவிக்கு நன்றிக்கடனாகவும், ஈரானுடன் உள்ள நல்லுறவாலும், அதன் சலுகைகளாலும் இலங்கை ஈரானிடமிருந்தே கூடுதலான எரிபொருளை இறக்குமதி செய்கிறது.

பாகிஸ்தான் போரில் உதவியது. அது 'எம்மிடம் வாழைப்பழம் உண்டு. இறக்குமதி செய்யுங்கள்' என்றதும் நம் நாடு உள்ளூர் வாழைப்பழத்தை மறந்து இறக்குமதி செய்கிறது. சீனா, இந்தியா, போன்ற நாடுகளும் இவ்வாறே. இதனால்தான் "பொல்லாரின் வருவாயால் விளைவது தொல்லையே" என நீதிமொழி கூறிநிற்கின்றது. இவ்வாறான மேலும் பல காரணங்களால் விலைவாசி உயர்கின்றது என்பதை அறியக்கூடியதாக உள்ளது. இருப்பினும், இதனை நன்கு ஆராய்ந்து மக்களுக்கு தெரியப்படுத்தி, எதிர்காலத்திட்டங்களை முன்வைக்காது, விலை உயர்வை அரசாங்கம் நியாயப்படுத்துவது, எம்நாட்டு எதிர்காலப் பொருளாதாரம் இருளில்தான் செல்லும் என்பது வெளிச்சம்.

3. உயர்வின் அகோரங்கள்

விலைவாசி உயர்வால் வரும் விளைவு ஏழை, மத்தியதர வகுப்பினர், அரச உத்தியோகஸ்தர்கள் அடைகின்ற பாதிப்பாகும். அது முழு நாட்டையும் காவுகொள்கிறது.பேரூந்தில் ஏறினால் கட்டண உயர்வு, பாண் வேண்டினால் விலையின் திடீர் மாற்றம், மரக்கறி, மீன், இறைச்சி, பாடசாலை உபகரணங்கள், வீட்டுப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள், ஏனைய பொருட்கள்...... என விலைவாசி உயர்வடைந்துள்ளது. வருமானம் குறைவதோடு வாழ்க்கைச் செலவு கூடுகிறது.

மேற்படி காரணங்களால் குடும்ப, சமூக வாழ்வு பாதிப்புக்களைச் சந்திக்கின்றது. பொருளாதாரச் சுமையால் விரக்தியடையும் ஆண்கள் சிலர் குடிக்கு அடிமையாகலாம். நிறையளவு குறைவதாலும், மன உழைச்சலாலும், நோய்வாய்ப்பட வாய்ப்புண்டு. வறுமை மேலிட களவு, கொள்ளை, ஏமாற்று, பொய், உண்மைக்கு புறம்பான தொழில்... போன்றன உருவாக வாய்ப்புண்டு. இதனால் பண்புகள், கலாசாரங்கள் என்பனவும் சிதையும் சந்தர்ப்பங்கள் உருவாகலாம். இதன் தொடர்ச்சியாக சமூகக்கட்டுப்பாடு குலையவும், நாட்டில் சட்டம், ஒழுங்கு முறைகள் மீறப்படவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

4. உயர்விற்கு ஏற்பட்ட எதிர்ப்பு!

இது இலங்கைவாழ் அனைவருக்குமான ஓர் பொதுப் பிரச்சினை. சிலர் இதைக் கண்டுகொள்ளவில்லை. இன்னும் சிலருக்கு இது பிரச்சினையே இல்லை. வேறு சிலருக்கு இது பாதிப்பில்லை. இருப்பினும் ஒருசில இடங்களில் மட்டும் மக்கள் திரண்டு பெரும் எதிர்ப்பைக் காட்டினார்கள். வேலை நிறுத்தத்தில் குதித்தார்கள். தொழிலாளர்கள் ஜனநாயக முறையில் தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தினர், கோரிக்கையை முன்வைத்தனர். ஆனால் அரசாங்கம் அதனை அடக்க தனது ஆதிக்க அராஜக ஆளுமையை படையினரை வைத்து வெளிக்காட்டியமை வரலாற்றுப் பதிவாகும். பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் சிலாபத்தில் ஓர் மீன்பிடித் தொழிலாளி கொல்லப்பட்டார். இதே பாணியில் சென்ற ஆண்டு கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளி ஒருவரும் கொல்லப்பட்டார்.ஆர்ப்பாட்டங்கள் அளவுக்குமீறினால் அதைக் கட்டுப்படுத்துவது படையினரின் கடமைதான். ஆனால் இவ்விரு சம்பவங்களும் ஜனநாயக முறையிலான செயல்கள் அல்ல. அரசாங்கம் தனக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை தடுக்கும் அதேவேளையில் அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அவையின் செயற்பாடுகளுக்கும் அமெரிக்காவிற்கும் எதிராக ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும், மதவழிபாடுகளையும் அரசாங்கமே கட்டாயப்படுத்தி செய்திருப்பது உலகறிந்த உண்மை.

ஜனநாயக ஆட்சிக்கு வழிகாட்டியே எதிர்க்கட்சிதான். ஆனால் அதன் வெற்றுப் பேச்சும், பயனற்ற எதிர்ப்பும் அக்கட்சியிடம் பலமும், பயனும் இல்லை என்பதை கோடிட்டுக்காட்டுகிறது. அரசாங்கம் மின்சார வசதியற்ற குடும்பங்களுக்கும் விவசாயிகள், மீனவர்களுக்கும் மானியம் வழங்கும் என அறிவித்து சிலருக்கு கொடுத்தும் உள்ளது. ஆனாலும் அது எல்லோருக்கும் கிடைக்குமா? மானியம் இம்மக்களின் பிரச்சினையைத் தீர்க்குமா? எவ்வளவு காலத்திற்குக் கிடைக்கும்? என்பன முக்கியமான கேள்விகளாகும்.

5. அரசியல்வாதிகளுக்குப் பாரமில்லை

விலைவாசி உயர்வால் ஏழைகள் பாதிக்கப்படுவதுபோல அரசியல்வாதிகள் பாதிக்கப்படுவதில்லை. அவர்களின் வரவையும் செலவையும் அரசே பார்த்துக்கொள்கிறது. இவர்களுக்கு மின்சாரம், நீர், தொலைபேசி, போக்குவரத்து ..... என்பன இலவசம். இவர்கள் மண்ணெண்ணையையும் பாவிப்பதில்லை, பொதுப் பேருந்திலும் செல்வதுமில்லை. இவர்களுக்கு சகல வசதிகளும் உண்டு. வருமானவரி இல்லை, வரிச்சுமை இல்லை. விலையேற்றம், வாழ்க்கைச் செலவு, வாழ்க்கையின் கஸ்ரம்.... என்பன பொதுவாகத் தெரியாது. தெரிந்தாலும் அது உறைக்காது.

ஏழைகள் மண்ணெண்ணைப் பிரச்சினையால் மூளையைப் பிசைந்துகொண்டிருக்க ஜனாதிபதி, அமைச்சர்கள், ஏனைய அரசாங்க அதிகாரிகளின் அடிக்கடி வெளிநாட்டு உள்நாட்டு பயணங்கள், அளவிற்குமீறிய கொண்டாட்டங்கள், தேர்தல் செலவீனங்கள், உள்நாட்டு உலங்கு வானூர்தி பயணப் பாவனைகள் போன்றவற்றிற்கு அரச பணம் கூடுதலாக பயன்படுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட முக்கிய தலைவர்களுக்கு மேற்குறிப்பிட்ட தேவைகளும் செலவுகளும் நிச்சயம் தேவைதான். ஆனால் இங்கு இவை அளவிற்குமீறி பயன்படுத்தப்படுகிறது என்பதுதான் கருப்பொருளாகும். ஏற்கனவே தரம் உள்ள உலங்கு வானூர்தி நாட்டில் இருந்தும் சென்ற மார்கழி மாதத்தில் ஜனாதிபதி மற்றும் ஏனைய முக்கியஸ்தர்கள் பயணிக்க மேலதிக உலங்கு வானூர்திகள் பெறப்பட்டுள்ளன. இதன் பெறுமதியும் போர் அற்ற காலப் பகுதியில் இதன் பராமரிப்புச் செலவும் நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர்களுக்குத் தெரியாததொன்றல்ல. அண்மையில் ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்திற்கான எதிர்செயற்திட்டத்திற்கென அரசாங்கம் செய்த செலவுகளும் கணிக்கப்பட வேண்டியவையே.

6. வாழ்க்கைச் செலவை குறைக்கும் வழி

வாழ்வில் முன்னேற ஏழ்மையும், பொருளாதார நெருக்கடிகளும் தடைக்கற்கள்தான். ஆயினும் அடிமட்டக் குடும்பங்களிலிருந்து பெரும் மகான்கள் உருவெடுத்திருக்கிறார்கள். இவர்கள் நமக்கு முன்னுதாரணம். அப்துல் கலாம் ஏழை மீன்பிடிக் குடும்பத்தில் பிறந்தவர். வீட்டில் மின்சார வசதி இல்லை. மின்சார வசதியுள்ள நண்பர் வீட்டில் அடிக்கடி சென்று படித்தவர். இன்று அவர் ஓர் மாமனிதர், பெயர்பெற்ற விஞ்ஞானி, முன்னை நாள் இந்திய ஜனாதிபதி! வறுமைகண்டு வாழ்வில் விலகி நிற்காது இருக்கும் வளத்தையும் பணத்தையும் பயன்படுத்தி முன்னேறினால் வெற்றியும் மகிழ்ச்சியும் நிச்சயமே. 'முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்' என்பதற்கொப்ப அரசாங்கத்தையோ அல்லது வேறு யாரையுமோ அனாவசியமாக நம்பாது தன் காலில் நிற்கும் துணிவும் முயற்சியும் வேண்டும்

நம் வீட்டு வளவில் இருக்கும் இடத்திற்கேற்ப ஓர் வீட்டுத்தோட்டம் தேவை. வாழை, பப்பா, கொய்யா, நெல்லி, தேசி..... என பழ வகையும், வெண்டி, கத்தரி, மிளகாய், கறிவேப்பிலை.... என மரக்கறியும் வைத்தால் அது வீட்டுத்தோட்டம். இதனால் வரும் நன்மைகள் பல :

1- வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் குடும்பமாக கணவர், மனைவி, பிள்ளைகள் என எல்லோரும் சேர்ந்து வேலை செய்யலாம்.

2- தற்போது சிறு பிள்ளைகள் உட்பட அனேகர் விளையாட்டு , ரண்னு சேர்தல், உடற்பயிற்சி என்பவற்றில் நாட்டமற்று காணப்படுகின்றனர். எமது உணவுகளும் இரசாயணக் கலவை தொடர்புடையது. வீட்டுத்தோட்ட வேலையால் எமது உடலும் நலம் பெறுகிறது.

3- இரசாயணப் பசளைகளைப் பாவிக்காது கூட்டெருவை பாவிக்கும்போது மருந்தற்ற பழங்களும், மரக்கறிகளும் கிடைப்பதுடன் வளவும் சுத்தமாகிறது.

4- கடையில் பெறும் மருந்தடித்த காய்கறி பழங்களைத் தவிர்ப்பதுடன், தம் வீட்டு நல்ல உற்பத்தியை பாவிப்பதால் எம் செலவுகளும் குறைகின்றன.

5- உறவினர்கள், நண்பர்கள், ஏழைகள் போன்றோருக்கும் இதிலிருந்து உதவி செய்யக்கூடியதாக இருக்கும்.

6- வெளிநாட்டு, உள்நாட்டு இரசாயணம் ஊட்டப்பட்ட மேற்படி பொருட்களைத் தவிர்ப்பதுடன் அதன் விற்பனை விலையைக் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் அமையும்.

அதேவேளை இது எல்லோருக்கும் சில வேளைகளில் சாத்தியமற்றதாக இருக்கலாம். போதிய நிலம் இன்மை, நிலம் இருந்தும் பயிரிட முடியாத நிலை, நீர், நேரம், கால்நடை .... பிரச்சினைகள் என பலவுண்டு. ஆயினும் இது எல்லோருக்கும் உள்ள பிரச்சினையும் அல்ல. ஆதலால் இயலுமானவர்கள் திட்டமிட்டு, நேரம் ஒதுக்கி, வீட்டுத்தோட்டம் செய்தால், நாமும் வளர்வோம், பிறரையும் வளர்ப்போம்.

வீட்டுக்குள்ளேயே ஓர் விவசாயப் புரட்சியை ஏற்படுத்துவோம். வீட்டுத் தோட்டம் விவசாயிகளுக்கு மட்டுமல்ல அத்தனை பேரும் செய்யும் ஓர் தோட்டமாகும். முயற்சித்து பார்ப்போமாக! உற்பத்தியாளன் பொதுவாகத் தொழிலாளிதான். இடையில் பெரும் கஸ்டம் இன்றி நன்மையடைகிறவர்கள்தான் முதலாளிகள். இதனால் விவசாயிகள், மீனவர்கள் ஏனைய தொழிலாளர்கள் தங்கள் வளங்ளைப் பயன்படுத்தியும், இடைத்தரகர்கள் முதலாளிகள் இன்றி விற்பனை செய்யவும் பழகினால் பெரும்பான்மை இலாபம் பெற்று தன்னிறைவு அடையலாம். இது தனித்தனியாக என்பதைவிட நண்பர்கள் சேர்ந்து செய்தால் கடினமும் இலகுவாகும், முடியாமையும் சாத்தியமாகும். இதற்கு உண்மையும் நேர்மையும் ஒற்றுமையும் முக்கிய மூலதனமாகிறது. மேற்படி செயற்பட்டால் விலைவாசி எம்மை ஒன்றும் செய்ய முடியாது.

முடிவுரை

எரிபொருள் விலையேற்றம் வாழ்க்கைச் செலவை கூட்டியுள்ளது. அரசாங்கத்திடம் அதற்கான மாற்றீட்டு முயற்சிகள் குறிப்பிடத்தக்கதாக இல்லை. வாழ்க்கைச் சுமை குறைவதற்கான சாத்தியக்கூறுகளும் தற்போதைக்கு இல்லை. மக்கள் தம் காலில் நிற்க அவர்களே தமக்கென நேரிய வழிகளைக் காண வேண்டிய தேவையுண்டு. அவர்களால் தன் வீட்டையும் நாட்டையும் காக்க முடியும். இல்லாவிட்டால் தலைபோகும் விலையைத் தவிர்க்க யாராலும் முடியாது! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### மனத்துணிவு

இலக்கை நோக்கிய
பயணத்திற்கும்
முயற்சியுள்ள
முன்னேற்றத்திற்கும்
முகவுரை.

வாழ நினைக்கும்
ஒவ்வொருவருக்கும்
வாழ்த்துரை.

முணுமுணுக்கும் முகாரி
இராகங்களுக்கு
முற்றுப்புள்ளி.

நேற்றுவரை போர்வைக்குள்
முடங்கிக் கிடந்த நண்பனே!
மனத்துணிவு கொண்டு
எழுந்து நில்!
தொடர்ந்து செல்!
தோல்விக்கும் இனித்
தோல்வியே!

*அ. கொண்செப்ரா*
*மடுக்கோவில், மடு.*

### நண்பனே!

தவிக்கிறது என்னில்
நினைவுகளெல்லாம்.
மழுங்கடிக்கப்பட்டு உன்
விம்பம் மட்டும் என்றும்
என் இதயத்தில் .....
முடியவில்லை!
இதனால்தான்
தூரப்போக நினைக்கிறேன்
உன்னைவிட்டு
ஆனால்.......
நினைவை விட்டல்ல.

*வை. ஜே. டியூலன்*
*நானாட்டான்.*



### கனவு

அற்புதமான அந்த இரவின்
கனவுக்காட்சிகளை
என் கண்கள்
பதிவுசெய்து கொண்டன.

காலை கண்விழித்து
எழுந்ததும்
என் மனத்திரையில்
மீண்டும் படமாக்கிப்
பார்த்தேன்.
இனி நிஜவாழ்வில்
நடக்காத எனக்கும்
உனக்கும்
இடையேயான
என்றோ அறுந்துபோன
பழைய உறவு அது.

என் அனுமதியில்லாமல்
கனவில் கலந்து நீ
ஆடியது வெறும் நாடகமே.
நிஜமல்ல புரிந்துகொள்.
என் கனவை குப்பைத்
தொட்டிக்குள்
நீ எறிந்ததுபோல்.
நானும் எறிந்துவிடுகிறேன்.

*பி. அஜித், மடுக்கோவில்*

### பிரியாத உறவு

உடல் பிரிந்தாலும் நாம்
இருவரும் உள்ளத்தால்
ஒன்றுபட்டோம்.
நட்பு என்பது
கண்ட கண்ட இடத்தில்
வளரும் காட்டு மரம் அல்ல
பண்பான இடத்தில் வளரும்
பாசமரம்.

கோயிலில் கேட்பது
மணியோசை
கடலில் கேட்பது
அலை ஓசை
என் காதில் கேட்பது
உன் குரல் ஓசை.

*சி. பெலிக்ஸ் ஜெனிபர்*
*வட்டக்கண்டல், மன்னார்.*

## துளிப்பாக்கள்

### அன்பு
அவலமான
மனித வாழ்வில்
அவசியமாய்த்
தேவைப்படுவது.

### நட்பு
நம்மையே நாம்
பிறருக்காய் அர்ப்பணிக்கும்
பூர்வ ஜென்ம பந்தம்.

### பிரிவு
பிறரன்பைப் புரிந்திட
இறைவனால் வழங்கப்படும்
அருமையான சந்தர்ப்பம்.

### சிரிப்பு
பிறரை மகிழ்விக்க
எம்முடன் சேர்த்து
இறைவன் கொடுத்த
இலவச இணைப்பு.

### விவிலியம்
எப்படியும் அல்ல
இப்படித்தான் வாழ்
என வழிகாட்டிடும்
ஆசான்.

### நினைவு
மறந்தும்கூட சில நொடிகள்
மறக்க முடியாத
சொர்ப்பனம்.

### உறவுகள்
உயிரோடு கலந்து
இதயத்தில் குடிகொண்ட
உன்னத பிணைப்பு.

### தியாகம்
தன்னையே
பிறருக்காய் கொடுத்த
நம் தலைவன்
இயேசுபிரானின் அர்ப்பணம்.

### வறுமை
எப்போதும் நாம்
இறைவனை
மறக்காதிருப்பதற்கான
அதிசிறந்த பரிசு.

### கனவு
வாழ்வின் இறுதிவரை
நம்மோடு கைசேர்த்து
உலாவரும் உற்ற நண்பன்.

### தூக்கம்
எல்லாவற்றையுமே
மறந்து சந்தோஷிக்கும்
சில மணிப்பொழுது

*எ. நிஷாந்தினி,*
*சிதம்பரபுரம்.*

## சிறுகதை

*காமலின் சௌமியா குரூஸ், அரிப்பு, சிலாவத்துறை*

### கடவுளின் செயலை அறியமுடியாது

"பணக்காரன் மேலும் மேலும் பணக்காரனாகவும் ஏழை தேய்ந்து கஷ்டப்பட்டு கஷ்டத்திலேயே இறந்து போவதையும் பார்க்கும் போது என்னால் பொறுக்க முடியவில்லை. கடவுளே ஏன் இப்படிப்பட்ட விசித்திரமான நிலை?" என்று ஒருமுறை அந்தோனி கடவுளிடம் கேட்டான்.

கடவுள் புன்னகை புரிந்தார். 'என்னுடன் வா, இதை நான் புரியவைக்கிறேன்!' என்று கூறினார். இருவரும் மாறுவேடம் போட்டுக் கொண்டனர். அவர்கள் பார்ப்பதற்குப் பிச்சை எடுக்கும் பிச்சைக்காரர்களைப்போல் காணப்பட்டார்கள். அந்த நகரத்தில் ஒரு பணக்காரன் வீடு இருந்தது.

'முதலில் அங்கே போவோம்!' என்று கடவுள் அந்த மாளிகையைச் சுட்டிக் காட்டினார். இருவரும் அந்த வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தனர். அந்த வீட்டுக்குரியவன் அந்த நேரத்தில் தன் வேலையாளர்களிடம் ஏதோ கணக்குக்கேட்டு மிரட்டிக் கொண்டிருந்தான். இருவரும் வாயிலில் வந்து நின்றார்கள்.

"நாங்கள் சந்நியாசிகள் எங்களுக்கு அதிகப் பசி! ஏதாவது சாப்பாடு கிடைக்குமா?" என்று கடவுள் கேட்டார். அந்தப் பணக்காரனுக்கு அவர்களைக் காண எரிச்சல்தான் வந்தது. "அட தண்டச் சோற்றுத் தடிமாடுகளா? எடுப்பது பிச்சை! இதில் சந்நியாசி வேஷமா? கை, கால் நன்றாகத்தானே இருக்கிறது. உழைத்துச் சாப்பிடுவதற்கு என்ன?" என்று மனதுக்குள் எண்ணினான். அவன் நினைவைப் புரிந்துகொண்ட கடவுள் அவனை நோக்கிப் புன்னகைத்தார். அந்தப் பணக்காரன் சொன்னான். "நன்றாக இருக்கிறது கதை! பிச்சை வேண்டுமா? நான் உங்களுக்கெல்லாம் பிச்சை போட்டால் நானும் உங்களைப்போல் ஆண்டியாகி உங்கள் கூடவே திருவேடு ஏந்தி வந்துவிட வேண்டியதுதான்! போங்கள் இங்கிருந்து! பிச்சையுமில்லை ஒன்றுமில்லை."

கடவுள் மீண்டும் புன்னகை புரிந்தார். "பிரபு, நீங்கள் மேலும் மேலும் பணக்காரர் ஆகிப் பல்லாண்டு வாழ வேண்டும் என்று இறைவனைப் பிராத்திக்கிறோம்! நாங்கள் போகிறோம்!" என்று கூறிவிட்டு வெளியேறினார் கடவுள்.

பணக்காரன் உரத்தகுரலில் கூறினான். "இவர்களுக்கே அடுத்த வேளை சோற்றுக்கு வழி இல்லை! இவர்கள் என்னை ஆசீர்வதிக்கிறார்கள் பிச்சைக்காரப் பயல்களுக்கு ரொம்பவும்தான் திமிர்!"

அதைக் கேட்டுக் கொண்டே வந்தான் அந்தோனி. " பிச்சை அளிக்க மறுத்து நம்மைத் திட்டிய மனிதனுக்கு கடவுள் ஆசீர்வாதம் செய்கிறாரே! இது அக்கிரமம்!' அந்தோனி எண்ணிக்கொண்டான். ஆனால் இது குறித்துக் கடவுளிடம் எதுவும் கேட்கவில்லை.

சிறிது தூரம் நடந்து சென்றனர். நகரின் எல்லைப் பகுதியில் ஒரு குடிசை தென்பட்டது. "அங்கே போவோம்!" என்றார் கடவுள். குடிசைக்குள் ஓர் ஏழை மனிதன் இருந்தான். அவன் அவர்களைப் பார்த்தவுடன் ஒரேயடியாக மகிழ்ந்து போனான்.

"ஐயா, ஏழைக் குடிசைக்கும் பிச்சைக்கு வருவீர்களா? என்னிடம் இருப்பது இந்தக் கஞ்சிதான். இதை நீங்கள் இருவரும் உண்ணுங்கள். அதன் பிறகு பேசிக்கொள்ளலாம்!" என்றான். "என்ன, நீங்கள் சாப்பிட வைத்திருந்ததை அப்படியே கொடுத்து விட்டீர்கள். உங்களுக்கு என்ன செய்வீர்கள்?" என்று கேட்டான் அந்தோனி.

"என்ன பசி, பட்டினி சர்வ சாதாரணம். ஒருவேளை சாப்பிடாவிட்டால் நான் செத்தா போய்விடப் போகிறேன்? நீங்கன் சாப்பிடுங்கள். நீங்கள் இந்த ஏழையின் வீட்டில் உண்டால் அதுவே நான் சாப்பிட்ட திருப்தியைத் தரும்!" என்றான் அவன்.

அந்தோனியும் கடவுளும் அந்த ஏழை அளித்த கஞ்சியை உண்டனர். பின்னர் வெளியே வந்து அவனைக் கடவுள் ஆசீர்வதித்தார். "தாங்கள் எங்கள் பசியைப் போக்கியதற்கு நன்றி. நாங்கள் வருகிறோம். உங்களுக்கு ஒரு பசு மாடு இருப்பதாகப் பேச்சுக்கிடையே சொன்னீர்கள் அல்லவா அந்தப் பசு மாடு இன்றைக்குச் செத்துப் போகும்! நீங்களும் வெகு விரைவில் இறந்து போவீர்களாக!"

அந்த ஏழை ஒன்றும் கூறவில்லை. ஒன்றும் தோன்றாமல் நின்றான். அவர்கள் சொன்னதில் ஏதோ பொருள் இருக்கிறது என்று எண்ணி வாய்முடி மௌனமாக நின்றான். அவர்கள் கிளம்பிச் சென்றனர்.

அந்தோனிக்கு உள்ளம் கொதித்தது. "பிச்சைபோட மறுத்தவனுக்கு ஆசீர்வாதம். பிச்சை போட்ட நல்லவனுக்கு சாபம். இப்படிச் செய்யலாமா கடவுளே?" உள்ளக் கொதிப்புடன் கேட்டான் அந்தோனி. "அந்தோனி, நான் சொன்னதை நீ நன்றாகக் கவனித்திருந்தால் உண்மை புரிந்திருக்கும். பணக்காரனுக்குச் செல்வமும் ஆயுளும்கூட வேண்டும் என்று ஆசி வழங்கினேன். உண்மைதான்! அப்படி வளர்ந்தால் என்ன ஆகும்? அவன் மேலும் மேலும் பாவங்களைச் செய்து கொண்டேயிருப்பான். இதனால் அவன் இறந்தவுடன் நரகத்தை அடைந்து அந்தத் தண்டனையை அனுபவிப்பான்.

இந்த ஏழைக்கு அந்தப் பசுமாடு ஒரு பந்தம். அதுவும் செத்துப்போய்விட்டது என்றால் அவன் விரக்தி அடைவான். அவன் கவனம் இறைவன் பக்கம் திரும்பும். அவன் விரைவிலே செத்தவுடன் நல்ல கதியை அடைவான். அவனை எந்தப் பாவமும் பற்றாது. அதனாலே பணக்காரனை வாழ்த்துவதுபோலச் சபித்தேன். ஏழையைச் சபிப்பதுபோல வாழ்த்தினேன் புரிந்ததா?" அந்தோனி பிரமித்துப் போனான்.

கடவுளின் செயல்களை அறிய மனிதனால் முடியாது.

## கொஞ்சம் சிரிங்க

தாய் : டொக்டர் என் மகனை கட்டுப்படுத்த முடியவில்லை... வீட்டில அதை மாற்று இதை மாற்று என எல்லாத்தையும் மாத்தச் சொல்கிறான்.
டொக்டர் : ஓ..... அப்படியா வேண்டாம். இது ஒரு வகை. நோய்... நான் அதைமாற்ற உதவுகிறேன்.
மகன் : முதலில் அந்த டொக்டரை மாற்று......!!

*ஜெ. ஜெயசுதன், அந்தோனியார் புரம், இ. கடவை.*

நோயாளி : மூணு நாளா காது சரியா கேட்கல டாக்டர்.
வைத்தியர் : நாய் எந்த இடத்தில் கடிச்சிது?

*வை. ஜெ. டியூலன், நானாட்டான்.*

தாய் : டாக்டர் மயக்கமா இருக்கிற என் பையன் எப்போ கண்திறந்து பேசுவான்?
டாக்டர் : பேசவேமாட்டான்.
தாய் : ஏன்?
டாக்டர் : யாரும் கண்ணால் பேசமாட்டார்கள்.

..............................

தகப்பன் : நாய் வாலைப் பிடிச்சு இழுக்காதே அது கடிக்கும்.
மகன் : போங்கப்பா நாய் வால் எங்காவது கடிக்குமா?

..............................

வயோதிபர் : என்னுடைய ஐந்து சன்களும் என்னைக் கைவிட்டு விட்டார்கள். இப்ப ஆறாவது சன் தான் கை கொடுக்கிறார்.
மற்றவர் : அது யார் ஆறாவது சன்?
வயோதிபர் : பென்சன்

..............................

பரீட்சை எழுதி விட்டு வந்த பேரனிடம்
தாத்தா : கேள்வித்தாள் எப்படியப்பா இருந்தது?
பேரன் : வெள்ளையாகத்தான் இருந்தது.
தாத்தா : அது சரி நீ எப்படி எழுதினாய்?
பேரன் : பேனாவாலதான்.
தாத்தா : என்ன மார்க்ஸ் வரும்?
பேரன் : டீச்சர் போடும் மார்க்தான் வரும்.

## மன்னா விளம்பரப் பலகை

"பிறர்மீது குற்றம் காணும் அளவு ஒருவன் தானே குற்றவாளியாகின்றான்"

*யே. றொசாந்தினி, பிடாரிகுளம், முருங்கன்.*

"மனித மனங்கள் கலங்குவது அணுக் குண்டுகளினால் அல்ல, சில அன்பற்ற இதயங்களினால்".

"வயிறு புடைக்க உண்ணுபவன் தனக்குத்தானே புதைகுழியை தோண்டிக்கொள்கிறான்"

*செ. ஜெசில்டா, இல - 08, மடுக்கோவில்.*

"வறுமையில் நிறைவு காண்பவனே பெரிய பணக்காரன்"

"பொருளற்றவனைக்காட்டிலும் பொருள் உடையவனே அதிகம் துன்பமடைகின்றான்."

*யோ. ஆன் சுஜானி, குஞ்சுக்குளம், மடுறோட்.*

"இழிவும் ஏமாற்றமும் நம் உயிரின் ஆற்றலை வளர்க்கின்றன".

*தே. ஜெபமலர், அடம்பன்.*

"பிறர் பேசுவதை செவிமடுத்துக் கேட்பவன் ஒரு சிறந்த பேச்சாளனைவிடப் பிரபலமானவன்"

*செ. கொண்சன், மாவிலங்கேணி, முருங்கன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன்களை நோக்கி .....

தொடர் கட்டுரை

அத்தியாயம் – 14

– ஆங்கில மூலம் –
அமரர். அருட்கலாநிதி பப்ரிஸ் குருஸ் FSC
*தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P வங்காலை.*

## ஒரு வைர மனங் கொண்ட யுவதி

"இல்லை இந்த அசிங்கமான கருவி எனக்கு வேண்டாம்", என்று மறுத்தாள் அந்த இரண்டு கைகளும் இல்லாமல் பிறந்த பீட்றிஸ் லோம்பஸ் பெரெஸ் என்ற சிறு அங்கவீனக் குழந்தை. நான்கு வயதிலே அந்தச் சிறுமியால் அந்தப் பாரமான கொழுக்கியை தனது பலமிழந்த தோள்களினால் சுமக்க முடியவில்லை.

"என்னுடைய எல்லா வேலைகளையும் எனது காலாலும் கால் விரலாலும் செய்யப்போகிறேன்" என்று வற்புறுத்தினாள். அதைத்தான் அந்தப் பெண் கடந்த 20 வருடங்களாகச் செய்து கொண்டிருக்கிறாள். ஒரு காலால் நின்றுகொண்டு மறு காலால் மேசைமீது எழுத முடியும். அவளுடைய பல்லைத் தீட்ட, முகத்தைக் கழுவ, தலையை வார, கோப்பையைக் கழுவ, காசோலையில் ஒப்பமிட, புத்தக அலுமாரியில் இருந்து புத்தகத்தை எடுக்க முடியும். வேறு என்ன? நம்பமுடியாத சுறுசுறுப்புடன் ஒரு ஊசியில் நூலைப் போடமுடியும்.

மற்றவர்கள் தங்கள் கைகளாலும், விரல்களாலும் செய்யக்கூடிய வேலைகளை அவள் தனது காலினாலும் கால் விரல்களினாலும் செய்தாள். மனோதிடம், துணிவு, வைரமனம் ஆகியன அவளை நமது காலத்தில் உள்ள பெண்களுக்குள்ளே ஒரு தைரியசாலியான பெண்ணாக மாற்றியுள்ளது.

தைரியமூட்டக்கூடிய கதைகள் என்னை எப்பொழுதும் வசியம் செய்து இழுக்கும். 80ம் ஆண்டின் முற்பகுதியில் கொழும்பில் உள்ள யப்பானிய தூதரகத்தில் "நொறிக்கோ" என்ற தலைப்பில் ஒரு அங்கவீனமான குழந்தையின் உண்மைக் கதையைக் கொண்ட படம் ஒன்று காட்டினார்கள். அந்தப் பெண்ணும் சரியாக இந்த அங்கவீனமான பெண் குழந்தையைப் போன்றே நம்ப முடியாத ஆச்சரியமான செயல்களைத் தனது கால் விரல்களினால் செய்து காட்டினாள். அந்தப் புகழ்மிக்க படம் மிகவும் பாராட்டப்பட்டு அசௌக்கியமான, வலது குறைந்த இளம் வயதினருக்கு தங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு தைரியமூட்டக்கூடியதாக இருந்தது.

### ஒரு துன்பமான பிள்ளைப் பருவம் :

பீட்றீஸ் லோபஸ் - பெரெஸ் 1974ம் ஆண்டு அத்திலாந்து சமுத்திரத்தின் கிறேனி தீவுகளில் ஒன்றான (ஸ்பானியாவுக்கு அண்மையில்) சாந்த குரூஸ் டி ரெனறிவ் என்ற நகரில் பிறந்தாள். துரதிஷ்டவசமாக அவள் சில நாள் வயதாக இருக்கும்பொழுது மனச்சாட்சியற்ற, கல்நெஞ்சம் கொண்ட பெற்றோரால் கைவிடப்பட்டாள். இந்தத் தாறுமாறான உலகத்தில் அந்த உதவியற்ற குழந்தையின் தலைவிதி எப்படியிருக்கும்? எல்லாப் புயல்களையும் தைரியத்துடன் எதிர்கொண்டு அப்பாவிக் குழந்தைகளைக் காப்பாற்ற வானதூதர்கள் மனித வடிவில் இருக்கின்றார்கள். இறைவனுக்கு நன்றி. பேரற்ற, பெற்றோரற்ற, மானம், மரியாதை இழந்த இக்குழந்தை கனேறித் தீவுகளில் வண. சகோதரிகளால் நடத்தப்படும் அனாதைகள் மடத்தின் அன்பான பாதுகாப்பில் வந்து சேர்ந்தது. அங்குள்ள சகோதரிகளால் பீட்றைஸ் என்ற பெயர் அவளுக்கு வழங்கப்பட்டது. எப்படி என்றாலும் இந்த உலகில் உள்ள இப்படியான அனாதைக் குழந்தைகளுக்கு லோப்பஸ் - பெரெஸ் என்ற இரு பொது ஸ்பானிய பெயர்களை ஒன்றிணைந்த பெயர் வழங்கப்படுகிறது என்று நாங்கள் அறிந்தோம். பெற்றோர்கள் வழமையாக இப்படியான வலதுகுறைந்த குழந்தைகளை கைவிடும்பொழுது அவர்களைக் கண்டுபிடிக்க முடியாத காரணத்தால் அனாதைக் குழந்தைகளுக்கு புறம்பான பெயர் கௌரவம் மறுக்கப்படுகிறது.

### ஒரு வைர மனம் :

வேலைகளைப் பொறுத்தமட்டில் வைர மனத்தைக் கொண்ட கைகள் அற்ற, அனாதை பீட்றைசின் உறுதியான முன்னேற்றத்தை ஒன்றாலும் தடைசெய்ய முடியவில்லை அவளுடைய திறமைமிக்க கால் விரல்களின் சாமர்த்தியம்தான் எதற்கும் அவள் இரண்டாம் தரம் அல்ல என்று நிரூபித்தது.

நவீன சினிமாக்கள் ஆண்களினதும் பெண்களினதும் வீர சாகசங்களையும் வீரச்செயல்களையும் அவர்களது சளைக்காத மனங்களையும் எடுத்துக்காட்டுகின்றன.



விஞ்ஞானமயமான படங்களில் இயந்திரமயமான கணனி முறையிலான கைகளும், கால்களுமே அடிப்படையாக இருக்கின்றன. ஆர் நோல்ட் சுவர்செரிகள் என்ற நடிகர் நடித்த "The Terminator" (முடிவு கட்டுபவர்) என்ற படமும் இத்தகையதுதான். அந்தப் படத்தைப் பார்த்தபின் பீட்றைஸ் அமெரிக்காவுக்குச் சென்றாள். திறமைசாலிகளினதும் வல்லுனர்களினதும் வழிப்படுத்துதலில் அவளுக்கு ஒரு 12 றாத்தல் எடையுள்ள இலகுவான கையொன்றைப் பொருத்தி பெருந்தன்மையுடனும் சுயமரியாதையுடனும் அவளை 21ம் நூற்றாண்டின் வாழ்வை எதிர்கொள்ளச் செய்தனர்.

அவருடைய புதிய கைகளைப் பொருத்திய வைத்தியர் சாள்ஸ் எச். டயஸ் மேயர் கூறினார்." அவருக்கு ஒரு கோப்பையைத் தூக்கக்கூடிய ஆற்றல் இருக்கும். ஆனால் அவளால் அந்த கோப்பையை உணரமுடியாது". பீட்றைஸ் அதைப்பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. உண்மையான நிலையை உண்மையான மனோத்திடத்துடன் ஏற்றுக்கொள்ள உறுதிபூண்டாள். உலகில் உள்ள இலட்சக்கணக்கான அங்கவீனமான குழந்தைகளுக்கு நம்பிக்கையும் தூண்டுதலும் உண்டாக்கினாள்.

### ஒரு தன்னலமற்ற இலக்கு :

பீட்றைஸ் லோப்பஸ் - பெரெஸ் செயற்கைக் கரங்களுடன் கனேறி தீவுகளில் உள்ள தனது வீட்டுக்குத் திரும்பத் திட்டமிட்டாள். தான் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக தனது சொந்த அடையாளத்தை வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக தனது பெயர், தனது கௌரவம், சுயமரியாதையுடன் வாழவேண்டும் என்பதற்காக அந்தக் கைகளைப் பாவிக்கும்பொழுது எல்லையற்ற பொறுமையைக் கடைப்பிடித்து கற்றுக்கொண்டாள். அவள் தனக்கென்று ஒரு வீடு வைத்துக்கொண்டு ஒரு குடும்பமாகி தனது இயந்திரக் கையால் ஒரு குழந்தையைத் தூக்கி "வாழ்க்கை மிக அழகானது வாழ்க்கை வாழ்வதற்கு உண்மையில் பெறுமதியுள்ளது" என்று பலமாகக் கத்த வேண்டும் என்று விரும்பினாள். சான்யுவான் டீ டயஸ் என்னும் இடத்தில் இந்த அங்கவீனக் குழந்தைகளுக்கு புனர்வாழ்வு அமைத்துக் கொடுப்பதில் தான் முற்றாக ஈடுபடுவதே அவளது குறிக்கோளாக இருந்தது. "தான் பெற்றதை திரும்பக் கொடுக்க வேண்டும் என்று கூறிய இந்த எண்ணம் மட்டுமே அவளை நமது காலத்தில் ஒரு நேசிக்கப்பட வேண்டிய தைரியசாலிப் பெண்ணாக மாற்றமுடியும்.

### சேவை செய்வதே வாழ்க்கையின் வெற்றி

"என்னைப் பொறுத்தவரை வெற்றி என்பது சக்தியாலோ அல்லது அதிர்ஷடத்தாலோ அல்லது புகழாலோ அளக்கப்படும் ஒன்றல்ல. மற்றவர்களுக்கு சேவை செய்யும் வாழ்வே வெற்றியான வாழ்வு என்று நான் நம்புகிறேன். எப்பொழுதும் ஒருவனுடைய திறமைக்கு மதிப்பளிப்பது கௌரவத்துடன் வாழ்வது, ஒருவனுடைய திறமைகளையும் கொடைகளையும் மற்றவர்களின் நன்மைக்காக அர்ப்பணிப்பது இவைகள்தான், சடப்பொருட்கள் இறந்து அழிந்து போகையில் நிலையாக நீடித்து நிற்கும் வெற்றியின் அளவைகள்." - ஜெரால்ட் போர்ட் -

# உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி- 104

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

வேதாகமத்தில் காணப்படும் 150 திருப்பாடல்களில் 70 திருப்பாடல்கள் தாவீது அரசனால் பாடப்பட்டவை என்பதை முன்னர் பார்த்தோம். இவை தவிர மேலும் 80பாடல்கள் பொதுப்பாடல்களாக உள்ளன. பொதுப் பாடல்களிலே இஸ்ராயேல் மக்கள் இறைவனைப் போற்றிப் புகழ்ந்த பாடல்களும் வேண்டுதல்களும் நன்றிப் பாடல்களும் அடங்கும். இவை தவிர கொராக்கியர் பாடல்கள் 10, ஆசாபின் பாடல்கள் 12, சலமோன் பாடல்கள் 02, நாடு கடத்தப்பட்டோர் பாடல் 01, மோசே பாடல் 01, ஆகும். இவைதான் இஸ்ராயேல் மக்களின் வழிபாட்டுக் கருவிகளாகப் பயன்பட்டு வந்தன.

இன்று நாம் இவற்றைக் சிறிதளவுதான் நமது வழிபாடுகளில் பயன்படுத்துகின்றோம். அந்நிலைமாறி இத்திருப்பாடல்கள் நமது செபவழிபாடுகளில் முக்கிய பங்கெடுக்க வேண்டும். அது நமக்குப் பெரும் பயன் அளிக்கும். அந்நாளைய தெரிந்துகொள்ளப்பட்ட மக்களின் நம்பிக்கையின் அத்திவாரத்தில் நின்று நாம் செபிக்கின்றோம் என்ற உணர்யையும் நமக்குள் ஏற்படுத்தும்.

**இனி எமது வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் 35ம் திருப்பாடலில் இருந்து 42ஆம் திருப்பாடல் வரையுள்ள பகுதிகளிலிருந்தது தொகுக்கப்படுகின்றன.**

1. என் உள்ளம் எதில் அகமகிழும்?
2. பொல்லாரின் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டேயிருப்பது எது?
3. ஆண்டவரது எந்தப்பண்பு முகில்களைத் தொடுகின்றது என்று கூறப்படுகின்றது?
4. மானிடர் எதில் தாகம் தணிக்கின்றனர்?
5. தீமை செய்வோருக்கும் பொல்லாங்கு செய்வோருக்கும் என்ன நிகழும்?
6. 38ம் சங்கீதத்தில் தாவீதரசன் இறைவனிடம் வேண்டுவது என்ன?
7. தாவீதரசன் தன் வாழ்வின் முடிவுபற்றியும் வாழ்நாளின் அளவுபற்றியும் ஏன் தெரிந்துகொள்ள விரும்புவதாகக் கூறுகின்றார்?
8. இறைவனின் எந்தப் பண்பை தாவீதரசன் மாபெரும் சபையில் மறைக்கவில்லை என்று கூறுகின்றார்?
9. எளியோரின் நலன்களில் அக்கறைகொள்வோருக்கு ஆண்டவர் எண்ணிறந்த நன்மைகளை வழங்குகின்றார். அவை எவை?
10. என் எலும்புகளை ஊடுருவும் வாள்போல் என்னைத் தாக்குவது எது?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 102இற்கான கேள்விகளுக்கு 30 பேர் விடையளித்திருந்தனர்.**

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

நீ. புஸ்பம், ஒலிமடு, நானாட்டான்.

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. எ. சமித்தா, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
2. எஸ். பி. பிறிஜிற்றா, மாவிலங்கேணி, முருங்கன்.
3. நெ. மேரி நெவில்டா (டயானா) பெரிய கோமரசன்குளம்.
4. அ. கெமல்சன் பீரிஸ், 100 வீட்டுத்திட்டம், அரிப்பு மேற்கு.
5. அ. க. கிறிப்திகா 41, புனித மரியாள் வீதி, திருகோணமலை.
6. நீ. சிந்துஜா, ஒலிமடு, நானாட்டான்.
7. அ. அமலநாதன், பாலைக்குளி, நானாட்டான்.
8. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
9. நீ. ஆ. சிந்துஜா, திட்டமிடல் கிளை, மடு வலயம்.
10. நீ. ஆன் சிந்துஜா, மடு. வ.கல்வி அலுவலகம்.

### போட்டி 102 இற்கான சரியான விடைகள்

1. கடுமையானது. (19.7)
2. நம்மைத் தண்டிப்பவை. (20:1-2)
3. இவர் விரும்பாததை அரசருக்குத் தந்தார். (21:1-3)
4. தீமைகளை நாடுபவராய் இருக்கின்றார். (22:3-5)
5. என் சிரசில் முள்முடி சூட்டினார்கள். (22:15-18)
6. துன்புறுவோரின் துயர்துடைக்க முன்வரவில்லை.(22:23-24)
7. என்னை என் எதிரிகளின் கைகளில் ஒப்படைக்கின்றார். (23:1-3)
8. தூய்மையற்ற உள்ளத்தோடு ஆண்டவரை அணுகுபவர்.
9. அவரது தீச்செயல்களை ஆண்டவர் கண்டுகொள்ள மாட்டார்.
10. மாசற்றவனாய் என் கைகளைக் கழுவுகின்றேன்.

# நாட்டு நடப்புக்கள் ....... அதிசயம் ஆனால் உண்மை ....... நாட்டு நடப்புக்கள் ....... அதிசயம் ஆனால் உண்மை .......

## நாளொன்றுக்கு 5 பெண்கள்மீது பாலியல் வல்லுறவு

இலங்கையில் ஒரு நாளைக்கு ஐந்து பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவதுடன் மூன்று சிறுமியர்கள் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர். கடந்த ஆண்டில் மாத்திரம் 1,636 பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று அரசாங்கம் தகவல் வெளியிட்டுள்ளது.

அநுராதபுரம், பொலனறுவை, மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலேயே பெண்களுக்கு எதிரான பாலியல் வல்லுறவு சம்பவங்களும், பாலியில் துஸ்பிரயோகங்களும் கூடுதலாக இடம்பெற்றுள்ளன. அத்துடன் இப்போது வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் பெண்களுக்கெதிரான சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 414 சிறார்கள் பெற்றோரை இழந்து வடக்கு அரச சிறுவர் இல்லங்களில்

வட மாகாணத்திலுள்ள அரச சிறுவர் இல்லங்களில் மாத்திரம் 414 சிறார்கள் தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரையும் இழந்த நிலையிலுள்ளனர். 1,195 சிறார்கள் தாய் அல்லது தந்தை ஆகிய இருவரில் ஒருவரை மட்டும் இழந்த நிலையில் உள்ளனர். 1,349 சிறார்கள் பிற காரணங்களால் பெற்றோர், உறவினர்களைப் பிரிந்து அரச சிறுவர் இல்லங்களில் தங்கியுள்ளனர்.

உள்நாட்டு போர் காரணமாகவே அதிகமான சிறார்கள் தமது பெற்றோரை இழந்துள்ளனர். இது தவிர இயற்கை மரணம் மற்றும் விபத்து போன்றனவும் இறப்புக்கு காரணமாக அமைந்துள்ளன. கடந்த வருடம் இந்தக் தரவுகள் பதிவாகியுள்ளன என்று வடமாகாண நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

## வடக்கில் 179 சிறார்கள் கடந்த வருடம் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம்

வடமாகாணத்தில் கடந்த வருடம் 179 சிறார்கள் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களைவிட 102 சிறார்கள் உடல் ரீதியான துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளனர். 45 பேர் இளவயதுத் திருமணம் செய்துகொண்டுள்ளனர். தமக்குக் கிடைத்த முறைப்பாடுகளில் இருந்து மட்டுமே இந்த எண்ணிக்கை தெரியவந்துள்ளது என்று வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சிறார்கள் அதிகளவில் யாழ்ப்பாணத்திலேயே இனங்காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இவ்வாறு 65 பேரும், வவுனியாவில் 39 பேரும். முல்லைத்தீவில் 32 பேரும், கிளிநொச்சியில் 28 பேரும், மன்னாரில் 15 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.117

## எரேமியா 27 முதல் 52 முடிய

உங்கள் விடைகளை மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 03 | | 15 | ★ | | | 04 | | | |
| | 08 | | ★ | | 10 | ★ | | 14 | ★ |
| | | 17 | | ★ | | | 20 | | 26 |
| ★ | | | 29 | 22 | | | ★ | | ★ |
| | | 01 | ★ | | | 28 | 05 | | 09 |
| | ★ | | 11 | | | 25 | | ★ | |
| 16 | | | | | 18 | ★ | | 13 | |
| ★ | | ★ | | | | | 06 | | ★ |
| 27 | | 24 | 07 | 30 | ★ | | 19 | | 23 |
| 02 | 21 | | ★ | | | 12 | | ★ | |

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

2. ஆனால் அமைதியாகவே ...............
3. கெதலியா .............. செய்யப்பட்டு ___ தெரியவில்லை.
4. நீ என் ...................க் குழந்தை அல்லவா?
5. இஸ்மயேல் சிறைப்படுத்தி .............. விலிருந்து ___ கொண்டார்கள்.
8. அம்மக்களுக்கு நலன் அளித்து ................. வாழ்வை வழங்குவேன்.
13. ஆறுதல் ............... அவர் மறுக்கின்றார்.
16. யாக்கோபுக்கு அது வேதனையின் ....................
17. இதற்கிடையில் பார்வோனின் ................ எகிப்தினின்று புறப்பட்டு வந்தது.
20. அதன் ................. குன்றவில்லை.
22. இம்மனிதன் கண்டிப்பாய்ச் .................... வேண்டும்.
23. ................ உங்களுக்கு அடையாளம்.
25. நீ ஏட்டுச் ................. ஒன்றை எடுத்துக்கொள்.
26. போர் ................. ஒலிக்காது.
28. மகிழ்ச்சியோடு .................. மிதிப்பவன் எவனும் இல்லை.

### மேலிருந்து கீழ்

3. மோவாபின் ................. முறிந்துவிட்டது.
4. உலகில் எல்லா .............. களும் அவர்களை ___ செய்வேன்.
5. மக்கள் கேட்கும்படி ___ எல்லாவற்றையும் ...................... தலைவர்களிடம் எடுத்துரைத்தார்.
6. ................. சித்கேனூ என்னும் பெயரால் இந்நகர் அழைக்கப்படும்.
8. அவர்களின் வீழ்ச்சியின் ஒலியால் ................. நடுங்கும்.
9. உன்னைப் ................. முகடுகளினின்று உருட்டி விடுவேன்.
10. தலைக்கவசங்களுடன் ................ வகுத்து நில்லுங்கள்.
11. வாளுக்குத் தப்பிப்பிழைத்த மக்கள் ................ நிலத்தில் ___ கண்டடைந்தனர்.
13. ஏனெனில் உனது குற்றமோ ....................
14. .................. மாளிகையையும் ___ தீக்கிரையாக்கினர்.
15. எனவே யோயாக்கின் தன் ................. உடைகளைக் களைந்தெறிந்தான்.
17. அவற்றுக்குப் ................ எழுதி முத்திரையிடுவர்.
19. அவை போன்ற .................. பல சொற்களும் அவற்றோடு சேர்க்கப்பெற்றன.
23. மக்களினங்கள் ..................... ஒருபோதும் அங்குச் செல்லமாட்டா.
24. ஏனெனில் இஸ்மயேலைப் பற்றி நீ கூறுவது .................... என்றார்.
27. .................... மொட்டையடிக்கப்படும்.
28. எகிப்து ஓர் அழகான இளம்.....................

### கீழிருந்து மேல்

7. அனாதைகளைப்பற்றிக் ............... கொள்ளாதே.
8. ................. நாட்டுவேனேயன்றி, பிடுங்கி எறியமாட்டேன்.
12. உன் ..................... குரல் மண்ணுலகை நிறைத்தது.
16. பின்னர் அரசன் ___ எரேமியா ................. கூடத்திற்கு மாற்றப்பட்டார்.
17. நம் கடவுளான ஆண்டவரின் செயலைச் சீயோனில் ..................... சாற்றுவோம்.
18. இறைவாக்கினர் எரேமியா கேட்கும்படி ...................... செப்பனியா ___ காட்டினார்.
21. .................. நெஞ்சங்களுக்கு நான் நிறைவளிப்பேன்.
30. இதோ .................. கள் வருகின்றன.

### வலமிருந்து இடம்

1. எப்பக்கமும் ஒரே ............. என மனிதர் ஓலமிடுவர்.
4. மேலும் .............. எல்லா மக்கள் ___ இதுவே.
6. அவை .................. பாபிலோனுககுக் கொண்டுசெல்லப்படும்.
10. மோவாபின் ................ அண்மையில் உள்ளது.
12. .................. நடக்கவில்லை.
18. .................. சொல்வோர்மேல் வாள் வரும்.

## தென்னிலங்கையில் உள்ள ....

1ம் பக்கத் தொடர்ச்சி

இந்தக் கோரிக்கையை விடுத்துள்ள இந்தக் குழுவினர் துரோகிகள் என்பதைத் தாங்களே நிரூபித்துள்ளனர். இனங்களுக்கு மத்தியில் பிரிவினைக்குக் காரணமாகச் செயற்படும் விடயம் இலங்கை அரசியல் அமைப்பை முழுமையாக மீறுவதாகும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். "ஆயர்மாரின் துரோகத்தனமான நடவடிக்கைக்கு எதிராக நாட்டின் இறைமையைப் பாதுகாக்க" ஜனாதிபதி உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## இலங்கையில் நடைபெறவுள்ள .....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

மறைபரப்பில் இயேசுவைப் பின்தொடர 'புறப்பட்டுப் போக நீங்கள் அனுப்பப்பட்டுள்ளீர்கள்" (மத்.10:5) என்பதே இவ் அமர்வுக்கான கருப்பொருளாக அமைந்துள்ளது.

இக்கருப்பொருளானது 2009ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டில் நடந்தேறிய 5வது அசிப்பா பொது அமர்வின் மையப்பொருளான 'இதை என் நினைவாகச் செய்யுங்கள்" (லூாக் 22:19) -அன்பியங்களில் அப்பம் உடைபடுதலும் வார்த்தை பகிரப்படுதலும் - என்பதனையும் ஆயர்களின் பேரவையில் (Synod of Bishops) இவ்வருடத்திற்கான கருப்பொருளான 'புதிய நற்செய்தி அறிவிப்பும் விசுவாசக் கையளிப்பும்" ('The New Evangelization and the Transmission of the Faith") என்பதனையும் பின்பற்றி தெரிவுசெய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 165 உறுப்பினர்கள் கலந்துகொள்ள இருக்கின்றார்கள். இலங்கைத் திருச்சபையின் கொழும்பு, சிலாபம், குருநாகல் மறைமாவட்டத்திலுள்ள ஏறக்குறைய 25 பங்குகளுக்கு இந்நிகழ்வில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் கள அன்பிய சந்திப்பிற்காக செல்ல உள்ளார்கள். அத்தோடு பங்குபற்றுவோரின் வேண்டுகோளின் பிரகாரம் இன்னும் சில கள சந்திப்புக்கள் ஏனைய மறைமாவட்டங்களுக்கும் பொது அமர்வுகளின் முடிவில் இடம்பெற உள்ளது.

இலங்கையில் நடைபெற உள்ள 6வது அசிப்பா பொது அமர்வின் வெற்றிக்காக இறைமக்கள் அனைவரினதும் முழுமையான ஒத்துழைப்பும், செப உதவியும் வேண்டப்படுகின்றது.

**தகவல்:- அருட்பணி. எரிக் பெர்ணாண்டோ தேசிய அசிப்பா இயக்குனர்:- மன்னாவுக்காக அருட்பணி. டக்ளஸ் லோகு. மன்னார் மறைமாவட்ட அன்பிய இயக்குனர்.**

## மன்னார் பிரஜைகள் குழுவின் .......

5ஆம் பக்கத் தொடர்ச்சி

முதலாவது நடமாடும் சேவை மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஆண்டாங்குளம் றோ.க.த.க பாடசாலையில் 19.02.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பி. ப 4.00 மணி வரை நடைபெற்றது. இதில் 113 பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகளுக்கும், தேடலுக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் நான்கு காலம் கடந்த திருமணங்கள் பதியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ் நடமாடும் சேவைக்கு மன்னார் அரசாங்க அதிபர், மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர், மாவட்ட பதிவாளர், கிராம சேவையாளர்கள், சமாதான நீதவான்கள், உள்ளூர் பதிவாளர்கள், ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மன்னார் பிரஜைகள் குழுவின் இரண்டாவது நடமாடும் சேவை 04.03.2012 அன்று கள்ளியடி அ.த.க பாடசாலையில் நடைபெற்றது. இதில் வெள்ளாங்குளம், பெரியமடு, விடத்தல்தீவு, பள்ளமடு, தேவன்பிட்டி போன்ற கிராம மக்கள் 224 பேர் பயனடைந்தனர். மேலதிக விபரங்ளுக்கு மன்னார் பிரஜைகள் குழுவுடன் தொடர்புகொள்ளவும். ***தகவல் : சின்கிளேயர் பீற்றர், திட்டமிடல் அதிகாரி, பிரஜைகள் குழு, மன்னார்.***

## கச்சதீவு ........ 1ஆம் பக்கத் தொடர்

இலங்கையிலிருந்து செல்லும் பக்தர்களுக்காக விசேட படகு சேவைகளையும் கடற்படையினர் மேற்கொண்டிருந்தனர். 3ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழாவில் 4ஆம் திகதி காலை 6.30 மணிக்குத் திருவிழாத் திருப்பலி இடம்பெற்றது. இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி யாழ் மாவட்ட கடற்படை ரியல் அட்மிரல் மற்றும் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தத் திருவிழாவில் பங்கேற்க இந்தியப் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டதுடன், கச்சதீவில் தமிழக கட்சிகள் சில இந்தியக் கொடியை ஏற்றவுள்ளதாக இந்திய புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்ததையடுத்து இந்திய பக்தர்கள் பலத்த சோதனையின் பின்னரே கச்சதீவுக்கு வர அனுமதிக்கப்பட்டனர். இரு நாட்கள் மீன்பிடிக்கவும் தமிழக மீனவர்களுக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது.

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 115ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
பா. எபிரோன்,
இத்திக்கண்டல்,• அடம்பன்.

**இரண்டாம் பரிசு:**
அ. வினோசியா,
செம்மண்தீவு, முருங்கன்.

**மூன்றாம் பரிசு:**
அ. கில்டா,
கட்டையடம்பன், மடுறோட்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 85 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 69 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 115ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. எஸ். பெனிற்ரா, முதியோர் ஓய்வகம், பள்ளமடு.
2. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
3. க. மெர்லின், இத்திக்கண்டல், அடம்பன்.
4. எஸ். மேரி குலோஜினி மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
5. எம். சாலினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
6. யே. கிறிஸ்தம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
7. சலேஸ் இன்னாசி, 19/A பாக்கியம்லேன், பெ.உரும், மட்டக்களப்பு.
8. ம. மேரி வேஜினி, சி.ஐ.சி. உருவாக்கல் மையம், மன்னார்.
9. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
10. ப. கொண்சலா, குருவில், வட்டக்கண்டல்.
11. நோ. ஜெக ஜீவன்றோச், பள்ளிமுனை, மன்னார்.
12. அ. டிலோஜன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
13. அ. அனுசியா, சி.ஐ.சி. உருவாக்கல் மையம், மன்னார்.
14. என். எச். ஜிம்சொன் குலாஸ், 9ம் வட்டாரம், வங்காலை.
15. அ. அனற்றா, பெரிய குஞ்சுக்குளம், மடுறோட்.
16. அ. ஜெயப்பிரியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
17. அகுஸ்தீன் இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
18. அ. ஜெயசாளினி, பெரிய குஞ்சுக்குளம், மடுறோட்.
19. ச. கபிரியேல் பிள்ளை, இத்திக்கண்டல், அடம்பன்.
20. அ. ஒசின் சோபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
21. பா. சுலியானம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
22. கே. யோகராஜா, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
23. அ. சகாயராஜன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
24. அ. அக்ஷனா, ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
25. எம். செனாறின், மாதிரிக்கிராமம், நறுவிலிக்குளம்.
26. எ. சதுர்ஷனா, பள்ளங்கோட்டை, நானாட்டான்.
27. ம. லடிஸ் மேரி, குமானாயங்குளம், ஆண்டாங்குளம்.
28. அ. க. கிறீப்திகா, 41, புனித மரியாள் வீதி, திருகோணமலை.
29. ப. றோசலின், சின்னக்கடை, மன்னார்.
30. சி. நோயல் கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதிமன்றம், மன்னார்.
31. க. சிலோஜினி, இத்திக்கண்டல், அடம்பன்.
33. அ. கிளிங்டன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
34. எஸ். ஆனந் டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
35. க. செலஸ்ரினா, இத்திக்கண்டல், அடம்பன்.
36. எம். சார்லஸ் அன்ரனி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
37. எ. உதயராணி, சி.ஐ.சி. உருவாக்கல் மையம், மன்னார்.
38. எ. அனுசாந், பள்ளங்கோட்டை, நானாட்டான்.
39. எ. விதுஷிகா, இல-108 முதலியார் குளம், செட்டிகுளம்.
40. அ. மேரி எல்மோ, ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
41. எ. சமித்தா, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
42. பா. துஷ்யந்தி, இத்திக்கண்டல், அடம்பன்.
43. யோ. அன்ரனி டிலைக்ஷன், தலைமன்னார் பியர், தலைமன்னார்.
44. எஸ். நிர்மலி, சின்னக்கடை, மன்னார்.
45. வை. சாலட் சிந்துஜா, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
46. பா. ஜொசின்ரன், இத்திக்கண்டல், அடம்பன்.
47. எஸ். நிஷாளினி, சூரியகட்டைக்காடு. நானாட்டான்.
48. வி. மேரி வினுஷா, முத்தரிப்புத்துறை.
49. அ. ஆன் சோபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
50. றோ. கிறிஸ்ரோபர், 18 கோவில் வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

## இல.115 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ✱ | நீ[5] | ஓ[1] | ரு | இ[3] | சா[7] | கு | ம் | சே[14] | மு[11] |
| ஆ[17] | ✱ | ரு | கு[2] | ரு | து | கே[6] | ள | த | ன் |
| ண் | ன் | ✱ | டி | ப[8] | டி | ந[9] | தா[12] | து | பு |
| ட | தா | ன் | ✱ | து | மு[10] | ன் | வீ | த் | கா |
| வ[19] | ந் | தா[22] | ர் | ✱ | ன் | எ[15] | து | சே | க் |
| ர் | வ[20] | ட | ண் | ஆ[18] | ✱ | வு | ழி | பொ[31] | ரே |
| ன | எ[24] | பே[25] | பெ[21] | ✱ | ல் | யே | ர | ஸ் | இ[13] |
| ட | ன் | ச | ✱ | கொ[30] | ல் | லை | ல் | இ[16] | ரு |
| ட் | நா[26] | ✱ | ர் | ன | றி | ற் | யா | ணி | ப[29] |
| ப[23] | ✱ | நீ[28] | து | ந் | மு | வி[27] | ரை | ந் | து |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.116ற்கான முடிவுகளை 2012ம் ஆண்டு மே மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**
கறுப்பு வெள்ளை 4,500/=
கலர் 7,500/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 02 1938



உதிர்வு 20 04 2011

### திரு. சந்தியா இம்மனுவேல் லெம்பட்

**(தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்)**

*ஐயா!* புன்னகைக்கும் உம் பூ முகம் கண்ணிமைக்கும் நொடியில் மறைந்துபோனதே! கலக்கமில்லா எம் கண்களில் கண்ணீர்த்துளி மலிந்து போனதே! உற்றவரும், உடனிருக்கும் மற்றவரும் உமக்காய் அழுது வடிக்கிறோம். உம் பிரிவை ஏற்க முடியாமல்....!
நாட்கள் நகர்ந்து போகலாம். எங்கள் ஏக்கம் குறைந்து போகாது. கோவில் வாசலில் கடவுளோடு இருப்பீர்....
சிலுவையடியில் சீமோனாய் நிற்பீர்......
இன்று கோவிலும் சிலுவையும் வெறுமையாகத் தோன்றுகிறது
உம் பாதம் படாமலும் கரங்கள் தீண்டாமலும்!
எம் கஸ்டங்களையெல்லாம் கண்ணீராய் வடிக்கின்றோம்.
தேவனிடத்தில் எம் தேவைகளுக்காய் மன்றாடும்.
***என்றும் உங்கள் நீங்கா நினைவுடன், உங்கள் அன்பு மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.***

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 05 1980



உதிர்வு 12 04 2009


### திரு. மிக்கேல்பிள்ளை நிக்சன்

**(பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்)**

எம் அன்பான உறவே! நீர் எங்கள் அனைவரையும், இம்மண்ணையும் விட்டுப்பிரிந்து சென்று மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. என் அன்புக் கணவரே! எம் அனைவர் மனதிலும் அழியாத இடம்பிடித்தவரே! எங்கிருந்து வந்தது உமக்கு இந்த மரணம்? எம் அனைவரையும் உம்மை நினைத்து ஏங்கித் தவிக்கவிட்டு எங்கே சென்றீர்? என் பாசமான தந்தையே! உம் ஆசை முகம் இன்னும் என் மனதைவிட்டு அகலவில்லையே! மருமகனே, ஆயிரம் உறவுகள் இருந்தாலும், சொந்தங்கள் ஏராளம் வந்தாலும், உம்மைப்போல் ஓர் மனிதர் எமக்கு கிடைக்கப் போவதில்லை. இவ்விடத்தில் காலங்கள் மாறினாலும், வருடங்கள் ஓடினாலும் எம் அன்பு பிரியாதையா!
***இவரின் பிரிவால் துயருறும்:-*** *மனைவி ஜெசிதா, மகள் நிசாலினி, மாமா, மாமி, மச்சான்மார்கள், மச்சாள்மார்கள் மற்றும் உற்றார் உறவினர்கள்.*

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 02 1930



உதிர்வு 19 04 2011

### திரு. வயித்தி சாமுவேல் இம்மானுவேல்

**(முருங்கன் பிட்டி, முருங்கன்)**

*"ஆண்டவரே, உம்மை நோக்கி என் உள்ளத்தை உயர்த்துகின்றேன். என் இளமைப் பருவத்தின் பாவங்களையும் என் குற்றங்களையும் நினையாதேயும். உமது பேரன்பிற்கேற்ப என்னை நினைத்தருளும். ஏனெனில், ஆண்டவரே நீரே நல்லவர்...." (திபா.25:1.7)*

*"இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகிறது." (1 கொரி.15:20)*

உங்கள் பிரிவால் துயருறும்
*மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 08 1926



உதிர்வு 03 04 2011

### திரு. அந்தோனி மரியதாசன் குலாஸ்

**(வங்காலை – 09)**

"கிறிஸ்துவோடு இறந்தோமானால் அவரோடு வாழ்வோம்"


ஓராண்டு சென்றாலும் உம் நினைவு மாறாது.
சீராண்ட பண்புடனே சிந்தை மகிழ்கொண்டோமே
பேராண்ட உன் பெயரை பியத்தெறிந்து விட்டாரே!
யார் மீண்டும் எம் மனதில் நிம்மதியை வைப்பாரோ!

***"நித்திய இளைப்பாற்றியை இவருக்கும் கொடுத்தருளும் ஆண்டவரே. முடிவில்லா ஒளி இவர்மேல் ஒளிர்வதாக. சமாதானத்தில் இளைப்பாறுவாராக ஆமென்"***

*பிரிவால் வருந்தும் :-*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்.

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 02 1929



உதிர்வு 15 04 2008

### அமரர். குமாரசிங்கம்

**(பாலைக்குழி, அடம்பன்.)**


***("உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் உயிர் வாழ்வான்")***

உடலால் எம்மைப் பிரிந்தாலும்,
உள்ளத்தாலும், உணர்வுகளாலும்
என்றுமே எம்முடன் வாழ்கிறீர்கள்.
கண்களில் கண்ணீர் முத்துக்களுடன்
கலங்கி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
*அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 07 1985



உதிர்வு 30 04 2007

### செல்வக்குமார் அன்ரனி அரவிந்தன்

**யாழ் பல்கலைக்கழக கலைப்பீட புகுமாணவன்**

**(சின்னக்கடை, மன்னார்)**

மண்ணில் மறைந்து ஐந்து ஆண்டுகள் ஆனாலும் எங்கள் மனதைவிட்டு அகலவில்லை உன் நினைவுகள்! யுத்த கோரத்தாண்டவத்தால் சிக்குண்டு அகால மரணமடைந்த உன் இனிய முகம் எம்முள்ளத்தில் மறையவில்லை. காத்திருந்தோம் உன் இனிய குரல் கேட்க! கதறுதையா எம்முள்ளம்! உன் இனிய முகம் காண ஏங்கித்தவிக்கின்றோம். எம்முள்ளம் ஏங்குதையா. எங்கே நீ சென்றுவிட்டாய்? நீங்காத நித்திய வாழ்வில் இறைவனோடு இணைந்திருக்க பிரார்த்திக்கின்றோம்.
*இவரின் ஆன்ம சாந்திக்காக 30.04.2012 அன்று புனித செபஸ்தியார் பேராலயத்தில் காலை 5.45 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.*
***பிரிவால் துயருறும்:-*** அப்பா, அம்மா, தம்பி, தங்கைமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

## அருட்தந்தை சிறிதரன் ....1ஆம் பக்கத் தொடர்

மார்ச் 08ம் திகதி வெலிக்கந்தையில் நடைபெறவிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக சென்றவேளை வாழைச்சேனையில் வைத்து சுகவீனமுற்ற நிலையில் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்தார்.

மட்டக்களப்பு தாண்டவன்வெளியை சொந்த இடமாக கொண்ட அடிகளார் 1993ம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து திருமலை, மூதூர், கல்லாறு ஆகிய பணித்தளங்களில் குருவாகப் பணியாற்றினார்.

49 வயதுடைய அடிகளாருக்கு இந்தியாவின் பெங்களூர் நகரில் அமைந்துள்ள கல்வி முகாமைத்துவம் மற்றும் சமூக சேவைகள் என்னும் நிறுவனத்தின் 'சர்வோட்டம் - நீயூ டில்லி' என்ற அமைப்பினால் கடந்த வருடம் நடத்தப்பட்ட 'கற்றறிவாளர் விருது - 2010' விழாவின்போது கௌரவ பேராசிரியர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அன்னாரின் ஆன்மா இறைவனில் அமைதி அடையப் பிரார்த்திக்கின்றோம். அவரின் இழப்பால் துயருறும் திருமலை மட்டுநகர் மறைமாவட்ட ஆயர் குருக்கள் இறைமக்களுக்கும் அடிகளாரின் குடும்பத்தினருக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பான மன்னா தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றது.

## இயேசுவின் கல்லறை ...... 3ஆம் பக்கத் தொடர்

ஜோனாவை விழுங்கிய பெரிய மீன் அல்லது திமிங்கிலம், பிறகு அவரை விட்டுவிட்டதாக பைபிளில் கூறப்பட்டிருக்கிறது. மீனின் உருவத்தை கணினியின் உதவியுடன் பெரிதாக்கிப் பார்த்தபோது. அது ஜோனாவின் கதையைப் பிரதிபலிப்பதாக இருப்பது தெரியவந்தது.

கல்லறைப் பெட்டிகளில் செதுக்கப்பட்டிருக்கும் வாசகம், மீனின் உருவம் ஆகியவை 'உயிர்த்தெழுதல்' என்கிற கிறிஸ்தவ நம்பிக்கையைக் காட்டும் வகையில் அமைந்திருப்பதாக "லைவ் சயன்ஸ்" பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது. பெரும்பாலான கிறிஸ்தவர்களின் கல்லறைகளில் ஜோனாவின் கதை பொறிக்கப்படுவது வழக்கமானதுதான் என்றாலும் அவற்றில் எதுவும் முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

யூதர்களின் முதலாம் நூற்றாண்டுக் கல்லறையில் உயிர்த்தெழுவது பற்றிய குறிப்பும், ஜோனாவின் கதையும் இருப்பதாக யாரும் கூறினால் அது சாத்தியமேயில்லை என்று நான் இதுவரை கூறிவந்தேன் என்று இந்த அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டவரும் வடக்கு கரோலினா பல்கலைக்கழகப் பேராசிரியருமான ஜேம்ஸ் தபோர் கூறியிருக்கிறார்.

## மாதாவின் ....... 3ம் பக்கத் தொடர்

மாதாவின் கழுத்தில் அணிவிக்கப்பட்டிருந்த மாலைகளை கழற்றி வீசி எறிந்தும் உள்ளனர்.

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன், சிறி ரெலோ கட்சியின் செயலாளர் உதயராசா ஆகியோர் இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் உரிய விசாரணைகளை மேற்கொண்டு குற்றமிழைத்தவர்களை நீதியின் முன் நிறுத்தவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மன்னா வாசகர்கள் ... 1ஆம் பக்கத் தொடர்

மன்னா பத்திரிகைப் பணம் காலதாமதமாக எமக்கு வந்துசேர்வதால் நாம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொள்கின்றோம்.

தபால் மூலம் பத்திரிகையைப் பெறும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரரும் உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதிப்பியுங்கள் (உங்கள் முகவரிக்குக் கீழே உங்கள் சந்தாக் காலம் குறிப்பிடப்பட்டுள்ளது). உரிய காலத்தில் சந்தாவை புதிப்பிக்காதவர்களின் பத்திரிகையை எதுவித முன்னறிவித்தலும் இன்றி நிறுத்துவிடுவோம் என்பதை வருத்தத்தோடு தெரிவிக்கின்றோம். எனவே இது விடயத்தில் உங்கள் அன்பான ஒத்துழைப்பை வேண்டிநிற்கின்றோம்.
(மன்னா நிர்வாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திருத்தந்தையின் 23வது வெளிநாட்டுத் திருப்பயணம்
# மெக்சிக்கோ கியூபா நாடுகளில் திருத்தந்தை




## மக்களின் ஆரவார வரவேற்பில் மனமகிழ்ந்த திருத்தந்தை விமானப்படிகளில் இறங்கி வந்தபோதே கைகளை அசைத்து மக்களை வாழ்த்தினார்!

"புற்றுறுதி, நம்பிக்கை, அன்பு ஆகியவற்றின் திருப்பயணியாக வந்துள்ளேன்" என்ற நல்வார்த்தைகளுடன் மெக்சிக்கோ நாட்டுக்கான தனது முதல் திருப்பயணத்தை மார்ச் 24ஆம் திகதி தொடங்கினார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட். ஆல் இத்தாலியா போயிங் 777 என்ற விமானத்தில் அவர் பயணத்தை ஆரம்பித்தார். கொடிகளை முகப்பில் பறக்கவிட்டுக்கொண்டு ஆல் இத்தாலியா விமானம் மெக்சிகோ நாட்டு பன்னாட்டு விமான நிலையத்தின் தரையைத் தொட்டபோது, இவ்விரு நாடுகளின் கொடிகளை ஆட்டிக் கொண்டு மக்கள் செய்த ஆரவாரம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

14 மணிநேரம் விமானப் பயணம் செய்த 85 வயதை வருகிற மாதத்தில் எட்டப்போகும் திருத்தந்தை களைப்பாக இருப்பார் என்ற எதிர்பார்ப்பை விஞ்சுவதாக அவரது செயல்கள் இருந்தன.

"Se Ve, Se siente, el Papa esta presente!" அதாவது "நம்மால் பார்க்க முடிகின்றது. நம்மால் உணர முடிகின்றது, திருத்தந்தை இங்கே இருக்கிறார்" என்ற மக்களின் ஆரவார வரவேற்பில் மனமகிழ்ந்து விமானப்படிகளில் இறங்கி வந்தபோது கைகளை விரித்து வாழ்த்தினார்.

விமானப்படிகளில் காத்திருந்த மெக்சிகோ அரசுத்தலைவர் விலிபோ கோல்ட்றன (Felipe Caldron), அவரது மனைவி திருப்பீடத் தூதர் ஆகியோரை வாழ்த்தினார். மூன்று சிறார் ஒரு சிறுபெட்டியில் கொடுத்ததை மகிழ்வோடு பார்த்து அச்சிறாரின் முகங்களைத் தடவிக் கொடுத்து வாழ்த்தினார். விமான நிலயத்தில் திருத்தந்தைக்கு சிவப்புக்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

## கோமரசன்குளம் கல்வாரி நோக்கிய தவக்கால பாதயாத்திரை

மன்னார் மறைமாவட்டத்தினால் ஒழுங்குபடுத்தப்படும் வருடாந்த தவக்கால பாதயாத்திரையில் இம்முறையும் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். கடந்த மார்ச் மாதம் 14ஆம் திகதி அதிகாலை மன்னார் பேராலயத்தில் இருந்து ஆரம்பித்த இந்த யாத்திரை 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோமரசன்குளம் கல்வாரித்திருத்தலத்தில் நிறைவடைந்தது, அன்று காலை 9.30 மணிக்கு சிலுவைப் பாதைத் தியானமும் மன்னார் ஆயர் தலைமையில் திருப்பலியும் இடம்பெற்றது. இப்பாதயாத்திரைக்கான ஒழுங்குகளை மன்னார் மறைமாவட்ட நிதியாளர் அருட்பணி. எஸ். அன்ரன் அடிகளாரைத் தலைவராகக்கொண்ட குழுவினர் ஒழுங்கமைத்திருந்தனர். கல்வாரித் திருத்தல வழிபாடுகளை கோமரசன்குளம் பங்குத்தந்தை அருட்பணி. சுகுணராஜ் நெறிப்படுத்தியிருந்தார்.



## வாழ்த்திப் பாராட்டுகின்றோம்

2011ஆம் ஆண்டு க. பொ. த. [redacted] பரீட்சையில்
மன்/புனித சவேரியார் ஆண்கள் . பெண்கள் கல்லூரிகளில்
இரு மாணவர் ஒன்பது பாடங்களிலும் A சித்தி



செல்வி
ஞானதாஸ் சுரேஸ்கா,
மன்/ புனித சவேரியார்
பெண்கள் தே.பா.



செல்வன்
ஜெரோம் எமில் றொசிங்ரன்,
மன்/ புனித சவேரியார்
ஆண்கள் தே.பா.

## 1வது பிறந்த நாள் வாழ்த்து




01.04.2012 அன்று அனுஜன் தனது 1வது பிறந்த நாளை தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை பங்குத்தந்தை, அப்பா, அம்மா, சகோதரி, தொட்டப்பா, தொட்டம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மா, பெரியப்பா, சித்தப்பாமார்கள், சித்திமார்கள், மாமாமார்கள், மாமிமார்கள். அனைவரும் இவரை சீரும், சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தி நிற்கிறார்கள்.

தகவல்:-
T. யேசுதாசன், J. சுகாயமேரி
பனிக்கர் புளியங்குளம், ஓமந்தை.

## நீங்காத நினைவு

## 1ம் ஆண்டு நினைவு




### அமரர். திரு. ஜகத்தாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை

புறப்பாங்கண்டல்

இறைபதம் இணைந்து ஓராண்டுகள் உருண்டோடியும் எம் இதய ஓலங்கள் ஓயவில்லை அப்புச்சி! இன்று நீங்கள் எமதருகில் இல்லையே - இருந்தும் எம் நெஞ்சைவிட்டு அகலாத அகல்விளக்காய் எம் நெஞ்சில் இருப்பீர்கள்.

உங்கள் ஆன்ம அமைதிக்காக
என்றும் இறைவனை பிராத்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும் : உம் பாசப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர் திரு. கபிரியேல் - சுவிஸ், திரு. எஸ். அமலன் - லண்டன் அருட்திரு. எமிலியானுஸ்பிள்ளை, அருட்சகோதரி மேரிராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு ... – வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.